Registered as a Newspaper

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 38
கதிர் : 211

ஞாயிற்றுக்கிழமை 25 ஜூன் 2023

ஆனி 10 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



# ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவே!

## தமிழ்க் கட்சிகளைக் கைகோர்க்குமாறு ஐ.தே.க. தவிசாளர் வஜிர அழைப்பு

கொழும்பு, ஜூன் 25

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே பொதுவேட்பாளராகக் களமிறங்கவுள்ளார். எனவே அவருடைய தலைமையின் கீழ் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணையவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரான வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார். »15

## விபத்தில் ஒருவர் நேற்று உயிரிழப்பு

யாழ்., ஜூன் 25
விபத்துக்குள்ளான குடும்பத்தலைவர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று »15



## பெரமுனவின் வேட்பாளர் ரணில் இல்லவேயில்லை!

### மஹிந்த ராஜபக்ச திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 25
பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்கவுள்ளார் என்று வெளியான கருத்துக்களைத் »02

யாழ். பல்கலையில்

## சிங்கள இன மாணவர்கள் திட்டமிட்டு உள்நுழைப்பு!

உரிமைக்குரலை நசுக்குவதற்கு பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் துணைபோகவேண்டாம்

மாணவர் ஒன்றியம் கடிதம்

விரிவு:- பக்.15

## மருதமடு அன்னைக்கு நேற்றுமுன்தினம் கொடி

மன்னார், ஜூன் 25
மன்னார் – மருதமடு அன்னையின் ஆடி மாதப் பெருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.
மன்னார் மாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் இந்தக் கொடியேற்றம் இடம்பெற்றது. »15

## யாழ். பல்கலைக்கழகத்தில் 55 வீதமே தமிழ் மாணவர்!

சிங்கள மாணவர்கள் 32 வீதம்
முஸ்லிம் மாணவர்கள் 13 வீதம்

யாழ்ப்பாணம், ஜூன் 25
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 6 ஆயிரத்து 91 தமிழ் மாணவர்களும், 3 ஆயிரத்து 551 சிங்கள மாணவர்களும், ஆயிரத்து 431 »15

## மின்சாரம் தாக்கி பெண் உயிரிழப்பு

யாழ்., ஜூன் 25
பெரியவிளான் பகுதியில் வயோதிபப் பெண்ணொருவர் மின்சாரம் தாக்கி நேற்று உயிரிழந்துள்ளார் என்று இளவாலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.
பெரியவிளான், »15

## வல்லையில் மீட்டது போதைநபரின் சடலமா?

யாழ்ப்பாணம், ஜூன் 25
வல்லைப் பகுதியில் அண்மையில் உருக்குலைந்த சடலமொன்று மீட்கப்பட்ட நிலையில், அந்தச் சடலம் ஊசி மூலம் போதைப் பொருளை ஏற்றிய இளைஞர் ஒருவருடையதாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். »16

## ஆசிரியரின் வீட்டில் பணம், நகை திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 25
குப்பிழானில் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் தாலிக்கொடி உள்ளிட்ட 18 பவுண் நகைகளும், 40 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளது என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.
நேற்று அதிகாலை இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.
ஜன்னல் வழியாக சமையல »02

# ரஷ்யாவில் வெடித்தது உள்நாட்டுக் கலவரம்!

## மொஸ்கோவை நெருங்கும் கூலிப்படை
## உக்ரைன் போரில் எதிர்பாராத திருப்பம்
## 'பெரும் அடி' என்று புடின் ஒப்புதல்

மொஸ்கோ, ஜூன் 25
ரஷ்யாவில் உள்நாட்டுப்போர் வெடித்துள்ள நிலையில், தலைநகர் மொஸ்கோவைக் கைப்பற்றுவதற்கு 'வாக்நெர்' என்று அறியப்படும் கூலிப்படை விரைவாக முன்னேறிக்கொண்டிருக்கின்றது.
ரஷ்யாவின் துணை இராணுவக் குழுக்களாகக் கூலிப்படைகள் உள்ளன. இவை ரஷ்ய இராணுவத்துடன் »15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
ரூ.120,000/=
• அதிகபட்ச இரகசியதன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
செலான்

# சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரணிலிடம் கூலிக்காக மாரடிக்கும் சில தமிழ் அரசியல்வாதிகள்

## இவர்களால் ஒட்டுமொத்த இனத்துக்கும் பாதிப்பு என்கிறார் ஈ.சரவணபவன்



**யாழ்ப்பாணம், ஜூன் 25**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கூலிக்கு மாரடிக்கும் சில தமிழ் அரசியல்வாதிகளால் ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கூலிக்கு மாரடிக்கும் கும்பல் ரணிலுடன் நிற்பதால் ஒட்டு மொத்தத் தமிழினம் அவர் பின்னால் நிற்பது போன்ற தோற்றப்பாடு சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்தப்படுகின்றது - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.**

வட்டுக்கோட்டையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் லண்டனில் பொய்யுரைத்திருக்கின்றார் என்பது எல்லோருக்கும் தெரியும். காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் எப்படி இயங்குகின்றது என்பது காணாமல் ஆக்கப்பட்டோரைத்தேடும் உறவுகளைக்கேட்டால் தெரியும். காணி விவகாரத்துக்கு தீர்வு காணப்பட்டதாக அப்பட்டமாக பொய்யைச் சொல்லியிருக்கின்றார். தொல்பொருள் திணைக்களம் முழுநேர வேலையாக தமிழர் பகுதிகளில் காணிகளை சுவீகரிக்கின்றது. களநிலைமை இப்படியிருக்கையில் லண்டனில் காணிப் பிரச்சினைக் குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகச் சொல்லி ஏமாற்றியிருக்கின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்துப் பணியாற்றுகின்றார் என்பது அப்பட்டமாகவே தெரிகின்றது. அதற்காகவே இந்தப் புனைவுகள் எல்லாம். நாடு கெட்டு குட்டிச்சுவரானாலும் பரவாயில்லை. தமிழினத்துக்குத் தீர்வு வழங்கக்கூடாது, அவர்களைத் தேசிய இனமாக அங்கீகரிக்கக் கூடாது என்பதில் சிங்கள அரசாங்கங்கள் அரசியல்வாதிகள் உறுதியாக இருக்கின்றார்கள்.

13 ஆவது திருத்தத்தை வைத்து சிங்கள ஆட்சியாளர்கள் இந்தியாவை எவ்வளவு தூரம் ஏமாற்றி வருகின்றார்கள். இந்தா செய்கின்றோம், அந்தா செய்கின்றோம் என்று ஒரு பிராந்திய வல்லரசையே ஏய்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் எங்களை எவ்வளவு தூரம் ஏமாற்றுவார்கள்? இந்தியா வெட்கித் தலைகுனியவேண்டும்.

சீனா இலங்கைக்காக முட்டுக் கொடுக்கின்றது. அதற்கு கைமாறாக இந்த நாட்டில் தமிழர்கள் கோரும் அதிகாரப் பகிர்வை தரமுடியாதவர்கள். சீனாவுக்கு கொழும்பு துறைமுக நகரத்தில் சுயாதீன செயற்பாட்டுக்கு அதிகாரமளித்திருக்கின்றார்கள் - என்றார். (ஒ-125)



வட்டுக்கோட்டை பிரதேசமட்ட சிறுவர் கழகங்களுக்கிடையில் சிறுவர்களுக்கான நாடகமும் அரங்கியலும் பயிற்சிப் பட்டறை நேற்றுச் சனிக்கிழமை வட்டுக்கோட்டை சரவணபவன் அறக்கட்டளை அலுவலகத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் பங்கேற்று சிறுவர் கழகத்தினருடன் கலந்துரையாடினார். (ச-125)

# இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஐ.நா. முழுமையான ஒத்துழைப்பு!

## பொதுச்செயலர் அன்ரனி குட்டரஸ் உறுதியளிப்பு

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் கடன் முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனி குட்டரஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கையின் புதிய பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளின் முன்னேற்றம், பொருளாதார மீட்சிக்கான செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் நாயகத்திடம் தெளிவுபடுத்தினார். நிலையான பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் போதும் நீண்ட கால பொருளாதார வேலைத்திட்டங்களை முன்னெடுகின்றபோதும் வலுவான நிதிக் கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் அர்ப்பணிப்புடனான முயற்சிகள் பற்றியும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

நிலையான அபிவிருத்து இலக்குகளை மேம்படுத்தும் அதேநேரம் காலநிலையினால் ஏற்படக்கூடிய மோசமான பாதிப்புக்களை மட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படவுள்ள நீடிக்கப்பட்ட உபாயமார்க்க திட்டங்களை எடுத்துக்காட்டி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பரிந்துரைக்கமைய முன்னெடுக்கப்படும் 'கால நிலை சுபீட்சத்துக்கான திட்டமிடல்' தொடர்பிலும் செயலாளர் நாயகத்துக்கு விளக்கமளித்தார்.

பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள், கடன் மறுசீரமைப்பு மற்றும் காலநிலை இடர்களுக்கு முகம் கொடுத்தல் உள்ளிட்ட விடயங்களின்போது இலங்கை மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கு இடையிலான ஒத்துழைப்புகளை பலப்படுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது - என்றுள்ளது. (ம)

# எஸ்.ரி.எவ். துப்பாக்கிச் சூட்டில் கொலைச் சந்தேகநபர் சாவு

கொழும்பு, ஜூன் 25

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 22 வயதுடைய கொலைச் சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் எம்பிலிப்பிட்டிய, பனாமுர, வெலிக்கடையாய பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்த நபர், பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் நேரடித் தொடர்புடையவர் என்ற அடிப்படையில் அவரைக் கைது செய்வதற்காக நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, இந்த நபர் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சந்தேகநபர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் முன்னாள் இராணுவச் சிப்பாய் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மினுவாங்கொடை பெஸ்டியன் மாவத்தை பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் அம்பலாங்கொடையில் பிரதி அதிபர் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் உள்ளிட்ட பல துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்களுடன் நேரடித் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-22)

### ஆசிரியரின்...

றைக் கதவைத் திறந்து உள்நுழைந்த திருடர்கள், வீட்டை சல்லடையிட்டுத் தேடி 18 பவுண் நகைகள், 40 ஆயிரம் ரூபா பணம், ஏ.ரி.எம். அட்டை உள்ளிட்ட பெறுமதியான பொருள்களை திருடிச் சென்றுள்ளனர். அதிகாலை 2.30 மணியளவில் ஏதோ சத்தம் கேட்கின்றது என்று வீட்டார் எழுந்து பார்த்தபோது கதவுகள் திறக்கப்பட்டு நகைகள், பணம் என்பன திருடப்பட்டமை தெரியவந்தது. இதையடுத்து இது தொடர்பில் அதிகாலை 5 மணியளவில் சுன்னாகம் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

வங்கியொன்றின் பாதுகாப்புப் பெட்டகத்துக்குள் வைக்கப்பட்டிருந்த நிலையில், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக மீள எடுக்கப்பட்ட தங்கநகைகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளன என்று முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ம.66)


### பெரமுனவின்...

திட்டவட்டமாக மறுத்துள்ளார் பெரமுனவின் தலைவரான மஹிந்த ராஜபக்ச.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இன்னமும் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவில்லை. தேர்தல் அறிவிப்பு வெளிவராத நிலையில் அது தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவது பயனற்றது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பெரமுனவின் நிலைப்பாடாக சிலர் வெளியில் தெரிவிக்கும் கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பெரமுனவின் பொதுவேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்கவுள்ளார் என்று அமைச்சர்கள் சிலர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் பெரமுனவின் நிலைப்பாடு அல்ல. பெரமுனவின் தலைவரான என்னால் வெளியிடப்படாத கருத்துக்களைக் கட்சியின் கருத்து என்றோ அல்லது எனது கருத்து என்றோ எவரும் கொள்ளவேண்டாம் - என்றார். (அ-ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பணத்தை வைப்பிலிட்டு

வட்டியைப் பெற்றிடுங்கள்!

சம்பத்

களிங் Cash

நாளைய வட்டி இன்றே கையில்

வெவ்வேறு வைப்புக்களில் பணத்தை வைப்பிலிட்டு, வட்டி கிடைக்கும் வரை காத்திருக்காமல், இப்பொழுது **சம்பத் வங்கியின் களிங் Cash** இல் பணத்தை வைப்பிலிடும் அனைவரும் பணத்தை வைப்பிலிட்டதுமே கையில் வட்டியைப் பெற்றிடுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சம்பத் வங்கிக் கிளையை நாடுங்கள்.

1332 www.sampath.lk Sampath Bank Fitch Ratings 'A(lka)'/RWN *நிபந்தனைகள் உண்டு.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank PLC- Company PQ 144 Sampath Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.




உங்கள் இல்லமே உங்கள் சரணாலயம். இதுவே உங்கள் அருங்காட்சியகம் அமையப்பெறும் இடம், முடிவில்லா கற்பனைகளின் பிம்பமாக, அதன் அழகிய வடிவங்களை புதிதாய் தோற்றுவித்து, நீங்கள் உங்களை பிரதிபலிக்கும் விதத்தை மீள்வடிவமைக்கின்றது. Rocell டைல்ஸ், குளியலறை சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் நேர்த்தியான தொகுப்பானது அதன் ஈர்த்தெடுக்கும் நிறம், அமைப்பு, வடிவம் மற்றும் வனப்பு என்பனவற்றின் கொண்டாட்டங்களினூடாக, உங்கள் இல்லத்தை எழில்மிகு அழகின் உறைவிடமாக மாற்றுகின்றது.

அழையுங்கள் 076 6 22 33 44

Rocell

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் பற்றாக்குறையால் தவிக்கும் சாந்தபுரம் கலைமகள்

## கல்விச் சமூகமும், பெற்றோரும் கவலை

கிளிநொச்சி, ஜூன் 25

**கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் தொடர்ச்சியாக 9 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. ஆசிரிய நியமனங்களின்போது இந்தப் பாடசாலை புறக்கணிக்கப்படுகின்றது.**



- இவ்வாறு பாடசாலைக் கல்விச் சமூகமும், பெற்றோரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

பின் தங்கிய கிராமங்களில் ஒன்றான சாந்தபுரம் கிராமத்தில் தரம் - 11 வரை வகுப்புகள் உள்ளன. அங்கு நீண்ட காலமாக 9 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுகின்றது. புதிதாக மாவட்டத்தில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுகின்றபோதும், இந்தப் பாடசாலை தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்படுகின்றது.

தகவல் தொழில்நுட்பப் பாடத்துக்கு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக 20 புதிய கணினிகள் கொண்டுள்ள கணினி வகுப்பறை பயன்பாடின்றி உள்ளது. அத்துடன் கணிதம், வரலாறு. உள்ளிட்ட முக்கியமான பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

தற்போது கல்வியியற் கல்லூரியில் இருந்து ஆசிரிய நியமனம் பெற்று நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் வந்துள்ளபோதும் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்துக்கு அவர்களில் எவரும் நியமிக்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, கல்வியியற் கல்லூரியிலிருந்து 50 ஆசிரியர்கள் வலயத்துக்கு அனுப்பப்பட்டபோதும் அதில் அரைவாசிப்பேரே கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். ஏனையோர் கடமைக்கு சமூகமளிக்கும்போது, இந்தப் பாடசாலைக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் - என்றார். (எ-214)

# குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

கம்பஹா, திவுலப்பிட்டிய பிரதேசத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது. அந்தப் பிரதேசத்தில் மசாஜ் நிலையமொன்றை நடத்தி வருபவரே வீட்டு வாசலில் வைத்துக் கைத்துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார். ஒரு பிள்ளையின் தந்தையான 28 வயதுடைய எஸ்.சஞ்சீவ என்ற நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே அவரைச் சுட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர் என்று சம்ப வம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வரும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-22)

# மோ.சைக்கிள் விபத்தில் இளைஞன் உயிரிழப்பு!

மட்டக்களப்பில் மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் மட்டக்களப்பு - ஆனைகட்டியவெளி பகுதியில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை நடந்துள்ளது. விபத்தில் 19 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்தவர் மட்டக்களப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பில் வெல்லாவெளி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-ரி2,22)



# பன்றி நெல் களைத்தாக்கம் விவசாயிகளுக்கு விளக்கம்!

யாழ்ப்பாணம், ஜூன் 25

நெற்செய்கையில் தாக்கத்தை விளைவிக்கும் பன்றி நெல் எனும் களையின் தாக்கம் தொடர்பாக விவசாயிகளுக்கு தெளிவூட்டும் கலந்துரையாடல் ஒன்று அளவெட்டி பினாக்கையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது இந்த நிகழ்வில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறிரங்கன் மற்றும் விவசாயப் போதனாசிரியர்கள், அளவெட்டி பகுதியைச் சேர்ந்த நெற் செய்கையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். பன்றி நெல் களையால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக பினாக்கை வயல் வெளிப்பகுதியில் விவசாயிகளுக்கு விளக்கச் செயற்பாடுகள் நடைபெற்றன. (எ-20)

# கரம்பகத்தில் வெடிபொருள் மீட்பு!



கொடிகாமம் - கரம்பகம் பகுதியிலுள்ள காணியொன்றிலிருந்து வெடிபொருள்கள் அடங்கிய பொதியொன்று கடந்த வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த காணியில் சந்தேகத்துக்கிடமான முறையில் பொருள்கள் இருப்பதனை அவதானித்த பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கமைய வெடிபொருள்கள் அடங்கிய பொதியை பொலிஸார் மீட்டனர்.

பொதியில் கைக்குண்டுகள் உட்பட்ட வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டன. இது குறித்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி2,125)

# குருந்தூர்மலைப்பகுதியில் முழுவீச்சில் கட்டுமானங்கள்

## நீதிமன்ற உத்தரவை கருத்தில்கொள்ளாது நடைபெறுகின்றதெனக் குற்றச்சாட்டு

குருந்தூர்மலையில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளக்கூடாதென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டபோதும் கட்டுமானப்பணிகள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. அத்துமீறிய இந்த நடவடிக்கை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலையில் கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிட்டதன் பின் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குருந்தூர்மலையில் கட்டுமானப் பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாதென முல்லைத்தீவு நீதிமன்றம் கடந்த ஆண்டு கட்டளை பிறப்பித்திருந்தது. ஆயினும் நீதமன்றக் கட்டளை மீறப்பட்டு கட்டுமானப்பணிகள் இடம்பெறுகின்றமை தொடர்பில் ஒளிப்பட ஆதாரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு முறையீடும் செய்யப்பட்டது. இந்த நிலையில் தற்போதும் இங்கு கட்டுமானப்பணிகள் தொடர்ந்தும் இடம்பெறுவதை எம்மால் அவதானிக்கமுடிகிறது. விகாரையின் உச்சிப் பகுதியில் பலகைகள் பொருத்தப்பட்டு சிமெந்துக் கலவைகள் இடப்பட்டதற்கான அடையாளங்கள் காணப்படுகிறன. அத்துடன் விகாரையின் அருகே புதிதாக கல்வெட்டு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அத்துமீறி அமைக்கப்பட்ட பௌத்தவிகாரைக்கு போலியான வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன. இவர்களின் இத்தகைய அத்துமீறிய நடவடிக்கைகளை மிக வன்மையாக கண்டிக்கின்றோம் - என்றார். (ச-246)



பற்றிகோட்டா செமினரி மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் கல்விப் பணிகளின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதித்தானமுகாம் கல்லூரியின் ஒட்லி மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் 200 பேர் இரத்த தானம் செய்வதற்கான ஏற்பாடுகள் யாழ். போதனா மருத்துவமனையின் குருதி வங்கியுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ய-125)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## குற்றங்களும் குடாநாடும்

''கிராம அலுவலர்கள் குற்றங்களை அறிக்கையிடுபவர்களாக மட்டும் இருக்கக்கூடாது. தமது ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் குற்றச்செயல்களை இனங்கண்டு அவற்றைத் தடுப்பது தொடர்பிலும் தம்மாலான அத்தனை நடவடிக்கைகளையும் கிராம அலுவலர்கள் மேற்கொள்ளவேண்டும்'' என்றவாறாக அறிவுறுத்தியுள்ளார் யாழ்ப்பாணம் மாவட்டச்செயலர் அ.சிவபாலசுந்தரன். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க கிராம அலுவலர் பிரிவுகளில் தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் சில குற்றச்செயல்கள் இடம்பெற்றுவரும் நிலையில், அந்தப் பகுதி கிராம அலுவலர்களின் செயற்பாட்டுத்திறன் தொடர்பில் பல்வேறு கேள்விகள் அண்மைக்காலமாக எழுப்பப்பட்டிருந்த நிலையில், மக்களின் மனோநிலையை – அபிப்பிராயத்தை – காலக்கண்ணாடியாகப் பதிவுசெய்திருக்கின்றார் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர்.

குடாநாட்டில் சட்டவிரோத மணல் அகழ்வுகளும் மணல் கடத்தல்களும் ஒருகுறிப்பிட்ட கிராம அலுவலர் பிரிவுகளிலேயே மீண்டும்மீண்டும் இடம்பெற்று வருகின்றன. அத்துடன், சில கிராம அலுவலர் பிரிவுகள் கசிப்புக் கோட்டைகளாக மாறியுள்ளன. தீவகத்திலுள்ள சில கிராம அலுவலர் பிரிவுகளில்தான் மாடுகளும் ஆடுகளும் தொடர்ச்சியாக இறைச்சியாக்கப்பட்டு வருகின்றன. இந்தக் குற்றச்செயல்களைத் தடுக்கவேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் பொலிஸாருக்கு எவ்வளவுக்கெவ்வளவு இருக்கின்றதோ அதேயளவு பொறுப்பும் கடமையும் அந்தந்தப் பகுதி கிராம அலுவலர்களுக்கும் இருக்கின்றது. குற்றத்தைத் தடுப்பதற்காக, ஒரு பொதுப்பொறிமுறை ஊடான இயங்குதளத்தில் கிராம அலுவலர்களும் பொலிஸாரும் செயற்படவேண்டும். அந்தச் செயற்பாட்டுத்தளம் நேர்த்தியாகவும் வினைத்திறனாகவும் இருந்தால் குற்றங்கள் குறையும். எனவே, மாவட்டச் செயலருடைய கருத்தின் ஆழத்தை ஒவ்வொரு கிராம அலுவலரும் சிரத்தையில் ஏற்றுகின்ற பட்சத்தில் எத்தனையோ குற்றங்கள் குறையும். பல குடும்பங்களின் வாழ்வாதாரம்கூடப் பாதுகாக்கப்படும்.


ஆனால், குடாநாட்டில் தீவிரமாகியுள்ள சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கும், குற்றச்செயல்களுக்கும் கிராம அலுவலர்களின் வினைத்திறனற்ற நடவடிக்கையே காரணம் என்று – கிராம அலுவலர்களைப் பலிக்கடாவாக்கிவிட்டு – நகர்ந்துவிடவும் முடியாது. ஏனெனில், எத்தனையோ கிராம அலுவலர்கள் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தீவிரமாகச் செயற்பட்டாலும் அவர்களுக்கான ஆதரவுத்தளம் பொலிஸாரிடம் இருந்து கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் கடந்த காலங்களில் பல்வேறுபட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினால் அந்தத் தகவல்கள் எவரால் வழங்கப்பட்டன என்ற விடயம் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கே வழங்கப்படுகின்றது என்ற தகவல்களும் இந்த ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தன.

பொலிஸாருக்கு வழங்கப்படும் தகவல்களும், முறைப்பாடுகளும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்குச் சென்றடைகின்றது என்றால், எவ்வாறு கிராம அலுவலர்கள் பொலிஸாருடன் இணைந்து செயற்பட முன்வருவார்கள்? என்ற கேள்வியும் இங்கே எழுவது தவிர்க்க முடியாததாகின்றது. குடாநாட்டில் பல கிராம அலுவலர்கள் பெண்களாக உள்ள நிலையில், அவர்கள் தங்களின் பாதுகாப்புத் தொடர்பாகவும் சிந்திக்கவே செய்வார்கள், அதுவே யதார்த்தம். எனவே, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர், இந்த விடயத்தின் மறுபக்கம் தொடர்பிலும் பரிசீலனைகளை மேற்கொண்டு, பொலிஸாரையும் உள்ளடக்கி, கிராம அலுவலர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி மிகச் சிறந்த பொறிமுறை ஒன்றை உருவாக்கினால் நிச்சயம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த முடியும். குடாநாட்டுக்கு முழுவதுமாக அல்லாவிட்டாலும் குற்றச்செயல்கள் மீண்டும் மீண்டும் இடம்பெறும் பகுதிகளை அடையாளப்படுத்தி, அங்காவது இவ்வாறான பொறிமுறைகளை வகுக்கும் பட்சத்தில் அது, குற்றத்தடுப்புகளுக்கான ஆகச்சிறந்த நடவடிக்கையாகவே அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

### நாளொரு நல்வார்த்தை

"ஓங்கி அடிப்பது எளிய செயல். ஆனால்... அடிக்காமல் அமைதி காப்பதும், அடங்கி இருப்பதும் மிகக் கடினமானது"

– விவேகானந்தர்



## இந்தியாவின் கரிசனையை கருத்தில் கொள்ளும் இலங்கை

### அலி சப்ரி தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 25**

**இலங்கை இந்தியாவின் நியாயபூர்வமான பாதுகாப்புக் கரிசனைகளை கருத்தில் கொள்ளும். ஆனால் ஒரு நாட்டுடன் மாத்திரம் சேர்ந்து செயற்படாது.**

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை தனது நாட்டுக்கும் மக்களுக்கும் எது மிகச் சிறந்ததோ அதையே செய்யும். இலங்கையின் கேந்திர அமைவிடம் சர்வதேச வல்லரசுகளுடனான அதன் நெருங்கிய உறவுகள் பல வாய்ப்புகளை வழங்குகின்றன. அனைவரும் இலங்கை மீது செல்வாக்குச் செலுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்கள். ஆனால் நாங்கள் இந்தப் பாதையில் மிகவும் அவதானமாகப் பயணித்து இந்துசமுத்திரம் எப்போதும் அமைதிப்பிராந்தியமாக விளங்கும் நிலையை ஏற்படுத்தவேண்டும். அனைவருக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தவேண்டும்.

இந்தியா இலங்கையின் மிகப்பெரிய அயல்நாடு என்பதை இலங்கை எப்போதும் மனதில் வைத்திருக்கும். இந்தியா வெளிப்படுத்தும் எந்த நியாயபூர்வமான பாதுகாப்பு கரிசனைகளையும் இலங்கை கருத்தில்கொள்ளும் - என்றார். (எ-இ)

## இரத்மலானை வரையில் இந்திய விமானசேவை

### யோசனை முன்வைப்பு

யாழ்ப்பாணத்துக்கான தற்போதைய விமான சேவையை இரத்மலானை விமானநிலையம் வரை நீடிக்கும் யோசனை இந்தியாவால் முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையில் இடம்பெற்ற பொருளாதார ஒத்துழைப்புக்கான செயற்றிட்டங்கள் தொடர்பாக இருதரப்பு கலந்துரையாடலிலேயே இந்த விடயம் முன்மொழியப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தகவலை இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது, இந்தியாவின் பொதுத்துறை மற்றும் தனியார் விமான நிறுவனங்களும் இலங்கையில் உள்ள இடங்களுக்கு விமானங்களை இயக்கத் தயாராக உள்ளன என்று இந்தியத் தூதுவர் கூறியுள்ளார். இந்தக் கலந்துரையாடலில் தனியார் மயமாக்கல், மாற்று எரிசக்தி மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் அதிகமான இந்திய முதலீடுகளை இலங்கைப் பிரதமர் வலியுறுத்தியுள்ளார். (எ-இ)



## மீன் விலையில் மாற்றமில்லை

கொழும்பு. ஜூன் 25

மண்ணெண்ணெய் விலை குறைக்கப்பட்டபோதிலும் மீன்களின் விலையில் மாற்றம் செய்ய முடியாது எனக் கடற்றொழிலாளர்சங்கங்கள் தெரிவித்துள்ளன. இந்த மாதத்தின் முதலாம் திகதியிலிருந்து வீட்டுத் தேவைக்கான மண்ணெண்ணெய் விலை 50 ரூபாவாலும் தொழில் துறைக்கான மண்ணெண்ணெய் 134 ரூபாவாலும் குறைக்கப்பட்டது. ஆயினும் இந்த மண்ணெண்ணெய் விலைத் திருத்தத்துக்கு அமைய, மீன்களின் விலையைக் குறைக்க முடியாது என கடற்றொழிலாளர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

(ச-இ)

### நாளை

26.06.2023

திங்கட்கிழமை

ஆனி 11

சுபநேரம் : 11.55 - 01.25

ராகுகாலம் : 07.25 - 08.55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை

# வீதிகளுக்குப் பெயர் சூட்டுதல்

பின்வரும் வீதிகளை வர்த்தமானியில் பிரசுரித்து மாநகர சபைக்குரிய வீதிகளாக பதிவுசெய்யவுள்ளதால் இதற்கு பொதுமக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்துக்களை / அபிப்பிராயங்களை எதிர்வரும் **2023.07.10** ஆம் திகதிக்கு முன்னர் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வீதிகளின் இட அமைப்புகள் பற்றிய சந்தேகங்களை மாநகரசபையில் அறிந்துகொள்ளமுடியும்.

| தொ. இல | குறியீட்டு இலக்கம் | வீதியின் பெயர் | தொடக்கம் | முடிவு | வீதிக் கோட்டு நீளம் (அடி) | வீதியின் நீளம் (கி.மீ) | சராசரி அகலம் - மீற்றர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 512 | ஆத்திசூடி வீதி உப ஒழுங்கை | ஆத்திசூடி வீதி | பலாலி வீதி 5ம் ஒழுங்கை | 15 | 0.205 | 2.4 |
| 2 | 335 | அரசடி வீதி இணைப்பு வீதி | அரசடி வீதி | ஆள்காட்டிவளவு ஒழுங்கை | 15 | 0.218 | 2.7 |
| 3 | 334 | புறூடி முன் ஒழுங்கை | கண்டி வீதி | கச்சேரி கிழக்கு ஒழுங்கை | 20 | 0.148 | 3.3 |
| 4 | 1037 | பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கை உப ஒழுங்கை | பிறவுண் வீதி 1ம் ஒழுங்கை | முடிவு | 10 | 0.17 | 2.7 |
| 5 | 1038 | பிறவுண் வீதி இரண்டாம் (A) ஒழுங்கை | பிறவுண் வீதி | முடிவு | 10 | 0.103 | 3 |
| 6 | 1039 | பிறவுண் வீதி உப ஒழுங்கை | பிறவுண் வீதி | முடிவு | 10 | 0.208 | 3 |
| 7 | 829 | இடுகாட்டு வீதி | கெனடி வீதி | முடிவு | 10 | 0.122 | 3 |
| 8 | 1040 | செட்டித்தெரு 1ம் உப ஒழுங்கை | செட்டித் தெரு | முடிவு | 15 | 0.309 | 2.9 |
| 9 | 1041 | செட்டித்தெரு 2ம் உப ஒழுங்கை | செட்டித் தெரு | முடிவு | 10 | 0.146 | 3.1 |
| 10 | 1042 | செட்டித்தெரு 3ம் உப ஒழுங்கை | செட்டித் தெரு | முடிவு | 10 | 0.13 | 2.8 |
| 11 | 1043 | செட்டித்தெரு 4ம் உப ஒழுங்கை | செட்டித் தெரு | முடிவு | 10 | 0.041 | 1.8 |
| 12 | 1044 | செட்டித்தெரு 5ம் உப ஒழுங்கை | செட்டித் தெரு | முடிவு | 10 | 0.121 | 2.6 |
| 13 | 1045 | செட்டித்தெரு 6ம் உப ஒழுங்கை | செட்டித் தெரு | முடிவு | 15 | 0.231 | 3.1 |
| 14 | 830 | தேவாலய ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.05 | 3 |
| 15 | 292 | கொழும்புத்துறை 1ம் 3ம் இணைப்பு வீதி | கொழும்புத்துறை வீதி 1ம் குறுக்கு | கொழும்புத்துறை 3ம் குறுக்கு | 15 | 0.21 | 2.7 |
| 16 | 293 | கொழும்புத்துறை 1ம் 4ம் இணைப்பு வீதி | கொழும்புத்துறை வீதி 1ம் குறுக்கு | கொழும்புத்துறை 4ம் குறுக்கு | 15 | 0.254 | 2.4 |
| 17 | 294 | கொழும்புத்துறை 3ம் 4ம் இணைப்பு வீதி | கொழும்புத்துறை வீதி 3ம் குறுக்கு | கொழும்புத்துறை 4ம் குறுக்கு | 15 | 0.075 | 2.4 |
| 18 | 336 | Dr. கணேசரட்ணம் வீதி | ஆனந்தன் வடலி வீதி | இலந்தைக்குளம் வீதி | 20 | 0.369 | 3.3 |
| 19 | 179 | ஈச்சமோட்டை வீதி-விதானையார் வீதி இணைப்பு வீதி | ஈச்சமோட்டை வீதி | விதானையார் வீதி | 15 | 0.195 | 2.6 |
| 20 | 176 | எழிலூர் 2ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 15 | 0.163 | 2.4 |
| 21 | 177 | எழிலூர் 3ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 15 | 0.196 | 2.7 |
| 22 | 513 | இந்து மகளிர் 1ம் உப ஒழுங்கை | பலாலி வீதி 5ம் ஒழுங்கை | முடிவு | 10 | 0.127 | 2.7 |
| 23 | 514 | இந்து மகளிர் 2ம் உப ஒழுங்கை | பலாலி வீதி 5ம் ஒழுங்கை | முடிவு | 10 | 0.066 | 2 |
| 24 | 9 | ஆஸ்பத்திரி வீதி | காரைநகர் வீதி | கண்டி வீதி | 50 | 3.07 | 6 |
| 25 | 940 | ஆஸ்பத்திரி வீதி உப ஒழுங்கை | ஆஸ்பத்திரி வீதி | முடிவு | 10 | 0.165 | 2.5 |
| 26 | 295 | இலந்தைக்குளம் பிள்ளையார் ஒழுங்கை | இலந்தைக்குளம் வீதி | விதானையார் வீதி | 20 | 0.097 | 3 |
| 27 | 331 | ஆத்திக்காடு வடக்கு ஒழுங்கை | சின்னாலங்கண்டு ஒழுங்கை | கேணியடி ஒழுங்கை | 20 | 0.52 | 3 |
| 28 | 813 | கலிபா அப்துல் காதர் வீதி | காரைநகர் வீதி | பொன்னாலை வீதி | 20 | 0.8 | 5 |
| 29 | 664 | கஸ்தூரிப்பிள்ளை ஒழுங்கை | காங்கேசன்துறை வீதி | கஸ்தூரியார் வீதி | 15 | 0.15 | 2.7 |
| 30 | 938 | கஸ்தூரியார் வீதி உப ஒழுங்கை | கஸ்தூரியார் வீதி | முடிவு | 13 | 0.11 | 3 |
| 31 | 831 | கெனடி ஒழுங்கை | புனித மரியாள் வீதி | முடிவு | 10 | 0.222 | 2.5 |
| 32 | 665 | கே.கே.எஸ் வீதி உப ஒழுங்கை | காங்கேசன்துறை வீதி | சீனியர் ஒழுங்கை | 15 | 0.15 | 2.7 |
| 33 | 666 | குமாரசாமி வீதி உப ஒழுங்கை | குமாரசாமி வீதி | முடிவு | 15 | 0.092 | 3 |
| 34 | 178 | எழிலூர் 4ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.112 | 2.4 |
| 35 | 296 | மாட்டின் உப ஒழுங்கை | மாட்டின் வீதி | முடிவு | 10 | 0.12 | 2.5 |
| 36 | 1046 | மருதடி வீதி 1ம் உப ஒழுங்கை | மருதடி வீதி | முடிவு | 10 | 0.13 | 2.1 |
| 37 | 1047 | மருதடி வீதி 2ம் உப ஒழுங்கை | மருதடி வீதி | முடிவு | 10 | 0.127 | 2.1 |
| 38 | 832 | முத்தமிழ் வீதி 4ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 10 | 0.117 | 2.2 |
| 39 | 833 | முத்தமிழ் வீதி 5ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 10 | 0.116 | 2.2 |
| 40 | 834 | முத்தமிழ் வீதி 6ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 10 | 0.217 | 2.2 |
| 41 | 835 | முத்தமிழ் வீதி 7ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.262 | 2.1 |
| 42 | 180 | மகேந்திரபுரம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 15 | 0.156 | 2.4 |
| 43 | 297 | நாகராஜா வீதி | புங்கங்குளம் வீதி | கொழும்புத்துறை வீதி | 15 | 0.367 | 2.2 |
| 44 | 1048 | நல்லூர் குறுக்கு உப ஒழுங்கை | நல்லூர் குறுக்குத் தெரு | முடிவு | 13 | 0.103 | 2.8 |
| 45 | 10 | நாவலர் வீதி | பொன்னாலை வீதி | கண்டி வீதி | 33 | 4.2 | 4.7 |
| 46 | 837 | நித்தியஒளி வீட்டுத்திட்ட வீதி | காரைநகர் வீதி | முடிவு | 10 | 0.285 | 3 |
| 47 | 121 | ஓடக்கரை ஒழுங்கை | அடப்பன் வீதி 1ம் ஒழுங்கை | ஓடக்கரை வீதி | 15 | 0.428 | 2.4 |
| 48 | 667 | பழம் வீதி இணைப்பு வீதி | பலாலி வீதி | பழம் வீதி | 10 | 0.108 | 2.4 |
| 49 | 182 | துண்டி 1ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.042 | 2.1 |
| 50 | 183 | துண்டி 2ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.096 | 2.7 |
| 51 | 184 | துண்டி 3ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.124 | 2.4 |
| 52 | 429 | பருத்தித்துறை வீதி 5ம் ஒழுங்கை | பருத்தித்துறை வீதி | முடிவு | 12 | 0.08 | 3.4 |
| 53 | 936 | றக்கா வீதி உப ஒழுங்கை | றக்கா வீதி | முடிவு | 10 | 0.109 | 2.1 |
| 54 | 298 | சந்தனமாதா கோவில் உப ஒழுங்கை | கொழும்புத்துறை வீதி | முடிவு | 15 | 0.341 | 2.4 |
| 55 | 668 | சீனியர் ஒழுங்கை 1ம் உப ஒழுங்கை | சீனியர் ஒழுங்கை | முடிவு | 10 | 0.118 | 2.4 |
| 56 | 669 | சீனியர் ஒழுங்கை 2ம் உப ஒழுங்கை | சீனியர் ஒழுங்கை | முடிவு | 20 | 0.286 | 3 |
| 57 | 328 | சின்னாலங்கண்டு ஒழுங்கை | கண்டி வீதி. | குகன் வீதி | 20 | 0.2 | 3 |
| 58 | 670 | சிவன் உப ஒழுங்கை | சிவன் வீதி | முடிவு | 10 | 0.126 | 3.3 |
| 59 | 671 | சிவப்பிரகாசம் வீதி உப ஒழுங்கை | சிவப்பிரகாசம் வீதி | முடிவு | 20 | 0.097 | 2.4 |
| 60 | 337 | சோமசுந்தரம் வழி உப ஒழுங்கை | சோமசுந்தரம் வழி | முடிவு | 10 | 0.222 | 2.4 |
| 61 | 841 | சூரியஒளி வீட்டுத்திட்ட வீதி | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.3 | 2.5 |
| 62 | 937 | ஸ்ரான்லி வீதி உப ஒழுங்கை | ஸ்ரான்லி வீதி | முடிவு | 13 | 0.115 | 3 |
| 63 | 828 | தம்பிராசா ஒழுங்கை | காக்கைதீவு வீதி | ஆனைக்கோட்டை பழம் வீதி | 20 | 0.21 | 3 |
| 64 | 185 | துண்டி 4ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.096 | 2.4 |
| 65 | 186 | துண்டி 5ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.132 | 2.1 |
| 66 | 187 | துண்டி 6ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.116 | 3 |
| 67 | 188 | துண்டி 7ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.145 | 2.1 |
| 68 | 189 | துண்டி 8ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.132 | 2.4 |
| 69 | 194 | வளம்புரம் வீதி 5ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.171 | 2.7 |
| 70 | 195 | வளம்புரம் வீதி 6ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.112 | 2.7 |
| 71 | 291 | ஐயனார் வீதி உப ஒழுங்கை | ஐயனார் வீதி | முடிவு | 10 | 0.116 | 2.7 |
| 72 | 836 | முத்தமிழ் வீதி 8ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.297 | 2.2 |
| 73 | 838 | பண்ணை மார்புச்சிகிச்சை 1ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.193 | 2.7 |
| 74 | 181 | துண்டி வீதி | பழையபூங்கா வீதி | கொழும்புத்துறை வீதி | 25 | 2.244 | 5 |
| 75 | 299 | துரையப்பா ஒழுங்கை | விதானையார் வீதி | முடிவு | 10 | 0.192 | 2.5 |
| 76 | 939 | வைரவர்கோவில் ஒழுங்கை | ஆஸ்பத்திரி வீதி | சி.பொன்னம்பலம் வீதி | 25 | 0.1 | 8.3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(07ஆம் பக்கம் பார்க்க)

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஓட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறூட், ரகன் புறூட், செவிழை தென்னை, விளும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு கருவப்புலம் வீதியில் நல்ல சுற்றாடலில் 9.28 பேர்ச் காணியில் அமைந்த நான்கு அறைகளைக் கொண்ட மேற்கு வாசல் வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(CS/ 50985)AH-1

**077 469 2981**

## வேலைவாய்ப்பு

"Agro Ventures Plantation" நிறுவனத்திற்கு

**BRANCH MANAGERS**

தேவை.

காப்புறுதி, சந்தைப்படுத்தல் துறையில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

கவர்ச்சிகரமான சம்பளம் + கமிஷன் + பெற்றோல் கொடுப்பனவு + Target Achievement Allowance

**0777 163 471**

## மணமகள் தேவை


1985 இல் பிறந்த, யாழ். கிறிஸ்தவம். கொழும்பில் வசிக்கும் வேலை செய்யும் மணமகனுக்கு கல்வித் தகைமையுடன் கூடிய நற்பண்புள்ள மணமகள் தேவை. இந்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(24957) H-1

**076 182 1455**

SLIIT ACADEMY

Curtin University



## GET ON THE FAST-TRACK FROM O/Ls TO YOUR DREAM CAREER WITH CURTIN UNIVERSITY - SLIIT ACADEMY FOUNDATION PROGRAMS

Designed for students who have completed their O/Ls, the Curtin University - SLIIT Academy Foundation programs provide a supportive pre-university pathway to Curtin University's bachelor degrees in IT, Business, Engineering & Health Sciences.

**FOUNDATION PROGRAMS IN** — DURATION 1 YEAR

- INFORMATION TECHNOLOGY
- BUSINESS
- ENGINEERING
- HEALTH AND LIFE SCIENCES

APPLY NOW WITH PENDING O/L RESULTS

**2023 JULY INTAKE NOW OPEN**

**APTITUDE TEST**
30th June 2023
10.00am - 11.00am
Test Medium English | Sinhala | Tamil

**Entry requirements:**
- IT/ Business - minimum of six (6) passes including credit passes for Mathematics & English obtained at one and the same sitting.
- Engineering / Health & Life Sciences - minimum of six (6) passes including credit passes for Mathematics, English & Science obtained at one and the same sitting.

SLIIT Academy, 13th Floor, BOC Merchant Tower, 20 St Michaels Rd, Colombo 03

**ABOUT CURTIN**

Curtin University is an innovative, global university known for its high impact research, strong industry partnerships and commitment to producing career-ready graduates who aspire to make tomorrow better.

1% — **Top one percent of universities in the world** (Academic Ranking of World Universities 2022)

TOP 100 — **Top 100 in civil and construction engineering** (QS World University Rankings by Subject 2022)

**A global university** (Opportunity to transfer to Curtin campuses in Australia, Dubai, Malaysia, Singapore or Mauritius, when international travel resumes)

CRICOS PROVIDER CODE 00301J

sliitacademy@sliit.lk www.sliitacademy.lk

**For more details : 077 355 0 660**


## யாழ்ப்பாணம் மாநகர சபை

# வீதிகளுக்குப் பெயர் சூட்டுதல் (தொடர்ச்சி)

| தொ. இல | குறியீட்டு இலக்கம் | வீதியின் பெயர் | தொடக்கம் | முடிவு | வீதிக் கோட்டு நீளம் (அடி) | வீதியின் நீளம் (கி.மீ) | சராசரி அகலம் - மீற்றர் |
|---|---|---|---|---|---|---|---|
| 77 | 190 | வளம்புரம் வீதி 1ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.327 | 2.7 |
| 78 | 191 | வளம்புரம் வீதி 2ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.216 | 2.7 |
| 79 | 192 | வளம்புரம் வீதி 3ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.22 | 2.4 |
| 80 | 193 | வளம்புரம் வீதி 4ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.236 | 2.4 |
| 81 | 839 | பண்ணை மார்புச்சிகிச்சை 2ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 20 | 0.343 | 2.7 |
| 82 | 840 | பண்ணை மார்புச்சிகிச்சை 3ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.191 | 2.7 |
| 83 | 300 | விதானையார் வீதி 1ம் ஒழுங்கை | விதானையார் வீதி | முடிவு | 10 | 0.181 | 2.7 |
| 84 | 2001 | விதானையார் ஒழுங்கை | கொழும்புத்துறை வீதி | புனித மரியாள் ஒழுங்கை | 10 | 0.21 | 2.4 |
| 85 | 1049 | வைமன் வீதி 1ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.0976 | 3 |
| 86 | 1050 | வைமன் வீதி 2ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.143 | 3.2 |
| 87 | 1051 | வைமன் வீதி 3ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 13 | 0.094 | 3 |
| 88 | 1052 | வைமன் வீதி 4ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.229 | 2.8 |
| 89 | 1053 | வைமன் வீதி 5ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.13 | 2.6 |
| 90 | 1054 | வைமன் வீதி 6ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.17 | 2.4 |
| 91 | 1055 | வைமன் வீதி 7ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 13 | 0.087 | 3 |
| 92 | 1056 | வைமன் வீதி 8ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.05 | 3.2 |

**இ.த.ஜெயசீலன்**
**ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம் மாநகரசபை.**

(எ.402021) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர்மாற்றம்

பழம் வீதி, பழைய பொலிஸ் நிலையம், ஆனைக்கோட்டையில் வசிக்கும் **வேலன் ஸ்ரீகாந்தா** ஆகிய நான் எனது பெயரை **வேலன் ஸ்ரீகாந்தராசா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **வேலன் ஸ்ரீகாந்தராசா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை குடியரசு மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

(CS/50982)AH-1 **- வேலன் ஸ்ரீகாந்தராசா -**

## பெயர்மாற்றம்

161ம் கட்டை, கண்டிவீதி, பரந்தன், கிளிநொச்சியில் வசிக்கும் **ஆனந்தலிங்கம் மளனகுமாரி** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **ஆனந்தலிங்கம் நளினகுமாரி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ஆனந்தலிங்கம் நளினகுமாரி** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(CS/50982)AH-1 **- ஆனந்தலிங்கம் நளினகுமாரி**



**விடத்தல் விநாயகர் , காவாக்குளம் வைரவர் ஆலயங்களின் வருடாந்த பொங்கல் விழா - 2023**

நாளை (26.06.2023) திங்கட்கிழமை விடத்தல் விநாயகர் ஆலயத்திலும். நாளை மறுதினம் (27.06.2023) செவ்வாய்க் கிழமை காவாக்குளம் நரசிம்ம வைரவர் ஆலயத்திலும் பொங்கல் விழா நடைபெறும்.

எனவே பக்த அடியார்கள் தங்களது வேண்டுதல்களை நிறை வேற்றும் வகையில் இந்த அறித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு- கேட்டுக் கொள்கின்றோம்.

**பொங்கல் விழா :- விடத்தல் பிள்ளையார் 26.06.2023 திங்கட்கிழமை**
**காவாக்குளம் நரசிம்மன் :- 27.06.2023 செவ்வாய்க்கிழமை**

**ஆடு, கோழி ஏல விற்பனை 28.06.2023 காலை 6.00 மணி**

**- ஆலய பரிபாலன சபை**
**தம்பிராய் , பூநகரி.**
**077 246 3027, 077 465 9877, 077 858 7033**

(22387)AH-1

## மரண அறிவித்தல்



திருமதி **ஞானாம்பிகை சிவலோகநாதன் (ஞானமக்கா)**

**தோற்றம்** 11.11.1949 — **மறைவு** 22.06.2023

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானாம்பிகை சிவலோகநாதன் கடந்த (22.06.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் சந்திரமதி தம்பதிகளின் மூன்றாவது அன்புப் புதல்வியும், சிவசிதம்பரம் சிவலோகநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான குமாரசிங்கம் கமலாதேவி, வன்னித்தம்பி பத்மாவதி, இராசேந்திரம் சறோயினிதேவி மற்றும் இராசேந்திரம் புஸ்பதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், குமாரசிங்கம் குலத்துங்கர், குமாரசிங்கம் முகுந்தன், குமாரசிங்கம் ஜெயசீலன் ஆகியோரின் பாசத்துகுரிய சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உடுக்கியவளை பிள்ளையார் கோயிலடி,**
**மூளாய் வீதி,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**074 306 7648**

(cr 40215) (N-1)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 90 ரூபாய்

**077 334 1281**

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேவை (சிவில் அல்லது QS)

**தகைமைகள்**

- ✓ ஏற்கக்கூடிய கல்வித் தகைமை. ஆகக்குறைந்தது 02 வருடங்கள் கற்கை நெறியினை நிறைவு செய்த பின்னர் அனுபவம் தேவை.
- ✓ Motor Bike வைத்திருத்தல் வேண்டும்.
- ✓ வேலைப்பகுதி யாழ். மாவட்டத்துக்குள் உட்பட்டதாகும்.
- ✓ முதல் 04 மாதங்கள் Probitionary Period ஆகக் கருதப்படும். Short List மூலம் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு அனுப்பப்படும்.

தங்களது CV அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி :-
**jathurenterprise.or@gmail.com**
அல்லது **Whatsapp/ Viber 077 642 5724**
**Administrative Officer,**
**Jaffna enterprise (pvt)Ltd**

(CS/40216)AH-1

## விற்பனைக்கு

தரமான **No.1** சில்வர் பைப், சில்வர் கம்பி, சில்வர் பட்டம் மற்றும் சில்வர் பொருத்துக்கள், சில்வர், பித்தளை, செப்பு தகடு வகைகள் (8'x4') (2'x4') அனைத்தும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.

**நந்தலாலா இரும்பகம்**
**29, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**077 780 5950**
**021 222 6234**

(CS/50821)AH-1

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி **இராசலட்சுமி இராஜசேகரம்**

**(ஓய்வுநிலை உப அதிபர் - யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)**

**மண்ணில்** 23 . 07 . 1956



**விண்ணில்** 25 . 06 . 2021

ஆளுமைப் பெண்ணாகவும் குடும்பத் தலைவியாகவும் என்னோடு 10.02.1989 - 25.06.2021 வரையான காலப்பகுதிகள் வரை சேர்ந்து வாழ்ந்துவிட்டு என்னையும் மாதகல் வீட்டையும் மின்சாரம் இல்லாத வீடுபோல் இருளில் தத்தளிக்கவிட்டுச் சென்றீரோ?

**மாதகல் வடக்கு,**
**மாதகல்.**

(CS/50996)AH-1

**கணவர் -**
**இராஜசேகரம்**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## 30 ஆம் நாள் நினைவஞ்சலி

**தோற்றம்** 25 . 04 . 1940



**மறைவு** 27 . 05 . 2023

அமரர் **நடராசா கதிரவேலு** (தம்பு)

**திதி: பூர்வ பட்ஷ ஸப்தமி**

அன்பின் திருவுருவாய் குடும்பத் தலைவனாய்
மனம் நிறைந்த கணவராய் பாசமிகு தந்தையாய்
வாழ்ந்த எம் உத்தமரே !
அன்னிய தேச மதிலும் உங்கள் பிள்ளைகள் எனும்
பெயர் சொல்ல வாழ்ந்தோமே ஐயா
உங்கள் மறு வாழ்வு சாந்திபெற மனதார
இறைஞ்சுகின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**[illegible] வீதி,**
**வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.**
**077 610 5132**

**என்றென்றும் நினைவுகளுடன்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**

(cs.50984) (N-1)

## தேவை

**கணவா ஓடு (CUTTLE FISH BONE)**
அதிகளவில் தேவை.
**அளவுகள் : 5" இலிருந்து 12" வரை**
**விலை 1 கிலோ: ரூபா 500/-**
**இடம் : மதுரங்குளி 110 மைல்போஸ்ட் (புத்தளம் டிஸ்ரிக்ட்)**

**077 752 6177**

(CS/40214)AH-1

## அனெக்ஸ் வீடு வாடகைக்குண்டு

நல்லூர் கோயிலுக்கு அருகில் ஒரு அறையும். ஒரு சமையல் அறையும் வாடகைக்குண்டு. (சிறிய குடும்பம் விரும்பத்தக்கது)

**077 719 1432**

(CS/5099 AH-1

## மணமகள் தேவை

1988 இல் பிறந்த, இந்து கௌரவ குலத்தைச் சேர்ந்த (V), பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை.

**077 959 9760**

(CS/50980)AH-1

## பணிப்பெண் தேவை

தெல்லிப்பழையிலுள்ள வீடொன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

**070 600 5023**
**077 400 5023**

(CS/50980 AH-1

## விற்பனைக்கு

நல்ல இன டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

**க.வைத்திலிங்கம்**
**077 055 8493**

(CS/50999 AH-1)

## மணமகன் தேவை

1992. யாழிந்து. அவிட்டம். Civil Engineer. தெல்லிப்பளை. பதிவு #9341. தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை.
அழையுங்கள் 076 664 9401.
Ensured Quality Lanka Pvt Ltd., Colombo.-04 (cr.40223) (N-1)

## மணமகன் தேவை

1990. யாழிந்து . பூராடம். Lecturer, மயிலிட்டி. பதிவு #9121. தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை.
அழையுங்கள் 076 664 9401.
Ensured Quality Lanka Pvt Ltd., Colombo.-04 (cr.40222) (N-1)

## மணமகள் தேவை

1993. யாழிந்து. V. அவிட்டம். Doctor யாழ்ப்பாணம். பதிவு #9329. தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை.
அழையுங்கள் 076 664 9401.
Ensured Quality Lanka Pvt Ltd., Colombo.-04 (cr.40224) (N-1)

## கடை வாடகைக்கு

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணத்தில் கடை வாடகைக்கு உண்டு.

**075 803 9586**

(CS/50854) AH-1

Achieve
*Your Dreams*
Grab this Golden Chance



**TO STUDY IN CANADA**

- 5.5 IN ONE MODULE
- OVERALL 6 BAND
- PACKAGE AVAILABLE
- REFUSAL CASE ACCEPTED

EUROPE LINK
0742 555 319 | 0117 005 877
0763 915 660
info@europelinkedu.com
www.europelinkedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கை, குருவி எங்கள் ஜாதி - நீள் கடலும்,
மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெலாம் நாமன்றி
வேறில்லை நோக்க நோக்கக்களி யாட்டம்!

-பாரதியார்

சஞ்சீவி
...gistered as a Newspaper
மலை : 33 | சிகரம் : 142



ஆங்கிலத்தில்: Stefano Pozzebon(CNN travel)

**தமிழில் : ஔண்யன்**

# எமனை ஏமாற்றிய 4 பிஞ்சுகள்

## அமேசான் காட்டுக்குள் வீழ்ந்த விமானம்; நாற்பது நாள்களின் பின் மீண்ட நான்கு குழந்தைகள்

அதிசயம்! அதிசயம்!! அதிசயம்! அதிசயம்!!!" இந்த ஒற்றை வார்த்தையைத் தவிர வேறேதும் அவர்களால் அப்போதைக்கு உச்சரிக்கமுடியவில்லை. எனினும் இந்த ஒற்றை வார்த்தையே ஒட்டு மொத்த உலகமும் ஆனந்தக் கூத்தாடுவதற்குப் போதுமானதாக இருந்தது. " இது உலகின் பேரதிசயமே" என கொலம்பிய நாட்டு ஜனாதிபதி கூட , மகிழ்ச்சிப் பெருக்கில் தொலைக்காட்சியில் கண்ணீர் மல்கினார். ஒரு நாட்டின் ஜனாதிபதியே தலைகால் புரியாத மகிழ்ச்சியில் திளைக்குமளவுக்கு கொலம்பியாவில் அப்படி என்னதான் அதிசயம் நிகழ்ந்துவிட்டது ?

### வீழ்ந்தது விமானம்

மே1 ஆம் திகதி.

பழங்குடியினத்தைச் சேர்ந்த மக்டலீனா முக்குடுய் வலென்சியாவும், அவளது நான்கு பிள்ளைகளும் சிறியரக விமானமொன்றில் கொலம்பியாவை ஊடறுத்துச் செல்லும் அமேசான் அடர்வனத்தின் மேலாகப் பறந்து கொண்டிருந்தார்கள். திடீரென விமானத்தின் இயந்திரம் கோளாறு செய்யத் தொடங்கியது. வேகம் சடுதியாகக் குறைய, விமானம் வெறிபிடித்தது போல விமானியின் கட்டுப்பாட்டையிழந்து, அமேசன் காட்டு மரங்களை விழுங்குவது போன்று குத்திட்டு கீழிறங்கியது. விமானத்தில் இருந்த மக்டலீனாவினதும்,அவள் பிள்ளைகளினதும் எல்லாப் பிரார்த்தனைகளும் பொய்த்துப் போக, கடைசியில் விமானம் காட்டுக்குள் வீழ்ந்தேவிட்டது. விமானத் தொடர்பு துண்டிக்கப்பட்ட தகவல் கிடைத்ததும் கொலம்பிய அரசு துரித கதியில் காரியத்தில் இறங்கியது. விமான விபத்தில் சிக்கியவர்களை மீட்க படைவீரர்களும், அமேசான் காட்டை அண்டிய பகுதியில் குடியிருந்த பழங்குடியின மக்களுமாக சுமார் 200 க்கும் அதிகமானோர் விரைந்தனர்.

### எங்கே சிறுவர்கள்?

மனிதக்காலடியே பட்டிராத அந்தக் காட்டுப்பகுதிக்குள் விமானத்தின் சிதைவுகளையோ, அதில் இருந்தவர்களையோ கண்டுபிடிப்பதென்பது அத்தனை சுலபமாக இருக்கவில்லை.மிகக் கடினமான தேடுதலுக்குப் பின்னர், இரு நாட்கள் கழிந்து, அடர்வனத்தின் ஒரு பகுதியில் விமானத்தின் சிதைவுகளையும், அதில் பயணித்த மூவரின் சடலங்களையும்மீட்புக்குழுவினர் கண்டுபிடித்தனர். விமானத்தில் பயணித்த நான்கு குழந்தைகளின் தாயான மக்டலீனாவும், விமானிகள் இருவருமே சடலமாக மீட்கப்பட்டிருந்தனர். ஆனால் மக்டலீனாவின் நான்கு பிள்ளைகளையோ, அவர்களின் உடல்களையோ மீட்புக் குழுவால் கண்டுபிடிக்கமுடியவில்லை.

### சிக்கிய தடயங்கள்

ஒருவேளை அவர்களது உடல் சிதைவுகளைக் காட்டுமிருகம் ஏதும் தின்றிருக்கலாம் என நினைத்தவர்களுக்கு, விமானச் சிதைவுகளுக்கு அருகாமையில் உணவு எச்சங்களும், சிறு குழந்தையின் அழுக்கடைந்த 'டயப்பரும்', ஒரு பால்போச்சியும் சிறுவர்கள் உயிரோடு இருக்கலாம் என்று பொறிதட்ட வைத்தது. ஆனால் விமானத்தில் பயணித்த வளர்ந்த பெரியவர்களே இறந்து போன நிலையில் , ஏதுமறியாத 13, 9, 4 வயதான சிறுவர்கள் தம்மோடு 11 மாதமேயான குழந்தையையும் வைத்துக்கொண்டு இந்த அடர்வனத்தில் உயிரோடு தாக்குப்பிடிக்கமுடியுமா? என்ற கேள்வி எல்லோரிடத்தும் எழுந்தது. ஆனாலும் 'சரி, எதற்கும் ஒருமுறை தேடித் தான் பார்ப்போமே' என்று நம்பிக்கையீனத்தோடு, கொலம்பியப்படைகளும், தன்னார்வலர்களும் காட்டுக்குள் குழந்தைகளைத் தேடும் பயணத்தைத் தொடங்கினார்

07








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கூட்டமைப்பின் தலைவர் யார்?



அ.நிக்ஸன்

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டம் 2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் ஒரு "தேசிய இயக்கம்" போன்ற அமைப்பையே எதிர்பார்த்திருக்கிறது. ஆனால் 14 வருடம் சென்ற பின்னரும்கூட அது சாத்தியமாகவில்லை. தேர்தல் வியூகங்களுடன் கட்சி அரசியல் மாத்திரமே வளர்ந்து வருகின்றது.

வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ்த்தேசிய அரசியல் இயங்கு நிலைக்குத் 'தேசிய இயக்கம்' அவசியம் என்றும், அந்தத் தேசிய இயக்கமே இலங்கை அரசாங்கத்துடனும் கொழும்புக்கு வந்து செல்கின்ற சர்வதேச அரசியல் பிரதிநிதிகளுடனும் பேச வேண்டும் எனவும் மக்கள் விரும்பியிருந்தனர்.

இந்த அரசியல் பத்தியில் பல தடவைகள் இது குறித்துச் சுட்டிக் காட்டப்பட்டும் வருகிறது. வேறு அரசியல் பத்தி எழுத்தாளர்கள் சிலரும் இந்த விடயத்தை அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டு எழுதியுமிருக்கின்றனர்.

ஆனால் இதுவரையும் அவ்வாறான தேசிய இயக்கம் அல்லது பலமுள்ள சிவில் அமைப்புகள் கூட இதுவரை வடக்கு - கிழக்கில் உருவானதாக இல்லை. 2009 இக்குப் பின்னர் செயற்பட்டு வந்த சில சிவில் சமூக அமைப்புகளும் ஏதோ ஒரு அரசியல் கட்சியின் பின்னால் அல்லது அந்தக் கட்சிக்குத் தேவையானதையே செயற்படுத்தி வந்தன.

2010 இல் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஒரு "தேசிய இயக்கம்" என்ற அளவில் செயற்படும் என்ற நம்பிக்கை 2015 வரை தென்பட்டிருந்தது.

அரசியல் விடுதலையைப் பெறக்கூடிய முறையில் அதாவது அழுத்தம் கொடுக்கக்கூடிய அளவுக்கு முன்னணி அப்போது பிரதான அழுக்கக் குழுவாகச் செயற்பட்டிருந்தது.

இந்தப் பின்புலத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு நாடாளுமன்ற ஆசனங்களும் மக்கள் செல்வாக்கும் குறைய ஆரம்பித்தது. 2010 இல் 18 ஆசனங்களும் 2015 இல் 16 ஆசனங்களும் 2020 இல் 10 ஆசனங்களும் பெறப்பட்டு மக்கள் செல்வாக்கும் பலமும் குறைவடைந்தது. இதற்கு முன்னணியின் அப்போதைய அரசியல் ஈடுபாடுகள் பிரதான காரணமாக இருந்தன என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இந்தச் சூழலில் 2020 இல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆசனங்கள் குறைவடைந்து உள்ளக முரண்பாடுகள் மேலும் விரிவடைந்தன. குறிப்பாகத் தமிழரசுக் கட்சிக்குரிய முக்கியத்துவம் சம்பந்தன். சுமந்திரன் ஆகியோரை மையமாகக் கொண்ட முடிவுகள் செயற்பாடுகள் போன்ற காரணங்களினால், கூட்டமைப்பின் ஏனைய அங்கத்துவக் கட்சித் தலைவர்கள் விசனமடைந்தனர் என்பது எல்லோருக்கும் தெரிந்த கதை.

2015 இல் கூட்டமைப்பில் அங்கம் வகித்த ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழரசுக் கட்சியினால் ஓரம்கட்டப்பட்டார். ஏனெனில் தமிழரசுக் கட்சித் தலைமையின் செயற்பாடுகள், குறிப்பாகச் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் தன்னிச்சையான முடிவுகளை அவர் துணிந்து வெளிப்படுத்தியிருந்தார். இதனால் நாடாளுமன்றத்தில் உரையாற்ற சிவசக்தி ஆனந்தனுக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை. அதாவது பேச்சுரிமை அப்போது மறுக்கப்பட்டிருந்தது. இதனால் எதிர்க்கட்சிகள் தங்களுக்குரிய நேரத்தைப் பங்கிட்டு சிவசக்தி ஆனந்தனுக்கு வழங்கியிருந்தன.

அப்போது கூட்டமைப்பில் அங்கம் வகித்திருந்த ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் சிவசக்தி ஆனந்தனுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கவேயில்லை. ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அப்போது நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவராகப் பதவி வகித்திருந்தார். சிவசக்தி ஆனந்தன் தனக்குரிய பேச்சுரிமை மறுக்கப்பட்டமை குறித்து, செல்லம் அடைக்கலநாதனிடம் தனிப்பட்ட முறையில் முறையிட்டிருந்த போதும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியின் தலைவராக அன்றி நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் என்ற முறையில் கூட அவர் எந்த ஒரு நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் 10 ஆசனங்களைப் பெற்று அதில் ரெலோ மூன்று ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தது. இதன் பின்னரான சூழலில் தமிழரசுக் கட்சியுடன் ரெலோவுக்கு முரண்பாடு ஏற்பட்டது. இதனால் செல்வம் அடைக்கலநாதனுக்கு நாடாளுமன்றத்தில் பேசுவதற்குரிய நேரத்தை சம்பந்தன் ஒதுக்கவில்லை.

அதாவது அப்போது சிவசக்தி ஆனந்தனுக்கு ஏற்பட்ட நிலை இப்போது செல்வம் அடைக்கலநாதனுக்கு ஏற்பட்டுள்ளது. அதே நேரம் புளொட்டும் கூட்டமைப்புடன் முரண்பட்டது. இந்தப் பின்புலத்திலேதான் ஈ.பி.ஆர்.எல்.எப்.புடன் கூட்டுச் சேர்ந்து புதிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. குறிப்பாக உள்ளூராட்சிசபைத் தேர்தல் அறிவிப்புடன்தான் இந்த முரண்பாடு அதிகரித்துத் தனித்துச் செயற்பட வேண்டுமென்ற சிந்தனை ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளுக்கு உருவானது. 2015 இல் சிவசக்தி ஆனந்தனுக்குப் பேச்சுரிமை மறுக்கப்பட்டபோது ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து, தமிழரசுக் கட்சியின் தலைமையைக் கண்டித்து வெளியேறியிருந்தால், அப்போதே புதிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியிருக்கலாம். 2020 பொதுத் தேர்தலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் கண்டிருக்கலாம். இருந்தாலும் தற்போதே அந்த முயற்சி கைகூடியுள்ளது. யாப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் யார் தலைவர் என்பதில் தான் தற்போது மனக்கசப்பு ஏற்பட்டு ஒருவரை ஒருவர் சந்தேகிக்கும் ஆபத்தும் நேர்ந்துள்ளது. இதனால் தலைவர் இல்லாமல் இணைத் தலைவர்கள் என்று நியமிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

புதிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்காக உருவாக்கப்பட்டுள்ள யாப்பின் பிரகாரம் பதினைந்துபேரைக் கொண்ட நிறைவேற்றுக் குழுவிடமே முழு அதிகாரங்களும் உண்டு. நிறைவேற்றுக் குழு விரும்பினால் தலைவர் ஒருவரைச் சுழற்சி முறையில் நியமிக்கும் ஏற்பாடுகளும் யாப்பில் உண்டு. தலைவராக வரக்கூடியவர் நிறைவேற்றுக்குழுவின் தீர்மானங்கள் இன்றித் தன்னிச்சையாக முடிவுகளை எடுக்கமுடியாத அளவுக்கு நிறைவேற்றுக் குழு பலமுள்ளதாகக் காணப்படுகின்றது. ஆகவே பலமுள்ள இந்தப் பின்னணியில் கூட்டமைப்புக்குத் தலைவர் ஒருவரை நியமிப்பதே விடுதலை அரசியலுக்குச் சிறப்பானது.

இணைத் தலைவர்கள் என்பது கட்சித் தலைவர்களிடையேயான சந்தேகத்தை வலுப்படுத்துகிறதே தவிர கூட்டுப் பொறுப்பை அல்ல. தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி உருவாக்கப்பட்ட புதிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் யார் என்று கேட்டால், இணைத் தலைவர்கள்தான் இருக்கிறார்கள் என்று கூறலாமா? ஆகவே ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட், தமிழ்த்தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய ஐந்து கட்சிகளும் ஒருவர் மீது ஒருவர் சந்தேகம் கொண்டவர்களாக இருக்கின்றனர் என்பது பட்டவர்த்தனமாகிறது.

இந்தச் சந்தேகமே கூட்டமைப்புக்கான நம்பிக்கையுடைய தலைவர் ஒருவரை நியமிக்கத் தயங்குவதற்குக் காரணம் என்பதும் பகிரங்கமாகிறது. ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலை என்ற உண்மையான உணர்வு இவர்களிடம் இருக்குமானால், எந்த நோக்கத்துக்காக தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறினார்களோ அந்த நோக்கத்துக்கு மாறாக மீண்டும் தமிழரசுக் கட்சி போன்று இந்த ஐந்து கட்சிகளும் தனித் தனிச் செல்வாக்கை வளர்க்க முற்படுகின்றனர் என்பது புரிகிறது. அதாவது தேர்தல் வெற்றிக்கான வியூகமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கி, பின்னர் தத்தமது கட்சிகளை வளர்த்து, கட்சிச் செயற்பாடுகளோடும் சிங்கள ஆட்சியாளர்கள் மற்றும் இந்தியா சொல்வதைக் கேட்கின்ற கட்சிகளாகச் செயற்படவுமே இவர்கள் விரும்புகின்றனர் என்பதும் இங்கே வெளிப்படையாகிறது.

புதிய கூட்டமைப்புக்காகத் தேசிய அமைப்பாளர், பேச்சாளர், பொதுச் செயலாளர், பொருளாளர் மற்றும் வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தி இரண்டு உப தேசிய அமைப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். கட்சி யாப்பின் பிரகாரம் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றால், நிறைவேற்றுக்குழுவுக்குரிய அதிகாரத்தை படித்தவர் ஒருவரையும் நியமித்திருக்கலாமே? ஐந்து கட்சிகளில் இருந்தும் மூன்று உறுப்பினர்கள் வீதம் பதினைந்து பேர் நிறைவேற்றுக் குழுவில் அங்கம் வகிக்கும்போது, தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதில் தயக்கம் ஏன்?

யாப்பின் பிரகாரம் நிறைவேற்றுக்குழுவின் கூட்டுப் பொறுப்பு உண்மையானதாக இருக்குமானால் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதில் சந்தேகம் எழுவதற்கு வாய்ப்பில்லை. 1949 இல் உருவாக்கப்பட்ட தமிழரசுக் கட்சிக்கும், 1977 இல் உருவான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், 2001 இல் உருவான தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் தலைமை இருந்தது.

ஆனாலும் தலைமையும் மற்றும் சிலரும் எடுக்கின்ற முடிவுகள் கட்சி அரசியல் செயற்பாட்டு முறைமைகளுக்கு மாறானதாகவே இருந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை.

"கூட்டுப் பொறுப்பு" "அரசியல் விடுதலை" என்ற சிந்தனைகளை மாற்றித் தமது விருப்பங்களுக்கு ஏற்ப இலங்கை அரசாங்கத்துடனும், இந்தியாவுடனும் தொடர்பு கொண்டு பேசுவது, பின்னர் அந்த முடிவுகளைக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் மக்களிடமும் திணிக்க முற்படுவது போன்ற அணுகுமுறைகள் மேலோங்கியிருந்தமை உண்மைதான். இது "விடுதலை அரசியல்" இயங்குதளத்துக்குப் பொருத்தமான செயற்பாடுமல்ல.

அதுவும் 2009 க்குப் பின்னரான சூழலில் ஈழத்தமிழர்களுக்கான தலைமைக் கட்சி என்ற அந்தஸ்தைப் பெற்ற சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் அதிருப்திகளையும், இந்தக் கூட்டமைப்பு வேண்டாம் என்று சொல்லுகிற அளவுக்கு மக்களிடமும் வெறுப்பு உணர்வுகளும் காணப்பட்டிருந்தன. குறிப்பாகச் சம்பந்தன் கூட்டுப் பொறுப்பைப் பேணத் தவறிவிட்டார் என்பதே பொதுவான குற்றச்சாட்டு. அதன் காரணமாகவே 2010, 2015, 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் நாடாளுமன்ற ஆசனங்களும் படிப்படியாகக் குறைவடைந்தும் வந்தன.

ஆகவே இந்தப் பின்னணியில் உருவாக்கப்பட்ட மேற்படி ஐந்து கட்சிகளை உள்ளடக்கிய புதிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தலைமை இல்லாத அல்லது தலைவராக வரக்கூடியவர் மீது சந்தேகம் கொள்கின்ற தன்மை இருக்குமானால், சுய விருப்பங்கள், தனிப்பட்ட கட்சி அரசியல் நலன்கள் தாராளமாகக் குடிகொண்டுள்ளன என்பதையே படம்போட்டுக் காட்டுகின்றன. இங்கு கூட்டுப் பொறுப்பு இல்லை என்பதும் பட்டவர்த்தனமாகிறது. தலைமை என்பது வழிகாட்டுதல். எவரையும் அடக்கி ஆள்வதல்ல. தன்னிச்சையாக முடிவெடுத்தல் என்பதுமல்ல. அதுவும் விடுதலை வேண்டி நிற்கும் இனம் ஒன்றின் கூட்டமைப்புக்குரிய அல்லது தேசிய இயக்கம் ஒன்றுக்குரிய தலைமை என்பது அதன் நிர்வாகக் கட்டமைப்புக் கட்டுப்பட்டதாகவும் மக்களின் கருத்துகளை அறிந்து நிறைவேற்றக் கூடியவராகவும் இருக்கவேண்டும். கூட்டுப் பொறுப்பைப் பேணும் ஆற்றலும் இருக்கவேண்டும்.

மாறாகக் குறிப்பிட்ட சில நபர்களுடன் இணைந்து மேலிருந்து முடிவுகளை எடுக்காமல், மக்களிடம் இருந்து அதாவது கிராமம் கிராமமாகச் சென்று மக்கள் கருத்தை அறிந்து முடிவுகளை எடுக்கக் கூடியவரே வழிகாட்டல் தலைமைக்குத் தகுதியானவர். இது ஆயுதப் போராட்டக் காலமல்ல.

ஆகவே உலக அரசியல் ஒழுங்கு தற்போது மாற்றமடைந்து வரும் சூழலில் ஜனநாயக வழியில் புதிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வழிகாட்டக்கூடிய ஒருவரையே தலைவர் என்று அறிமுகப்படுத்த வேண்டும்.

அத்தகைய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதில் ஐந்து கட்சிகளிடமும் சந்தேகம் நிலவுமானால், அல்லது நிறைவேற்றுக் குழுவுக்குரிய கூட்டுப் பொறுப்பில் நம்பிக்கை இல்லையானால் புதிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்று சொல்வதில் அர்த்தமேயில்லை.

சம்பந்தன் தலைமையிலான அல்லது சுமந்திரனின் தனி ஆதிக்கத்தை மையப்படுத்திய தமிழரசுக் கட்சிக்கு மாற்றீடான புதிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்று சொல்வதானால், அதற்குரிய கூட்டுப் பொறுப்புப் பண்புகள் - தகுதிகள் மற்றும் தமிழ்த் தேசிய அரசியல் பணிகள் ஒன்றாக இருக்கவேண்டும்

குறிப்பாக அமெரிக்க இந்திய அரசுகளுடன் பேரம் பேசும் அளவுக்குரிய வெளியுறவுக் கொள்கை பற்றிய தெளிவான சிந்தனைகளைப் புதிய கூட்டமைப்பு ஒருமித்த கருத்தாக அறிவிக்க வேண்டும். வெளியுறவுச் செயற்பாட்டின் வகிபாகத்தை பகிரங்கப்படுத்தவும் வேண்டும்.

வெறுமனே அமெரிக்காவும் இந்தியாவும் சொல்வதைக் கேட்பது, பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் ஆரம்பப் புள்ளி என்று மார் தட்டிக் கூனிக்குறுகி நின்று அரைகுறை அரசியல் தீர்வைக் கோருவதற்குப் புதிய கூட்டமைப்புத் தேவையில்லை.

"முழுமையான நிரந்தரமான அரசியல் தீர்வு" என்ற தயார்ப்படுத்தலோடும் அதற்குரிய கூட்டுப் பொறுப்புடனும் புதிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவிக்கப்பட வேண்டும்.

மாறாகத் தெளிவான வெளியுறவுக் கொள்கையற்ற அரசியல் பார்வையும், புவிசார் அரசியல் பொருளாதாரப் போட்டிகளுக்கு மத்தியில் நிரந்தர அரசியல் தீர்வுக்குரிய ஒழுங்குகள், "இன அழிப்பு" விசாரணைக்குரிய வேலைத் திட்டங்கள் எதுவுமேயின்றியும் கட்சி அரசியல் நலன்களுடன் மாத்திரம் இந்தப் புதிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தோற்றம் பெறுமானால், அது சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாக மாறும்.

இதுதான் புதிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலை என்றால், தமிழரசுக் கட்சியும் , தமிழரசுக் கட்சிக்கு மாற்றீடாகவும் குறைந்த பட்சம் ஈழத்தமிழர் அரசியல் விவகாரத்தைச் சர்வதேச அரங்கில் பேசுபொருளாக வைத்துக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுமே போதுமானவை என்ற முடிவுக்கு தமிழ்மக்கள் வந்துவிடும் நிலை உருவாகும்.

தமிழ்த்தேசிய விடுதலை அரசியலுக்கு இது வேதனையுடன் கலந்த சோதனைக்காலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பரம்பல் மாற்றம்: கானலாகும் தாயகம்!



## கிழக்கைத் தொடர்ந்து இரையாகும் வடக்கு!

வரதராஜன் பார்த்திபன்

தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் மாவட்டங்களான முல்லைத்தீவு மற்றும் வவுனியா நிர்வாகப் பிரதேசங்களின் எல்லை மாற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் அண்மையில் நடைபெற்றதாக செய்திகள் வெளிவந்திருக்கின்றன. அதனடிப்படையில் வெலிஓயா என்று அழைக்கப்படும் மணலாறு பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிங்கள மக்கள் இனிவரும் காலங்களில் முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் உள்ளீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 1987ஆம் ஆண்டுக்கு முன்னர் குறித்த பிரதேசம் முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைந்து காணப்பட்டது. இந்த நிர்வாகப் பிரிவு 1987ஆம் ஆண்டில் அநுராதபுர மாவட்டத்தின் பதவியா பிரதேச செயலர் பிரிவின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டதுடன் 1988ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் திகதி வெளியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானி அறிவித்தலின் மூலம், முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு மற்றும் வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகளை உள்ளடக்கிய இந்த நிர்வாகப் பகுதி 'வெலிஓயா' என்று சிங்களத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு 2011ஆம் ஆண்டு பொதுஉள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்புரையின் கீழ், முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினால் வெளியிடப்பட்ட புள்ளிவிபரத்தின் அடிப்படையில் 9 கிராமசேவையாளர் பிரிவுகளையும் 17 கிராமங்களையும் உள்ளடக்கியதும் 151.18 சதுர கிலோமீற்றர் பரப்பளவினையும் கொண்ட புதிய பிரதேசசெயலாளர் பிரிவான வெலிஓயாவில் 4 ஆயிரத்து 123 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 627 பேர் வாழ்கின்றனர். அதில் 4 ஆயிரத்து 117 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 589 பேர் சிங்களவர்கள் ஆவர்.

1987ஆம் ஆண்டு அநுராதபுரத்துடன் இணைத்து 1988ஆம் ஆண்டு விசேட வர்த்தமானி அறிவித்தலுடன் வெலிஓயா என்று பெயரிட்டு 2011 ஆம் ஆண்டு மீண்டும் முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு 6 பிரதேச செயலாளர் பிரிவாக அறிவிக்கப்பட்ட வெலிஓயா பிரதேசசெயலாளர் பிரிவில் 2020ஆம் ஆண்டு அதன் மொத்தச் சனத்தொகையில் 99.67 வீதம் சிங்களவர் வாழ்கின்றனர்.

தற்போது ஒரு லட்சத்து 34 ஆயிரத்து 825 பேரைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் குறித்த திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் 12 ஆயிரத்து 516 பேருடனும் மொத்தச் சனத்தொகையில் 9.08 சதவீதத்துடன் இரண்டாம் தரப் பிரஜைகளாக சிங்களவர்கள் வாழ்கின்றனர். மொத்தச் சனத்தொகையில் 85.86 சதவீதத்துடன் தமிழர் முதல்தரப் பிரஜைகளாகவும், 1.33 சதவீதத்துடன் முஸ்லிம்கள் மூன்றாம் தரப் பிரஜைகளாகவும் வாழ்கின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்ட மதிநுட்பமான சிங்களக்குடியேற்றங்களை நிறுவி அதன் இன விகிதாசாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்ற சம நேரத்தில் அதே மதிநுட்பங்களைப் பயன்படுத்தி வவுனியா மாவட்டத்தின் இனவிகிதாசாரத்தினை மாற்றியமைக்கும் செயற்பாடுகளையும் அரசு முன்னெடுகின்றது. அநுராதபுர மாவட்டத்தின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் போகஸ்வெவ1, போகஸ்வெவ 2, வெகரதென்ன, கம்பிலிவெள, நாமல்கம, நந்திமித்திகம, சலினிகம ஆகிய எல்லைக்கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்குத் தேவையான அரச நிர்வாகச் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்குடன் குறித்த கிராமங்களினை வவுனியா மாவட்ட நிர்வாகத்துடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் வவுனியா மாவட்டத்துக்கு அண்மையில் ஒரு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. வவுனியா வடக்கின் எல்லைப் பகுதிகளில் பெரும் காடுகள் அழிக்கப்பட்டு அரசின் ஆதரவுடன் பெரும்பான்மையின மக்களின் திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள் மூலம் உருவாக்கப்பட்ட இந்தச் சிங்களக் கிராமங்களை வவுனியா மாவட்டத்துடன் இணைப்பது என்பது வவுனியா மாவட்டத்தின் இனப்பரம்பலை கணிசமான அளவு மாற்றியமைக்கும் என்பதில் ஐயமில்லை.

### இனவிகிதாசார மாற்றம் தாயகத்தில் புதிதல்ல

சிங்களப் பேரினவாத அரசு இவ்வாறு நிர்வாக எல்லைகளை மாற்றியமைத்து அதன்மூலம் ஒரு குறித்த மாவட்டத்தின் இனவிகிதாசாரத்தினை மாற்றியமைக்லாம் என்பதனை 1972ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் பிரயோகித்து அதில் கணிசமான வெற்றியும் அடைந்தது. அன்று சிங்கள அரசு மேற்கொண்ட அந்த விடயம் தொடர்பில் கட்டுரையாளரின் தந்தையான பொருளியல் ஆசிரியர் அமரர் சின்னத்துரை வரதராஜன், கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றம் தொடர்பில் மேற்கொண்ட ஓர் ஆய்வில் குறிப்பிடுகின்றார். அதில் 1972ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி உதவி மாவட்டச் செயலர் பிரிவிலிருந்து புல்மோட்டை, தென்னைமரவடி ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளும் கோமரங்கடவல உதவி மாவட்டச் செயலர் பிரிவிலிருந்த பரண மதவாச்சி கிராமசேவையாளர் பிரிவும் அநுராதபுர மாவட்டத்திலுள்ள பதவியா உதவி மாவட்டச் செயலர் பிரிவுடன் இணைக்கப்பட்டது. மேலே கூறப்பட்ட பிரதேசங்கள் நிர்வாக ரீதியாக அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட போதிலும்கூட தேர்தல் தொகுதியினைப் பொறுத்தவரையில் இந்தப் பிரதேசங்கள் தொடர்ந்தும் திருகோணமலை மாவட்டத்திலேயே இருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் அரசாங்கம் திருகோணமலை மாவட்டத்தின் சிங்கள வாக்களார்களின் தொகையைக் குறையவிடாமல் பார்த்துக்கொண்டது. 1972ஆம் ஆண்டு இந்தப்பிரதேசங்கள் அநுராதபுர மாவட்டத்தோடு இணைக்கப்படும் போது அந்தப் பிரதேசத்தின் மொத்தச் சனத்தொகை 4 ஆயிரத்து 651 அதில் சிங்கள வர்களின் எண்ணிக்கை 672 பேர்.

அதன் பிற்பாடு பத்தாண்டுகளின் பின்னர் 1982ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி தென்னைமரவடி, புல்மோட்டை, பதவிசிறிபுர. பரண மதவாச்சி ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகள் அநுராதபுர மாவட்டத்திலிருந்து எடுக்கப்பட்டு மீண்டும் திருகோணமலை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன. தென்னைமரவடி, புல்மோட்டை ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகள் மீண்டும் குச்சவெளி உதவி மாவட்டச் செயலர் பிரிவுடன் இணைக்கப்பட்டன. அநுராதபுர மாவட்டத்திலிருந்து எடுக்கப்பட்டு புதிதாக திருகோணமலை மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட பரண மதவாச்சி, பதவிசிறிபுர, ஜயந்திவீவ ஆகிய கிராமசேவையாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கி பதவிசிறிபுர என்ற புதியதொரு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு திருகோணமலை மாவட்டத்தின் வட மேற்குப் பகுதியில் உருவாக்கப்பட்டது.

1972ஆம் ஆண்டு இந்தப்பிரதேசங்கள் அநுராதபுர மாவட்டத்தோடு இணைக்கப்படும் போது இங்கு 672 சிங்களவர் மட்டுமே காணப்பட்டனர். ஆனால் 1982ஆம் ஆண்டு இந்தப் பிரதேசங்கள் மீண்டும் திருகோணமலை மாவட்டத்துடன் இணைக்கப்படும்போது சிங்களவர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்து 50. இந்தக் காலப்பகுதியில் இப் பிரதேசங்களில் தமிழர்களின் எண்ணிக்கை 62 சதவீதத்தினாலும் முஸ்லிம்களின் தொகை 48 சதவீதத்தாலும் அதிகரிக்க சிங்களவர்களின் தொகையோ ஆயிரத்து 693 சதவீத்தினால் அதிகரித்தது.


இந்த மாற்றங்களைத் தொடர்ந்து பிரதேசத்தின் இனவிகிதாசாரம் பெரும் மாற்றத்திற்குள்ளாகியது. 1972 - 1982 இடைப்பட்ட பத்தாண்டு காலப்பகுதியில் இந்தப் பிரதேசத்தின் மொத்தச் சனத்தொகையில் தமிழர்களின் பங்கு 17 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகவும் முஸ்லிம்களின் பங்கு 68 சதவீதத்திலிருந்து 26 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்தது. ஆனால் சிங்களவர்களின் பங்கு 14.5 சதவீதத்திலிருந்து 66.6 சதவீதமாக அதிகரித்தது. 1972ஆம் ஆண்டு இந்தப் பிரதேசங்கள் அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கும் போது ஒவ்வொரு 100 தமிழருக்கும் 83 சிங்களவர்கள் காணப்பட்டனர். ஆனால் 1982ஆம் ஆண்டு இந்தப் பிரதேசங்கள் மீண்டும் திருகோணமலை மாவட்டத்துடன் இணைக்கும் போது ஒவ்வொரு 100 தமிழருக்கும் 918 சிங்களவர்கள் காணப்பட்டனர். இதனைத் தொடர்ந்தே திருகோணமலை மாவட்டத்தின் வட மேற்குப் பகுதியில் 217 சதுர கிலோமீற்றர் பரப்புடைய பதவிசிறிபுர என்ற ஒரு சிங்கள உதவி மாவட்டச் செயலர் பிரிவு உருவாக்கப்பட்டது.

### எல்லை நிர்ணய மாற்றங்கள் சிங்கள ஆக்கிரமிப்பு வடிவமே

இவ்வாறான செயற்றிட்டங்கள் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் 1901ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டில் மொத்தச் சனத்தொகையின் 60 வீதமாக பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழர்கள் 2012ஆம் ஆண்டு குடிசனமதிப்பீட்டில் மொத்தச் சனத்தொகையின 32.3 வீதமாக்கப்பட்டு 3ஆம் தரப்பிரஜைகள் ஆக்கப்பட்டனர். ஆக இவ்வாறான நிர்வாகப் பிரதேசங்களின் எல்லை மாற்றங்களும் மறைமுகமான சிங்களக் குடியேற்ற நடவடிக்கையேயாகும். இதன் மூலம் தமிழர் பிரதேசத்தின் இனவிகிதாசாரத்தினை பெருமவில் மாற்றியமைக்கமுடியும் என்பதனை கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்வாக எல்லை மாற்றத்தின் மூலம் அரங்கேற்றி அதில் வெற்றி கண்ட சிங்கள அரசு இன்று அதனை வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் எல்லைகளினை மீள் நிர்ணயம் செய்வதன் மூலம் இனவிகிதாசாரத்தினை திட்டமிட்டு மாற்றியமைக்கின்றது. சுடுசோற்றினை உண்ண முற்படுகின்ற ஒருவர் சுடு சோற்றின் நடுவே கையை வைத்தால் சூடு தாங்காமல் உடனே கையை எடுக்கவேண்டியிருக்கும். ஆனால் சுடுசோற்றின் ஓரத்திலிருந்து உணவருந்த ஆரம்பித்தால் எதுவித பிரச்சினைகளுமின்றி முழு உணவையும் உண்ணமுடியும். தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளத் திட்டமிட்ட தமிழர்களின் பாரம்பரிய பூமியில் சிங்களவர்களைக் குடியமர்த்தி சொந்த மண்ணில் தமிழர்களைச் சிறுபான்மையினராக மாற்றுவதற்கு அரசாங்கம் இத்தத்துவத்தினையே கிழக்கில் கையாண்டு அதில் வெற்றியும் கண்டது. கிழக்கில் அதன் வெற்றியைத் தொடர்ந்து இன்று வடக்கு மாகாணத்தின் தமிழர் பிரதேசங்களின் எல்லைகளில் அத் தத்துவத்தினை கையாளத் தொடங்கியுள்ளது.

மாறி மாறிவரும் சிங்கள பௌத்த அரசாங்கங்கள் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்ற கருத்தியலை உடைப்பதற்கு ஏற்றவகையில் தமிழரின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாட்டினை செயல் வடிவில் தற்போதுவரை செம்மையாகச் செயற்படுத்துகின்றது. ஆனால் நாம் எமக்குள்ளேயே துரோகிப் பட்டங்களை வழங்குவதற்கும் தியாகிப்பட்டங்களை தனதாக்கிக் கொள்வதற்கும் முழுவீச்சாக செயற்படுகின்றோமே தவிர தாயகக் கோட்பாட்டைச் சிதைக்கும் எதிரியின் செயல்ரீதியான செயற்பாட்டினை எதிர்ப்பதற்கு ஒன்றுபடுவதில்லை. இந்நிலை தொடருமாயின் ஏறத்தாள 25 வருடங்களுக்கு முன்னர் சிங்கள வரலாற்றுப் பேராசிரியர் கே.எம்.டி.சில்வா எழுதிய 'தமிழர் தாயகம் ஒரு மாயை' என்ற நூலின் தலைப்பு போல் ஆகிவிடும். ஏனெனில், 1981ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தின் நிர்வாக எல்லைகளை மாற்றியமைத்து பதவிசிறிபுர என்ற தனிச்சிங்கள உதவி மாவட்டச் செயலர் பிரிவு ஒன்றினை உருவாக்கி திருகோணமலை மாவட்டத்தின் இனப்பரம்பலை மாற்றியமைத்தனர். 2011ஆம் ஆண்டு அதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்தின் நிர்வாக எல்லைகளை மாற்றியமைத்து வெலிஓயா என்ற தனிச் சிங்கள பிரதேச செயலர் பிரிவு ஒன்றினை அமைத்து. முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்களவர்களின் இனப்பரம்பலை அதிகரித்தனர். 2023ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தின் நிர்வாக எல்லைகளை மாற்றியமைத்து வவுனியா மாவட்டத்தின் இனம்பரம்பலை மாற்றியமைக்க திட்டமான்றை முன்மொழிந்துள்ள னர். ஆக, வரலாற்றில் இருந்து பாடம் கற்காவிடின் எனி வரப்போகும் வரலாற்றில் எமது இனத்திற்கு என்று ஓர் இடம் இருக்காது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
25 ஜூன் 2023



# மனித உரிமைகளும் புவிசார் அரசியலும்

குருமன்காட்டாள் வன்னிகா

இலங்கையில், பொறுப்புக்கூறல் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அம்சங்களை இலங்கை அரசாங்கம் வருந்தத்தக்க வகையில் நிராக ரித்துள்ள போதிலும், அந்த அர்சாங்கம் இலங்கையில் எங்களின் செயற்பாடுகளுடன் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. கடந்த பத்து வருட காலத்தில் "இலங்கைக்கு ஐ.நா. அதிகாரிகள் பலர் கடமைகளை நிறைவேற்றவென விஜயம் செய்துள்ளனர். மேலும் அவர்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரச அதிகாரத் தரப்பினரையும் அதிகாரிகளையும் நான் ஊக்குவிக்கிறேன்" என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்க்கர் ரேர்க் தெரிவித்தார். 19.06.2023 அன்று ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலகின் வன்முறை முரண்பாடுகள் நிலவும் ஹொலம்பியா, ஹொண்டூரஸ், குவாட்டமாலா, பெரு, பொலிவியா, உகண்டா, கென்யா, மவுறிற்றேனியா, மாலி, கம்போடியா, பிலிப்பைன்ஸ், உக்ரைன், ரஷ்யா, ஆர்மேனியா, அசர்பைஜான்,ஆப்கானிஸ்தான், ஈரான் முதலிய வேறும் பல நாடுகள் குறித்தும் இவ்வுரையில் குறிப்பிட்டார். மனித உரிமைகள் வெவ்வேறு சூழ்நிலைகளில் கேள்விக்குள்ளாகும் நிலைமைகளையிட்டு கவலை வெளியிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இவ்வாறு கவலை வெளியிடுவது "ஒருவித சம்பிரதாயமாகவே" தொடர்கிறது. மனித உரிமை மீறல்களால் பல்வேறு வன்முறைக் களங்களிலும் போர்க்களங்களிலும் பாதிக்கப்பட்ட மனித சமுதாயங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு பலமான முறையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அணுகுமுறைகள் விரைவான நிவர்த்திகளை வழங்காது. எனினும் மனித உரிமைகள் மீறல் தொடர்பான ஆவணப்படுத்தல் மற்றும் தொடர்ச்சியான அறிக்கையிடல்கள் மனித உரிமைகளை மீறியோருக்கு பிரசாரரீதியாக பெரும் அழுத்தங்களைக் கொடுக்கவல்லது.

ஐ.நா. சபை தொடர்பில் எமது அயல் நாடான இந்தியா உட்பட பல வல்லரசுகள் அதிருப்தியுற்றிருக்கும் காரணங்கள் தமது புவிசார் அரசியல் உபாய நலன்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. தென்னாசியப் பிராந்தியத்தின் அல்லது உலகின் வேறு பிராந்தியங்களின் மக்கள் சமூகங்களின் பல்வேறு வகையான மனித உரிமைகள் தொடர்பான அக்கறைகளுடன் சம்பந்தப்பட்டதாக இந்தியா போன்ற வல்லரசுகளின் அணுகுமுறைகள் அமையும் என எதிர்பார்க்க முடியாது.

ஐ.நா. பாதுகாப்பு அவையின் நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றும், ஐ.நா.வில் சீர்திருத்தம் நிகழவில்லை என்றும் இந்தியா, ஜேர்மனி ஜப்பான், பிரேசில் ஆகிய நாடுகள் அதிருப்தி கொண்டுள்ளன. ஐ.நா. பொது அவையின் 77 ஆவது அமர்வு 2022 செப்ரெம்பரில் தொடங்கியபோது இந்தியா, ஜப்பான், ஜேர்மனி, பிரேசில் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் நியூயோர்க்கில் ஆலோசனை மேற்கொண்டனர்.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், ஜப்பான் வெளியுறவு அமைச்சர் யோஷிமாசா ஹயாஷி, ஜேர்மனி வெளியுறவு அமைச்சர் அன்னலீனா பேர்போக், பிரேசில் வெளியுறவு அமைச்சர் கார்லஸ் அல்பெர்டோ ஃபிரான்கோ ஃபிரான்கா ஆகியோர் மேற்கொண்ட ஆலோசனையை அடுத்து கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.

உலக அளவில் நிகழ்ந்து வரும் மோதல்கள், அதிகரித்து வரும் சிக்கல்கள், நாடுகளுக்கு இடையே பின்னிப் பிணைந்துள்ள சவால்கள் ஆகியவை ஐ.நா.வின் முக்கியமான அமைப்புகளில் சீர்திருத்தத்துக்கான அவசியத்தை வலியுறுத்துகின்றன என அந்தக்கூட்டறிக்கை சுட்டிக் காட்டியது. உலகம் எதிர்கொண்டு வரும் சவால்களை திறம்பட எதிர்கொள்ள இயலாத நிலையில் ஐ.நா. பாதுகாப்பு அவை இருப்பதை ஐ.நா. ஒப்புக்கொள்கிறது எனவும் அந்தக் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எனவே, மாறி உள்ள புவிசார் அரசியலை கருத்திற் கொண்டும், பிராந்தியங்களுக்கான பிரதிநிதித்துவத்தை கருத்தில் கொண்டும் ஐ.நா. பாதுகாப்பு அவை சீர்திருத்தப்பட வேண்டும் என அவ்வல்லரசுகள் தமது கூட்டறிக்கையில் வலியுறுத்தின. அதன்மூலமே, உலகம் எதிர்கொள்ளும் சவால்களை திறம்பட எதிர்கொள்ள முடியும்.

ஐ.நா. பாதுகாப்பு அவையில் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்கான அரசுகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தையில் அர்த்தமுள்ள முன்னேற்றம் ஏற்படாதமை குறித்து இந்தியா, ஜப்பான், ஜேர்மனி, பிரேசில் ஆகிய ஜி - 4 நாடுகள் 2021 இல் நடைபெற்ற ஐ.நா. பொது அவையின் 76 ஆவது அமர்வின்போதே தங்கள் கவலையைத் தெரிவித்திருந்தன. 77 ஆவது அவையின் போதும் நிலைமை அப்படியேதான் இருந்தது. அரசுகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தையில் வெளிப்படைத்தன்மை இல்லை.

ஐ.நா.வின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு ஆக்கபூர்வ முடிவுகளை எடுப்பதாக ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது ஜி - 4 நாடுகளுக்கு மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. எழுத்துபூர்வமான பேச்சுவார்த்தையை நோக்கி படிப்படியாக முன்னேற நடவடிக்கை எடுக்கப்படும் என்ற 76 ஆவது அவையின் தலைவரது வாக்குறுதியை ஜி - 4 நாடுகள் வரவேற்றன. இந்த வாக்குறுதி 77 ஆவது அவையின் அனைத்து உறுப்பினர்களாலும் பின்பற்றப்படும் என தாம் நம்புவதாக அந்தக்கூட்டறிக்கையில் ஜி - 4 நாடுகள் கூறின. பாதுகாப்பு அவையின் நிரந்தர மற்றும் தற்காலிக உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை விரிவுபடுத்த வேண்டும் என்பதையும் அதன்மூலமே மேலும் வலிமையுடன் செயற்படமுடியும் என்பதையும் இந்தியா, ஜப்பான், ஜேர்மனி, பிரேசில் ஆகிய ஜி - 4 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் வலியுறுத்தினர். ஜி - 4 நாடுகள் அனைத்தும் ஐ.நா.பாதுகாப்பு அவையில் நிரந்தர உறுப்பு நாடுகளாக மாற தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இந்தக் குழுவில் உள்ள ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளை இந்த விடயத்தில் ஆதரிக்கின்றன்.

அதோடு, ஆபிரிக்காக் கண்டத்துக்கு ஐ.நா .பாதுகாப்பு அவையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் என்பதையும் இந்த 4 நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன. இந்தியா, ஜப்பான், ஜேர்மனி, பிரேசில் ஆகிய வல்லரசுகள் ஐ.நா.வின் தீர்மானங்களின் அமுலாக்கத்திற்கு அவசியமான பாதுகாப்புக் கட்டமைப்பான ஐ.நா. பாதுகாப்பு அவையில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுவதன் வாயிலாக, தமக்கான நிரந்தரமான அங்கத்துவத்தையும் அங்கீகாரத்தையும் நீண்ட காலமாக எதிர்பார்க்கின்றன. இந்தியா உள்ளிட்ட அந்த வல்லரசுகளின் முயற்சிகள் முன்னேற்றம் காணவில்லை.

இந்தியா எதிர்பார்க்கும் அவ்வாறான சீர்திருத்தம் ஐ.நா. பாதுகாப்புச்சபையில் இனிமேலும் நிகழாவிட்டால், தமது புவிசார் அரசியல் நலன்கள் உறுதிப்படுத்தப்படாத நிலையில், இந்தியா உட்படப் பல நாடுகள் ஐ.நா. சபையின் பிரதான கட்டமைப்புகள் மற்றும் துணைக் கட்டமைப்புகள் ஆகியவற்றின் தீர்மானங்கள், அறிக்கைகளில் அசிரத்தையும் ஆர்வமின்மையும் காட்டத் தொடங்கும்.

[illegible] அந்த வல்லரசுகள் ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவம் பெறும் முயற்சியில் , ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அணுகுமுறைகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவுமா என்பதே கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையிடல்களையும் தீர்மானங்களையும் இத்தகைய வல்லரசுகள் ஆதரித்தல் அல்லது ஆதரிக்காமல் விடுதல் அல்லது நடுவு நிலைமை வகித்தல் போன்றவையெல்லாம் அத்தகைய புவிசார் நலன்களின் உபாயங்களில் பெரிதும் தங்கியுள்ளன. தொடர்ந்து மிகக் கடுமையாக இந்தியா ஐ.நா.பாதுகாப்புச்சபையில் நிரந்தர அங்கத்துவத்துக்காக இராஜ தந்திர ரீதியில் பாடுபட்டுவருகிறது. அத்தகைய பின்புலத்தில் எவ்வளவு தூரத்துக்கு ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் பேசப்படும் இலங்கை விவகாரம் முக்கியத்துவம் பெறும்?

இந்தியாவின் பாதுகாப்புச்சபை அங்கத்துவத்திற்கான முயற்சியில் புவிசார் அரசியல் நோக்கங்கள் இருக்கின்றன. அதுபோல இந்திய - இலங்கை உறவிலும் அதே புவிசார் அரசியல் நோக்கங்கள் இருக்கின்றன.

அதனால் இலங்கையின் இனப்பிரச்சினை என்பதை இந்தியா மனித உரிமைப் பிரச்சினையாகப் பார்க்காது. இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் இலங்கையின் தமிழ்ப்பிரதேசங்களில் இடம்பெற்ற இந்திய இராணுவ நடவடிக்கைகளும் இறுதிப் போர்க்காலங்களில் இலங்கைக்கான இந்தியப் படைகளின் ஒத்துழைப்புக்களும் கூட , இலங்கைத் தமிழர் விவகாரத்தை மனித உரிமைப் பரிமாணத்தில் பார்க்க, இந்திய ஆளும் வர்க்கத்திற்கு இடம் தராது. இலங்கையின் போர் முடிவுறுத்தப்பட்ட விதம் தொடர்பில் சிறுபான்மை இனங்கள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மூலம் கொண்டிருக்கும் எதிர்பார்ப்பு தமிழ் ஊடகச் செய்தி அளிக்கைகளில் அதிகம் பிரதிபலிக்கும். அது பாதிக்கப்பட்டவர்களின் எதிர்பார்ப்பாகும்.

இலங்கை அரசின் உள்நாட்டுப் போர் நடத்தப்பட்ட விதம் தொடர்பான மனித உரிமைகள் விடயமும் இந்திய அரசு காஷ்மீர் உள்ளிட்ட பல உள் நாட்டுப் போர்களை நடத்தும் விதம் தொடர்பான மனித உரிமைகள் விடயமும் "மறுக்கப்படும் மனித உரிமைகள்" எனும் அடிப்படையில் ஒரே விடயங்களே. ஆக மொத்தத்தில் தமிழ் சிவில் சமூகமும் தமிழ் அரசியல் கட்சிகளும் பொருத்தமான இராஜ தந்திர அணுகுமுறையைக் கடைப்பிடிக்க முயலவேண்டும். இலங்கையில் நடந்து முடிந்த போரில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மீண்டும் நிகழாமல் இருக்கும் சமூகஅரசியல் நீதி நிர்வாகச்சூழலை உருவாக்குதலும் தமிழ் மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அரசியல் தீர்வு காணப்படுதலும் தமிழினத்தின் இராஜதந்திர அணுகுமுறையின் இலக்குகளாக அமைய வேண்டும்.

இலங்கையின் மனித உரிமை விவகாரத்தில் நடுவு நிலைமை வகிக்கும் இந்திய அரசாங்கத்தின் வகிபாகத்தையும், ஐரோப்பிய, அமெரிக்க அரசியல் சக்திகள் மத்தியிலிருந்து எழும் குரல்களையும், அதேவேளை மானிட நேயம் எனும் அடிப்படையில் முற்போக்கான சிங்கள மக்கள் மத்தியிலிருந்து எழும் சமூக பொருளாதாரஅரசியல் மாற்றங்களுக்கான குரல்களையும் முயற்சிகளையும் தமிழர் தரப்பு இராஜதந்திரத்தால் பொருத்தமான அணுகுமுறைகள் மூலம் பயன்படுத்த வேண்டும்.

# ஐ.எம்.எஃப்பை கையாள முடியாத தமிழர்கள்?

நிலாந்தன்




ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் கடந்த 19ஆம் திகதி ஆரம்பமாகியது. இந்தக்கூட்டத்தொடரில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கை வாசிக்கப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக மனித உரிமைகள் கூட்டத் தொடரை நோக்கிய தமிழ் மக்களின் கவனக்குவிப்பு ஒப்பீட்டளவில் குறைந்து விடுகின்றது. ஐரோப்பாவை மையமாகக் கொண்டு இயங்கும் தமிழர் அமைப்பு என்ற ஓர் அமைப்பு ஐ.நா. விவகாரங்களில் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றது. அதேசமயம் இம்முறை நாட்டிலிருந்து மனித உரிமைகள் கூட்டத்தொடருக்கு அரசியல்வாதிகள் யாரும் சென்றிருக்கவில்லை. அண்மைய ஆண்டுகளாக மனித உரிமைகள் கூட்டத்தொடருக்குச் செல்லும் தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கிவிட்டது. இந்த விடயத்தில் தமிழ்த்தரப்பிடம் ஒருவித சோர்வு அல்லது ஊக்கமின்மை காணப்படுகின்றது. இதற்குக் காரணம் என்ன?

இத்தனைக்கும் கடந்த ஆண்டிலிருந்து ஐ.நா. இலங்கை இனப்பிரச்சனை தொடர்பில் ஒரு பொறிமுறையை உருவாக்கிச் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரித்து வருகின்றது. இந்தப் பொறிமுறை சிரியா போன்ற இடங்களுக்கு உருவாக்கப்பட்ட ஒரு பொறிமுறையைப் போன்ற பலமான ஒன்று இல்லைத்தான். அது ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு உட்பட்ட ஒன்றுதான். என்றாலும் தமிழர்களுக்குச் சாதகமான ஒரு நகர்வு அது. அதில் ஒன்றுமே இல்லை என்று நிராகரிக்கமுடியாது. சரியோ பிழையோ, போதுமோ போதாதோ அது ஈழத் தமிழர்களுக்குச் சாதகமானது. அதில் சேகரிக்கப்படும் சான்றுகளும் சாட்சிகளும் போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகளில் பெறுமதியானவை. எனவே அப்பொறிமுறையை தமிழர்கள் நீண்ட கால நோக்கில் கையாளவேண்டும். ஆனால் அவ்வாறு கையாள்வதற்குரிய அரசியல் தரிசனமோ கட்டமைப்புகளோ வழிவரைபடங்களோ ஈழத்தமிழர்களிடம் உண்டா?

ஐ.நா.வைக் கையாள்வது என்பது அதன் எல்லாப் பரிமாணங்களிலும் வெளியுறவுக் கொள்கை சார்ந்த ஒரு விடயந்தான். நிச்சயமாக மனிதாபிமான அல்லது நீதிநெறி சார்ந்த அல்லது அறநெறி சார்ந்த ஒரு விடயம் அல்ல.



எனவே ஐ.நா.. உட்பட மேற்கு நாடுகளையும் பிராந்தியத்தில் இந்தியாவையும் சீனாவையும் கையாள்வதற்குத் தேவையான ஒரு வெளியுறவுத் தரிசனம் அல்லது கொள்கை தமிழ்த்தரப்பிடம் உண்டா? அப்படி ஒரு வெளியுறவுக் கொள்கை இருந்தால்தான் அதற்குத் தேவையான வெளியுறவுக் கட்டமைப்பும் இருக்கும். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழர்கள் ஐ.நா.வை கட்டமைப்புச் சார்ந்து ஒரு மையத்தில் இருந்து அணுகவில்லை என்பதே உண்மை நிலையாகும்

சில ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் சுமந்திரன் சொன்னார். வெளியுறவுக் கொள்கையை வெளிப்படையாக விவாதிக்க முடியாது என்று. ஆனால் அவர் அப்படிச் சொன்னதன் பொருள் அவரிடம் ரகசியமான ஒரு வெளியுறவுக் கொள்கை உண்டு என்பதல்ல. அவரிடம் வெளியுறவுக் கொள்கையே இல்லை என்றுதான் பொருள். அப்பொழுதும் இல்லை இப்பொழுதும் இல்லை. ஏனெனில் அப்படி ஒரு கொள்கை இருந்திருந்தால் அதைக் கையாள்வதற்கு தமிழரசுக் கட்சியிடம் ஒரு கட்டமைப்பு இருந்திருக்கும். ஆனால் அந்தக்கட்சியிடம் கட்டமைப்புசார் அணுகுமுறை இல்லை. அதனால் தனி நபர் ஓட்டங்களே அதிகமாக உள்ளன. தமிழரசுக் கட்சியிடம் மட்டுமல்ல பூகோள அரசியல் குறித்து அதிகமாகக் கதைக்கும் கஜேந்திரகுமாரிடமும் ஒரு வெளியுறவுக் கொள்கை உண்டா? கொள்கையிருந்தால் அதை நடைமுறைப்படுத்த ஒரு கட்டமைப்பு இருந்திருக்கும். தமிழ்த் தேசியப் பரப்பில் வெளியுறவு அணுகுமுறை அல்லது வெளிநாடுகளை நோக்கிய அணுகுமுறை என்று தொகுத்துப் பார்த்தால் கடந்த 14 ஆண்டுகளாக பின்வரும் போக்குகளை அவதானிக்க முடியும்.

சுமந்திரன் மற்றும் சம்பந்தரிடம் துலக்கமான ஒரு வெளியுறவுக் கொள்கை இல்லை. சுமந்திரன் அதிகம் மேற்கை நோக்கிச் சாயும் ஒருவராகப் பார்க்கப்படுகிறார். ஆனால் இந்தியாவைப் பகைப்பதில்லை. அதேசமயம் தமிழரசுக் கட்சிக்குள் தனிப்பட்ட உறுப்பினர்களிடம் இந்தியாவை நோக்கிய சாய்வு உண்டு. அது வெளியுறவுக் கொள்கை சார்ந்த நிலைப்பாடு என்பதைவிடவும் கட்சிக்குள் தமது ஸ்தானத்தைப் பலப்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கை என்றே எடுத்துக் கொள்ளவேண்டும். கடந்த 14 ஆண்டு கால தமிழரசுக் கட்சியின் வெளியுறவு நிலைப்பாடுகளைத் தொகுத்துப் பார்த்தால் அந்தக்கட்சியானது. அதிகம் மேற்கை நோக்கியே சாய்கின்றது. அதேசமயம். பலமான நாடுகளின் இழுவிசைகளுக்கிடையே பேர அரசியலை முன்னெடுக்கத் தவறியிருக்கிறது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரை அதுவும் ஒரு மேற்கை நோக்கிய கட்சிதான். அது திட்டவட்டமாக இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களை எதிர்க்கப் போவதில்லை என்று அந்தக்கட்சி அறிக்கைகளில் கூறிக் கொண்டாலும், நடைமுறையில் தனது எதிரிகளை இந்தியாவின் அடிவருடிகள் அல்லது கைக்கூலிகள் என்று கூறுவதன்மூலம் அது இந்தியாவை ஒரு எதிர்த்தரப்பாகவே உருவகப்படுத்துகின்றது. இந்தியாவை ஒரு எதிர்த்தரப்பாகக் கருதினால் அதன் தர்க்கபூர்வ விளைவாக மேற்கைத்தான் கையாள வேண்டியிருக்கும். கடந்த 14 ஆண்டுகால அக்கட்சியின் நடவடிக்கைகளைத் தொகுத்துப் பார்த்தால். அது மேற்கை நோக்கிய ஒரு கட்சிதான். ஆனால் அந்தக்கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்னவென்றால். முன்னணியானது வெளிப்படையாக பலமான நாடுகளை நோக்கிச் சாய்வதில்லை என்பதுதான். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழரசுக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளையும் தவிர்த்துப் பார்த்தால் விக்னேஸ்வரனின் கட்சி ஒப்பீட்டளவில் இந்தியாவை நோக்கிச் சாய்வதாகத் தெரிகிறது. 13ஐ முழுமையாக அமுல்படுத்துவதற்குரிய ஒரு நடைமுறை வழிவரைபடத்தை விக்னேஸ்வரன் இப்பொழுது முன்வைக்கின்றார். அது இந்தியாவை நோக்கிய ஒரு சாய்வுதான்.

இவைதவிர ஏனைய கட்சிகள் அதாவது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் காணப்படும் கட்சிகளைத் தொகுத்துப் பார்த்தால், அவை இந்தியச் சாய்வு நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள்தான். அதில் உள்ள பெரும்பாலான கட்சிகள் முன்பு இந்தியாவோடு சேர்ந்து உழைத்தவை. இப்பொழுதும் இந்தியாவுக்கு விசுவாசமானவை. மேலும் அந்தக்கூட்டுக்குள் காணப்படும் ஜனநாயகப் போராளிகள் கட்சியும் அண்மைக் காலங்களில் இந்தியாவை அதிகம் நெருங்கிச் செல்லும் ஒரு கட்சியாகத்தான் பார்க்கப்படுகிறது. அந்தக்கூட்டமைப்புக்குள் இருப்பவை அநேகமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புகள். அதில் ரெலோவையும் புளொட்டையும் தவிர ஏனைய கட்சிகளுக்கு குறிப்பிட்டுச் செல்லக்கூடிய மக்கள் ஆணை கிடையாது. எனவே தொகுத்துப் பார்த்தால் ஜனநாயகக்கூட்டமைப்புத்தான் ஒப்பீட்டளவில் வெளிப்படையாக இந்தியச் சாய்வுடைய ஒரு வெளியுறவு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. எனவே தமிழ்த் தேசியப் பரப்பில் காணப்படும் கட்சிகளை அல்லது கட்சிக்கூட்டுக்களைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது இதில் ஒப்பீட்டளவில் இந்தியாவை விடவும் மேற்கே நோக்கி அதிகம் சாய்கின்ற கட்சிகள்தான் பலமாக இருக்கின்றன என்பது தெரிகிறது. அவ்வாறு மேற்கை நோக்கிய வெளியுறவு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன என்றால் மேற்படி கட்சிகள் ஐ.நா.வையும் கட்டாயம் கையாள வேண்டும். ஏனென்றால் மேற்கத்திய ராஜதந்திர பரப்புக்குள்தான் ஐ.நா.வும் வருகின்றது. ஆனால் மேற்படி கட்சிகளிடம் ஐ.நா.வைக் கையாள்வதற்குரிய சரியான வழிவரைபடம் ஏதும் இருக்கின்றதா ? இங்கு ஒரு முக்கியமான விடயத்தைச் சுட்டிக் காட்டவேண்டும். கடந்த 2021 ஆம் ஆண்டு ஐ.நா. கூட்டத் தொடரை முன்னிட்டுத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் மூன்றையும் இணைத்து ஒரு கடிதம் எழுதப்பட்டது. கடிதத்தில் ஒரு முக்கியமான விடயம் கேட்கப்பட்டது. பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போகவேண்டும் என்பதே அது. எனவே பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே எடுத்து ஐ.நா. பொதுச்சபையானது அதனை சர்வதேச நீதிமன்றங்களை நோக்கிக் கொண்டுபோகவேண்டும் என்ற தொனிப்பட மேற்படி கடிதம் எழுதப்பட்டது. இந்தக்கோரிக்கை முன்வைக்கப்பட்டு கிட்டத்தட்ட முப்பது மாதங்கள் ஆகின்றன. ஆனால் அந்தக்கோரிக்கையை நோக்கி மேற்படி கட்சிகள் எந்தளவுக்கு உழைத்திருக்கின்றன ?

எந்த ஒரு கட்சியும் அவ்வாறு உழைக்கவில்லை என்றே தெரிகிறது. அவ்வாறு உழைத்து இருந்திருந்தால் ஒரு பொருளாதார நெருக்கடியின் போது இலங்கை அரசாங்கத்தைப் பிணையெடுக்க முற்பட்ட மேற்கத்திய நாடுகள் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்து இருந்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறான நிர்ப்பந்தங்கள் எவையும் பிரயோகிக்கப்படவில்லை என்பதைத்தான் நாட்டில் நடக்கும் சிங்கள - பௌத்த மயமாக்கல் நமக்கு உணர்த்துகின்றது. ஐ.எம்.எஃப்.உலக வங்கி போன்றன பெருமளவுக்கு மேற்கத்திய ராஜதந்திரப் பரப்புக்குள் காணப்படும் உலகப் பொதுக் கட்டமைப்புகள். எனவே மேற்கைக் கையாள்வது என்ற நடைமுறையைக் கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகள் ஐ.எம்.எஃப்பை வெற்றிகரமாகக் கையாண்டிருக்கின்றனவா? அல்லது பலமிக்க புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் அதைச் செய்திருக்கின்றதா?

அவ்வாறு செய்திருந்தால் நிதி உதவியும் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற நிபந்தனையும் ஒன்றிலிருந்து மற்றது பிரிக்கப்பட முடியாதபடி பிணைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு பிணைக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, ஐ.எம்.எஃப். பிரதிநிதிகள், தென்னிலங்கையிலுள்ள சிவில் சமூகங்களைச் சந்தித்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவ்வாறு தமிழ்ச் சிவில் சமூகங்களை ஏன் இதுவரை சந்திக்கவில்லை? எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து ரணில் விக்ரமசிங்கவை காப்பாற்றுவதான மேற்கு நாடுகளின் நிலைப்பாடு எனப்படுவது, தமிழ்க் கட்சிகளின் மேற்கை நோக்கிய அணுகுமுறையின் இயலாமையைக் காட்டுகிறது. ஐ.எம்.எஃப்பின் உதவிகள் கிடைக்கும் ஒரு காலகட்டத்திலேயே சிங்கள- பௌத்தமயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்படு கின்றமை என்பது அந்த இயலாமைக்குச் சான்று. அரசாங்கம் ஒருபுறம் ஐ.நா.வின் நிலைமாறு கால நீதிக்கான கட்டமைப்புகளில் ஒன்றாகிய உண்மை மற்றும் நீதிக்கான ஆணைக்குழுவை உருவாக்கப்போவதாக அறிவித்திருக்கிறது. ஆனால் அதற்குச் சமாந்தரமாக சிங்கள-பௌத்த மயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றது. ஆயின், அரசாங்கம் பொறுப்புக்கூறலுக்கு அதாவது நிலைமாறு கால நீதிக்கு விசுவாசமாக இல்லை என்று பொருள்.

எனினும் ஐ.எம்.எஃப்பும் மேற்குநாடுகளும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்ந்து உதவுகின்றன என்றால், புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் உட்பட தமிழ்த்தரப்பு மேற்கு நாடுகளை பொருத்தமான விதங்களில் கையாள்வதில் தோல்வி அடைந்துவிட்டது என்று தானே பொருள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்றில் 12

○ இயல்வாணன்



முத்து இராதாகிருஷ்ணன்

ஓவியர், நாடகர், சிறுகதை எழுத்தாளர், கவிஞர், சிறுவர் இலக்கியப்படைப்பாளி, உளஆற்றுப்படுத்துநர், இசையாளர், கல்வியியலாளர் எனப் பலதளங்களில் செயற்பட்டவர் மூத்த கல்வி நிர்வாகசேவை அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள முத்து இராதாகிருஸ்ணன். இவர் தெல்லிப்பழை வறுத்தலைவிளானை பூர்வீகமாகக் கொண்டவர். 23.06.1963இல் யாழ்ப்பாணத்தில் பிறந்தார். தந்தையார் முத்துக்குமாரு தொழில்முறையில் சட்டத்தரணி. தாயார் தனேஸ்வரி சுதுமலைச் சகோதரிகளுள் ஒருவராக கர்நாடக இசைக் கச்சேரிகள் நடத்தியவர். தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் வித்தியாலயம், திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி, திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம், யாழ்ப்பாணம் சன்மார்க்க வித்தியாலயம் ஆகியவற்றில் கற்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புவியியல் சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்றார்(1986). 1993இல் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும், 2005இல் முதுகல்விமாணிப் பட்டத்தையும் பெற்றார்.

1982ஆம் ஆண்டு சித்திர பாட ஆசிரியராக நியமனம் பெற்று ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கடமையாற்றிய இவர் புவியியல் பட்டதாரி ஆசிரியராக அனலைதீவு சதாசிவ வித்தியாலயம், வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கடமையாற்றினார். 1999இல் இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளராகப் பொறுப்பேற்றார். தொடர்ந்து பிரதிக் கல்விப் பணிப்பாளராக, மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராக, வவுனியா தெற்கு மற்றும் யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றிய இவர் தரம் 1 சிரேஸ்ட அதிகாரியாக விளங்குகிறார்.

கல்வித்துறையில் வடக்கு - கிழக்கு மாகாண ஆரம்பக்கல்வி, அழகியற்கல்வி, விசேட கல்வி, உளவளத்துணை, கண்ணிவெடி அனர்த்த விழிப்புணர்வு முதலான செயற்றிட்டங்களின் இணைப்பாளராகவும், பொறுப்புவாய்ந்த அதிகாரியாகவும் கடமையாற்றி, பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளார். தொலைக்கல்விப் போதனாசிரியராகவும், தேசிய கல்வியியற் கல்லூரி வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

ஓவியத்தில் ஆர்வங் கொண்ட இவர் சன்மார்க்க வித்தியாலயத்தில் தரம் - 10 மாணவனாகப் படித்துக் கொண்டிருந்த காலத்தில் சித்திரக்கதைப் புத்தகம் ஒன்றைத் தயாரித்திருக்கிறார். பல்கலைக்கழகத்தில் பயின்ற வேளை 'புவியியலாளன்' சஞ்சிகையில் கட்டுரை எழுதியிருக்கிறார். 80 களின் நடுப்பகுதியில் மாணவர் போராட்ட அமைப்புகளின் சஞ்சிகைகளில் எழுதியிருக்கிறார். களத்தில், ஊற்று, நெம்பு, தாயகம், வெளிச்சம், சுபமங்களா, சரிநிகர், கணையாழி, தாமரை, புதிய ஊற்று, புதுவசந்தம் முதலான பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இவரது சிறுகதைகள், கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

வெளிச்சம் சஞ்சிகையில் கோபாலி என்ற பெயரில் இவரது ஓவியங்கள் வெளிவந்தன. அவ்வாறே தாயகம், சுபமங்களா சஞ்சிகைகளிலும் இவரது ஓவியங்கள் வெளிவந்துள்ளன. இவரது நூல்கள் உட்படப் பல நூல்களுக்கு அட்டைப்படங்களையும் இவர் வரைந்துள்ளார். வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட கவின்தமிழ், முழுநிலா முத்து, கல்விக்கதிர் செய்தியேடு என்பனவற்றின் ஆசிரியராக இருந்து இவற்றை வெளியிடுவதில் பங்காற்றியிருக்கிறார். இவரெழுதிய 9 சிறுகதைகள் உதிர வேர்கள்(2000) தொகுதியாகவும், 13 சிறுகதைகள் உள்மனச் சித்திரம்(2013) தொகுதியாகவும் வெளிவந்துள்ளன. 'இராதாகிருஸ்ணனின் கதைகளில் சூழலின் விபரமான பதிவு, கட்புலமயப்பாடு நன்கு தெரிகிறது. அல்லல்களை, அவலங்களை நுண்திறனுடன் இனங்கண்டு கொள்ளும் ஒரு சமூக நோக்கும் உள்ளது. போர்ச்சூழல், வாழ்க்கையில் காணும் சாதாரண சம்பவங்களையும் நுணுக்கமாக அவதானிக்கும் சக்தியும் உள்ளது' என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுவது போன்று மனித வாழ்வில் நாம் காணும் சிறு சம்பவங்களையும் ஓர் ஓவியத் துளிர்ப்போடும், பாத்திர அசைவோடும் கதையாக்கம் செய்வதில் இராதாகிருஸ்ணனுக்குத் தனிச்சிறப்புண்டு எனலாம். இவரது "அந்தப் பெட்டைக் குட்டிகள்" என்ற சிறுகதை அரச பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு தரம் - 7 தமிழ்மொழியும் இலக்கியமும் பாடப்புத்தகத்தில் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பி டத்தக்கது.

இவரது கவனம் நாடகத்துறையிலும் இருந்தது. நண்பர்களுடன் இணைந்து மண் சுமந்த மேனியரில் பணியாற்றியதிலிருந்து வவுனியாவில் பல நாடகங்களை எழுதி மேடையேற்றியது வரை நாடகத்துறையில் இவரது பங்களிப்பு உள்ளது. இவரெழுதிய நாடகங்கள் 1998இல் மானிடச் சிக்கல் என்ற நூலாக வெளிவந்ததுடன் அரச சாகித்திய விருதினையும் பெற்றுக் கொண்டது. 2006இல் துயரப்பாறை நாடக நூல் வெளிவந்ததுடன் அந்த நூலுக்கும் அரச சாகித்திய விருது கிடைத்தது. பூலோக மோட்சம்(2022) நாடக எழுத்துருக்களையும் கவிதாநிகழ்வையும் உள்ளடக்கிய தொகுதியாகும்.

சிறுவர் இலக்கியத்துக்கும் இவர் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளார். சிறுவர் நாடக எழுத்துருக்கள் பலவற்றை இவர் எழுதியுள்ளார். அவ்வகையில் சிறுவர் அரங்கு (சிறுவர் நாடகங்கள் - 2004), உள்ளாளி பெருக்கும் சிறுவர் அரங்கு (2004), பசுமைத்தாயகம் (சிறுவர் நாடகங்கள் - 2009), பூதம் காத்த புதையல் (2011), காட்டில் மாநாடு (2011), நரிமேளம்(2011), கடலின் துயரம் (2011), சிறுவர் கதைகள் (2017), கூவும் குயிலின் ஏக்கம் (2020) ஆகிய இவரது சிறுவர் இலக்கிய நூல்கள் வெளிவந்துள்ளன.

கற்றலும் கற்றல் சூழலும் (2014), பரிகாரக் கற்பித்தலுக்கான அரங்கச் செயற்பாடு (2008) முதலான கல்வியியல் தொடர்பான நூல்களையும் இவர் எழுதியுள்ளதுடன் இவர் எழுதிய கவிதைகள் நிலம் தொடாத மின்னல்(2019) தொகுதியாக வெளிவந்துள்ளது. தேசிய சாகித்திய விருதுகள் 3, வடக்கு கிழக்கு மாகாண விருதுகள் 4, வடக்கு மாகாண விருதுகள் 3, கிழக்கு மாகாண விருதுகள் 3 என்பன இவரது நூல்களுக்குக் கிடைத்துள்ளன. கிழக்கு மாகாண வித்தகர் விருதும் இவருக்குக் கிடைத்துள்ளது.

தொழில்சார் நெருக்கடிகளுடன் ஒரு கல்வித்துறை அதிகாரியாக நீண்ட காலம் பணியாற்றிய போதும் அவ்வப்போது சமூக அக்கறையோடு படைப்புகளை வழங்கியதில் இராதாகிருஸ்ணன் முக்கியமானவர். கல்வித்துறையிலும், இலக்கியத்திலும் அவரது பங்களிப்பு முக்கியமானது. சிறந்த தொடர்பாடல் திறன், கூர்ந்த சூழல் மற்றும் சமூக அவதானிப்பு, மனிதாய அணுகுமுறை, படைப்பாக்கத் திறன் என்பன ஏனையவற்றிலிருந்து அவரை வேறுபடுத்தும் தனியடையாளமாகும். தனது மணிவிழாவைக் கண்டுள்ள இராதாகிருஸ்ணன் இன்னும் உத்வேகத்துடன் ஈழத்து இலக்கியத்துக்கு வளம்சேர்ப்பார் என நம்புகிறோம்.

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை



○ ந.பரமேஸ்வரன்

## 1939 பெப்ரவரி

சட்டசபையில் ஆசன ஒதுக்கீடு தொடர்பான காரசாரமான விவாதங்கள் இடம் பெற்றன. இந்த விவாதத்தில் உரையாற்றிய கம்பொல தொகுதி உறுப்பினர் குணவர்த்தன , 'தமிழர்கள் 16 ஆசனங்களைக் கோருகின்றனர். முஸ்லிம்கள் 8 ஆசனங்களைக் கோருகின்றனர். மலையகத் தமிழர்கள் 8 ஆசனங்களைக் கோருகின்றனர். இவர்களை விட நியமன உறுப்பினர்கள் 8 பேர். 40 ஆசனங்கள் சிறுபான்மையினருக்கு ஒதுக்கப்பட்டால் 68 ஆசனங்களைக்கொண்ட சபையில் சிங்களவர் சிறுபான்மையாகி விடுவர்' என் உரையாற்றினார். இந்த விவாதத்தில் பிராந்திய ரீதியான பிரதிநிதித்துவம் ஆளுநரால் முன்வைக்கப்பட்டது. எனினும் மொழிவாரிப் பிரதிநிதித்துவத்தையே தமிழ், முஸ்லிம் பிரதி நிதிகள் வலியுறுத்தினர்.

## 1939 மார்ச் 16

சட்டசபையில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் '50:50' கோரிக்கையை முன்வைத்து ஆறு மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக உரையாற்றினார். இந்த உரை ஒரு சாதனையாகவும் பார்க்கப்படுகிறது; இதுவரை எவரும் சட்டசபையில் ஆறு மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக உரையாற்றவில்லை.

ஜீ.ஜீயின் உரையைப்பார்த்து சிங்கள உறுப்பினர்கள், 'பொன்னம்பலம் நாட்டைப்பிரிக்கப்பார்க்கிறார்' என வர்ணித்தனர். ஜீ.ஜீ. சிங்களவர்கள் இந்த நாட்டுக்கு வருவதற்கு முன்னரே தமிழர்கள் இந்த நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். இது தமிழர்களின் நாடு என உரையாற்றினார்.

ஆளுநர் ஜீ.ஜீ. யின் கோரிக்கையை வெறும் கணித அடிப்படையிலான குறுகிய நோக்கமுடைய கோரிக்கை எனக் கூறினார். சிறுபான்மையினருக்கு மேலதிகமாக பத்து ஆசனங்களை ஒதுக்குவதற்கும் ஏழு அமைச்சுப் பதவிகளில் மூன்றை சிறுபான்மையினருக்கு வழங்குவதற்கும் சபையிலிருந்தோர் ஒத்துக்கொண்டனர். இந்தியாவில் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளைச் சுட்டிக் காட்டி இந்திய அரசியலமைப்பை ஏன் சிங்களத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர் என ஜீ.ஜீ.கேள்வியெழுப்பினார். அரசியலமைப்பு ஊடாக சிறுபான்மை யினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் ஜீ.ஜீ. தனதுரையில் தெரிவித்தார்.

இந்த நாட்டில் வாழ்ந்த சிங்களவர்களும் தமிழர்களும் ஏன் அரசர்களும் கலப்புத் திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்துள்ளனர், இப்போது சிங்களத் தலைவர்கள் இந்த நாட்டை பிரிக்கப் பார்க்கின்றனர் என்றார். ஒரு சிறிய நாட்டில் இவ்வாறான பிரிவினைகளை வளர்த்துக் கொண்டு எப்படி ஓர் ஐக்கியமான நாட்டை கட்டியெழுப்ப முடியுமெனவும் ஜீ.ஜீ.கேள்வியெழுப்பினார்.

காங்கேசன்துறை தொகுதி உறுப்பினர் நடேசனும் சமபல பிரதிநிதித்துவத்தையே வலியுறுத்தினார்.

நடேசனின் உரையைத் தொடர்ந்து தமிழ் - சிங்களத் தலைவர்களுக்கிடையே வட்டமேசை மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. இந்த வட்டமேசை மாநாட்டில் மன்னார் பிரதிநிதி ஸ்ரீ பத்மநாதன் சமபல பிரதிநிதித்துவக் கோரிக்கை பொருத்தமற்ற ஒன்று எனத் தெரிவித்தார். கன்னங்கரா தவிர்ந்த ஏனைய சிங்கள உறுப்பினர்கள் '50:50' கோரிக்கை ஓர் இனவாதக் கோரிக்கை என வர்ணித்தனர். கன்னங்கரா '50:50' கோரிக்கை மூலம் மற்றைய இனங்களுடன் தமிழர்கள் சமய - சமூக நல்லுறவைப் பேண விரும்புகின்றனர் என தெரிவித்தார். இந்து சாதனம் பத்திரிகையும் '50:50' கோரிக்கை பொருத்தமற்ற ஒன்று என எழுதியது. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், தமிழ்ப் பிரதிநிதிகளின் கோரிக்கையையும் சிங்கள மகாசபையின் செயற்பாடுகளையும் (இரண்டுமே இனவாதச் செயற்பாடுகள் என) கண்டித்தது.

## 1939 ஜூலை

இந்தக் காலப்பகுதியில் நேரு இந்திய சுதந்திரத்தை வலியுறுத்தி 'இந்தியா இந்தியர்களுக்கே சொந்தம்' என்ற (India for Indians) பிரசாரத்தை ஆரம்பித்தார். இதனைத்தொடர்ந்து சிங்களத் தலைவர்களும் 'இலங்கை சிங்களவர்களுக்கே சொந்தம்'என்ற பிரசாரத்தை ஆரம்பித்தனர். குறிப்பாக தொழிற்சங்கத் தலைவர் என வர்ணிக்கப்பட்ட ஏ.ஈ.குணசிங்க 'இலங்கை சிங்களவர்களுக்கே சொந்தம்' என்ற பிரசாரத்தை முன்னெடுத்ததுடன், யாழ்ப்பாணச் சுருட்டு, இந்திய அரிசி போன்றவற்றையும் பகிஷ்கரிக்குமாறு சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்தார். இதற்குப் பதிலளிக்கும் முகமாக ஜீ.ஜீ. நாவலப்பிட்டியில் நடைபெற்ற கூட்டத்தில் 'விஜயன் இலங்கைக்கு வர முன்னரே தமிழர்கள் இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர்' என உரையாற்றினார்.

இதனையடுத்து ஏ.ஈ.குணசிங்க 20,000 சிங்களவர்களை ஒன்று திரட்டி ஜூலை 12 ஆம் திகதி கொழும்பில் மாபெரும் பொதுக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்தார். மொறட்டுவ, அவிசாவளை போன்ற பிரதேசங்களிலிருந்து வந்த சிங்களவர்கள் கிருலப்பனையிலிருந்து ஊர்வலமாகச்சென்று கூட்டத்தை நடத்தினர். இந்தக்கூட்டத்தில் உரையாற்றிய ஏ.ஈ.குணசிங்க , 'ஜீ.ஜீ.வந்து எனது காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லையேல் நான் ஜீ.ஜீ.யின் ஈரலை எடுத்து உண்பேன். ஜீ.ஜீ.யின் இரத்தத்தைக் குடிப்பேன்' என உரையாற்றினார்.

இரண்டு பக்கமும் (தமிழ் - சிங்கள) இனவாதம் வளர்ந்து வருவதைக்கண்ட மகாதேவா இன ஒற்றுமையை வலியுறுத்தும் செயற்பாடுகளில் இறங்கினார். யாழ்ப்பாணத்தில் இன ஒற்றுமையை வலியுறுத்தி தமிழ்ப் பிரமுகர்களை அழைத்து கூட்டமொன்றை ஏற்பாடு செய்தார். இந்தக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஜீ.ஜீ., 'சிங்களவர்களுடன் மகாதேவா குசுகுசுக்கின்றனர்' எனக் கிண்டலடித்தார். இந்தக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் 'நாங்கள் சிங்களவர்களுக்கோ, பிரித்தானியர்களுக்கோ அடிமைகள் அல்லர் சமபல பிரதிநிதித்துவம் தான் எமக்குத்தேவை' என வலியுறுத்தினர்.

## 1939 ஓகஸ்ட் 01

மருதனார்மடத்திலும் புகையிரதங்களை நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அந்தக்காலத்தில் மருதனார்மடத்தில் புகையிரத நிலையம் இருக்கவில்லை 'தரிப்பு நிலையம்' என்றே (halting place)அழைக்கப்பட்டது.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கள். தேடத் தேட சிறுவர்கள் நால்வரும் உயிரோடு இருக்கும் தடயங்கள் கிடைத்துக் கொண்டே இருந்தன. ஆனால் அவர்களைக் கண்டுபிடிக்கத்தான் முடிய வில்லை. ஏனெனில் அந்த நான்கு சிறுவர்களும் ஓரிடத்தில் தங்கியிராமல் தொடர்ச்சியாக நகர்ந்து கொண்டே இருந்தார்கள். அவர்கள் ஒரேயிடத்தில் இருந்தால்தான், மீட்புப்பணியாளர்க ளால் கண்டுபிடிக்கமுடியும். தொடர்ச்சியாக இடம் மாறிக்கொண்டே இருந்தால், அந்த அடர்ந்த வனத்துக்குள் தேடுதலைத் தொடர்வதென்பதும் இயலாத காரியம். சிறுவர்களுக்கு தம்மை மீட்க ஒரு குழு வந்துகொண்டிருக்கிறது என்ற தகவலை எப்படியாவது கிடைக்கச் செய்தால், அவர்களை ஓரிடத்தில் தங்கச் செய்து, மீட்கலாம் என்று திட்டமிடப்பட்டது. அதற்காகச் சில காரியங்களை கொலம்பியப் படைகள் செய்தன.

நன்கு பயிற்றுவிக்கப்பட்ட படைவீரர்கள் கூட அந்தக்காட்டுக்குள் நாலைந்து நாட்களுக்கு மேல் வசிக்கத் திணறுவார்கள். அப்படியிருக்கையில் இந்த நான்கு சிறுவர்களும் எப்படி அந்த இருள்படந்த கொடிய காட்டுக்குள் தப்பிப்பிழைத்தார்கள்?

தாய் இறந்த பின்னர் லெஸ்லி ஒருகணமும் தாமதிக்கவில்லை. தன் தம்பிகளான 9 வயதான சொலய்னி, 4 வயதேயான ரைன் மற்றும் 4 மாதக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு அவ்விடத்தை விட்டு வேகமாக காட்டின் மறுமுனையை நோக்கி நகரத்தொடங்கினாள்.

## வனமெல்லாம் துண்டுப்பிரசுரம்

'நாங்கள் உங்களை மீட்க வருகிறோம் குழந்தைகளே, பத்திரமான ஓரிடத்தில் நிலையாக தங்கியிருங்கள்' என்று பழங்குடியின மொழியில் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் அமேசான் காட்டுப்பகுதியெங்கும் உலங்குவானூர்தி மூலம் வீசப்பட்டன. அத்தோடு ,
"பிள்ளைகளே, நான் உங்கள் பாட்டி பேசுகிறேன். உங்களை மீட்க உதவியாக ஒரே இடத்தில் இருங்கள், நகர்ந்து செல்லாதீர்கள்" என்று தொலைந்து போன பிள்ளைகளின் பாட்டியின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட குரலை பலமாக ஒலிக்கவிட்டபடி உலங்குவானூர்திகள் அமேசான் காட்டுப் பகுதியை இடைவிடாமல் சுற்றிவந்தன.

## நாற்பதாம் நாள் அதிசயம்

மே 1 ஆம் திகதி காணாமற் போனவர்களைத் தேடும்பணி ஒருமாதத்தைக் கடந்தபோது, எல்லோருமே நம்பிக்கையற்றுப் போனார்கள். சிறுவர்கள் உயிரோடு இருப்பதை உறுதி செய்யும் வகையில் கிடைத்து வந்த உணவுக்கழிவுகளும் கிடைக்காமல் போயிருந்தன. காட்டைப்பற்றி நன்கு அறிந்தவர்கள் கூட, இத்தனை நாட்கள் தாக்குப்பிடிக்கமுடியாதென்பதால் உறுதி சிறுவர்களின் சடலங்களையாவது கண்டுபிடிப்போம் என்று கடைசிமுயற்சியில் மீட்புக்குழுவினர் இறங்கினர். மோப்பநாய்கள் காட்டுக்குள்கொண்டுவரப்பட்டு, சிறுவர்களின் உணவுக்கழிவுகள் மூலம் அவர்கள் சென்ற பாதையை இனங்காணும் முயற்சி ஓரளவுக்கு வெற்றியளித்தது. மோப்பநாய்களின் பின்னே சுமார் பத்து நாட்கள் பயணப்பட்ட பின்னர், ஜூன் 10 ஆம் திகதி அந்த அதிசயம் நிகழ்ந்தது. விமானத்தில் காணாமற்போன நான்கு சிறுவர்களும் பத்திரமாக காட்டுக்குள் கண்டுபிடிக்கப்பட்டார்கள். அவர்களைக் கண்டுபிடித்த மகிழ்ச்சியில் தான் மீட்புக்குழுவினர் தொலைத்தொடர்பு சாதனத்தினூடாக "அதிசயம்! அதிசயம்!!அதிசயம்!! அதிசயம்!!!" எனக் கூச்சலிட்டு தம் மகிழ்வை வெளிப்படுத்தியிருந்தனர்.

## தப்பியது எப்படி?

நன்கு பயிற்றுவிக்கப்பட்ட படைவீரர்கள் கூட அந்தக்காட்டுக்குள் நாலைந்து நாட்களுக்கு மேல் வசிக்கத் திணறுவார்கள். அப்படியிருக்கையில் இந்த நான்கு சிறுவர்களும் எப்படி அந்த இருள்படந்த கொடிய காட்டுக்குள் தப்பிப்பிழைத்தார்கள்? இதற்கெல்லாம் முழுக்காரணம்,மக்லீனாவின் மூத்த மகளான 13 வயதேயுடைய லெஸ்லி தான். விமானம் காட்டுக்குள் வீழ்ந்த இருநாள்கள் வரை காயங்களுடன் மக்டெலினா உயிரிழந்திருந்தார். உயிர் பிழைத்திருந்த அந்த இருநாட்களும் அவர் தன் மகளுக்கு தான் இறந்து போனால் , எப்படி மற்றைய குழந்தைகளோடு தப்பலாம் என்பது பற்றி லெஸ்லிக்கு சொல்லியிருந்தார். கடுமையான காயங்கள், போதிய சிகிச்சையின்மை, அதிகளவு குருதி வெளியேறியமை என்று எல்லாமே ஒன்று சேர்ந்து விபத்து நடந்து இருநாள்களின் பின்னர் மக்லீனாவின் உயிரைக் குடித்துமுடித்தன.


## லெஸ்லியின் சாகசம்

தாய் இறந்த பின்னர் லெஸ்லி ஒருகணமும் தாமதிக்கவில்லை. தன் தம்பிகளான 9 வயதான சொலய்னி, 4 வயதேயான ரைன் மற்றும் 4 மாதக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு அவ்விடத்தை விட்டு வேகமாக காட்டின் மறுமுனையை நோக்கி நகரத்தொடங்கினாள். பிணங்களின் வாசனைக்கு கொடிய காட்டு மிருகங்கள் வரக்கூடும். அதனாலேயே தாயின் சடலத்தையும் விட்டுவிட்டு லெஸ்லியின் வழிகாட்டலில் அந்த நான்கு குழந்தைகளினதும் நெடிய பயணம் தொடங்கியது.

முதல் நாலைந்து நாட்கள் போத்தல் தண்ணீரும், விமானத்தில் இருந்து எடுத்து வந்த உணவுப்பொருள்களும் அவர்களின் பசியையும், தாகத்தையும் தீர்த்தன. லெஸ்லி வெறும் 13 வயதேயுடைய சிறுமிதான், ஆனாலும் இப்படியொரு எதிர்பாராத ஆபத்து நிகழ்ந்தால் அதிலிருந்து உயிரைத் தக்கவைக்க என்னென்ன வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்று அவளுக்குத் தெரிந்திருந்தது. பழங்குடியினத்தைச் சேர்ந்தவள் என்பதால் அவளுடைய உறவினர்கள், தங்கள் காட்டுவாழ்க்கை பற்றிய அனுபவங்களை அவளுக்குச் சொல்லியிருந்தனர். காட்டுக்குள் நேர்ந்த இடர்களில் தப்பிக்கும் வழிகளையும் அவர்கள் இதன்போது சொல்லிக் கொடுத்திருந்தனர். அபிமன்யூ போல, கேட்டறிந்த ஞானத்தை வைத்து, அமேசான் என்ற சக்கரவியூகத்தை லெஸ்லி உடைத்து வெளியேற முடிவெடுத்தாள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்தில் தங்குதல், உணவு, தண்ணீர் என்பவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்தல், மாறி மாறி காவல் இருத்தல், போகும் வழியில் தடயங்களை விட்டுச் செல்லல், விலங்குகளின் நடமாட்டம் உள்ள பகுதிகளைத் தவிர்த்தல் என்று லெஸ்லி திட்டமிட்டு, தன் தம்பிகளை காட்டில் காத்திருக்கும் ஆபத்துகளைக் கடக்க உதவினாள். விமானத்தில் இருந்து கொண்டுவந்த உணவு முடிந்ததும், காட்டில் உள்ள பழங்களைக் கண்டுபிடித்து உணவாக்கலாம் என லெஸ்லி முடிவெடுத்தாள். ஆனால் அங்கும் ஒரு ஆபத்து இருந்தது. அந்தக் காட்டில் இருந்த பழங்களில் பெரும்பாலானவை நச்சுத்தன்மை கொண்டவை. நச்சுத்தன்மையற்ற பழவகைகளைத் தேடுவதும் கடினமான காரியம். ஏனெனின் அவற்றை ஏற்கனவே காட்டுவிலங்குகள், பறவைகள் என்பன கபளீகரம் செய்திருக்கும்.

## உயிர் காத்த பழம்

நீண்ட தேடலின் பின்னர், ஒனோக்கர் பஸ் பட்டுவ( Oenocarpus Bataua ) என்ற பனைமர வகையைச் சேர்ந்த பழத்தை லெஸ்லி கண்டறிந்தாள். அந்தக் குழந்தைகளின் அதிர்ஷ்டம், மே - ஜூலை வரைதான் அந்தப் பழம் காட்டில் கிடைக்கும் பருவகாலம். இயன்றளவு



ஒனோர்க்கர்ஸ் பழங்களைச் சேகரித்து வைத்து பசிக்கும் போதெல்லாம் அவற்றை உண்டார்கள். மழைநீரையும், காட்டில் தேங்கி நின்ற மழைத் தண்ணீரையும் இலைகளில் சேகரித்து அருந்தினார்கள். தன் தலைமுடியை இழுத்துக் கட்டப்பயன்பட்ட 'ரப்பர் பாண்டை' பயன்படுத்தி, மரக்கிளைகளை கூடாரம் போல இணைத்து அதன் கீழ் உறங்கினார்கள். விடிந்ததும் கையில் உள்ள உணவுப்பொருள்களோடு இன்னொரு பாதுகாப்பான இடத்தைத் தேடிய பயணத்தை ஆரம்பிப்பார்கள். சிலவேளைகளில் சிறுத்தை முதலான கொடிய மிருகங்களும், பாம்புகளும் குறுக்கிட்டன. அவற்றையெல்லாம் மிகக்கவனமாகத் தவிர்த்து, ஆபத்தற்ற இடங்களைக் கண்டுபிடிப்பதென்பதும் பெரும்சிக்கலாகவே இருந்தது. ஆனாலும் எப்படியோ முடிவிலியான அந்தக் காட்டுக்குள் அலைந்து திரிந்து ஒரு குகையையோ, மரப்பொந்தையோ கண்டுபிடித்து, தன் சகோதரர்களை பாதுகாப்பாக தங்கவைப்பதில் லெஸ்லி ஒருநாளும் தோற்றுப்போகவில்லை. கண்ணை இமை காப்பது போல , தன் சகோதரர்களை அவள் ஒன்றல்ல, இரண்டல்ல, நாற்பது நாட்கள் காப்பாற்றி வைத்ததால்தான் கொலம்பியப் படைகள் தலைமையிலான மீட்புக்குழுவினரால் 'அதிசயம்!' என்று கூச்சலிட்டுக் கொண்டாட முடிந்தது. இதுவரை நடந்த இதுபோன்ற விமான விபத்துகளில் எவருமே இப்படியொரு ஆபத்தான காட்டில் சிக்கி, இத்தனை நாட்களின் பின்னர் உயிரோடு மீட்கப்பட்டதில்லை. ஒன்றில் காயத்தால் காட்டுக்குள் இறந்திருப்பார்கள் அல்லது அவர்கள் தப்பிப்பிழைத்தாலும் உணவின்றியோ அல்லது விலங்குகளிடம் சிக்கியோ உயிரைவிட்டிருப்பார்கள். ஆனால் இந்த நான்கு சின்னஞ்சிறிசுகளும் எமனுக்கே போக்குக்காட்டி, நாற்பது நாள்களின் பின்னர் உயிரோடு மீண்டது வெறும் அதிசயமல்ல, பேரதிசயமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மாமனிதர் இரவிராஜ் அவர்களின் பிறந்ததினம் (ஜூன் 25) இன்றாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**



# மக்கள் தொண்டன் மாமனிதர் இரவிராஜ்

**கந்தையா அருந்தவபாலன்,**
அரசியல் சமூகச் செயற்பாட்டாளர்

மக்களுக்கு உண்மையான தொண்டனாக இருப்பவனை அந்த மக்கள் தமது தலைவனாக ஏற்றுக்கொள்கின்றனர் என்ற மெய்மைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தவர் மாமனிதர் இரவிராஜ். அவர்தலைவனாகப் பிறக்கவில்லை. தலைவனாகக் கூடிய அரசியல் வாரிசாகவும் பிறக்கவில்லை. நல்லாசிரியர்களான பெற்றோருக்குப் பிள்ளையாகப் பிறந்த ஒருவர். அதனால் மக்களின் மீதான அளவற்றஅன்பும் அந்த மக்களின் துன்பங்களைப் போக்குவதற்கான அயராத பணியுமே அவரை மக்களின்தலைவனாக உயர்த்தின. மற்றவர் துயர் கண்டும் சிலர் பாராமுகமாக இருப்பர். இன்னுஞ் சிலர் அழைத்தால் மட்டும் வந்துதவுவர்.ஆனால் இரவிராஜ் அவர்களோ துயர் கண்டவுடன் மட்டுமல்லாது தூரவிருந்து கேள்விப்பட்டாலே கூட தனது சிரமங்களைப் பொருட்படுத்தாது ஓடோடி வந்து உதவுவதை வழமையாகக் கொண்டிருந்தார். அதேபோல சிலர் எவருக்கும் உதவார். சிலர் தமக்கு வேண்டியோர்க்குமட்டும் உதவுவர். ஆனால் இரவிராஜ் அவர்களோ ஏழையா பணக்காரனா, தனது கட்சியைச் சேர்ந்தவனா அல்லது மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவனா,அறிந்தவனா அல்லது அறியாதவனா என்ற எவ்விதவேறுபாடுகளுமின்றி உதவும் ஒரு பெருந்தகை. அவர் எல்லோர் மீதும் அன்பு செலுத்தியதால் அவருக்கு எதிரிகள் என்று யாருமிருக்கவில்லை.

ஆனால் அரசியல் எதிரிகள் இருந்தார்கள். அதுவும் தமிழ்த் தேசியப்பரப்பில் அவருக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டவர்கள் இருந்தாலும் யாரும் அவரை எதிரியாகப்பார்த்தது கிடையாது. அதேபோல சாதாரண சிங்கள மக்களும் நீதியான சில தலைவர்களும் கூட இரவிராஜ்அவர்களைத் த்ங்களில் ஒருவராகவே பார்த்தார்கள். ஆனால் தமிழினத்தைக் கருவறுக்க கனவிலும்கூடத் துடித்த பௌத்த - சிங்களப் பேரினவாதிகள் மட்டுமே அவரை எதிரியாகப் பார்த்தார்கள். தமிழினத்துக்கு எதிராகத் சிங்கள மக்கள் மத்தியில் தாம் கட்டிய மாயவிம்பங்களை இரவிராஜ் உடைத்துதமது இருப்புக்கு வேட்டு வைத்துவிடுவாரோ என்ற பேரினவாதிகளின் பயமே அவரது உயிருக்குவேட்டுவைத்தது என்பது யாமறிந்த கசப்பான உண்மை..

இக்கட்டான ஓர் அரசியல் சூழ்நிலையில், பல்வேறு எதிர்மறையான விமர்சனங்களின் மத்தியிலேயே இரவிராஜின் அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது.

எனினும் மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே எல்லோராலும்நேசிக்கப்படும் ஒரு தலைவராக அவர் மாறியதற்குக் காரணம் மக்கள் சார்ந்த அவரது எண்ணங்களும்செயற்பாடுகளுமே. அவரது சட்ட அறிவுக்கு அப்பால் அவர்பெற்றிருந்த அரசியல் ஞானமும்மும்மொழியாற்றலும் எப்போதும் தனது மக்களுக்கானதாகவே இருத்தனவன்றி மக்கள் மீது அதிகாரம்செலுத்துவதற்கோ அல்லது சுயலாபங்களை அடைவதற்கோ ஒருபோதும் அவரால் பயன்படுத்தப்பட்டதில்லை. நாடாளுமன்றப் பதவிகளின் மூலம் சொத்து.சுகம் சேர்த்த சகபாடிகளின் மத்தியில் இவர்தனது சொத்துகளை மட்டுமன்றி கடன்பட்டும் மக்களுக்குப் பணிசெய்வதையே சுகமாகக் கருதினார்.

தென்மராட்சி அவரது பிறந்த மண் ஆயினும் தாயகத்திலுள்ள அனைத்து மக்களாலும்நேசிக்கப்பட்டார். அவரும் அவ்வாறே நேசித்தார். தனது அபிவிருத்திப் பணிகளைப் பிரதேசவேறுபாடுகளின்றி ... மேற்கொண்டார். குடாநாட்டிலுள்ள எந்தவொரு கிராமத்துக்குச் சென்றாலும் இன்றுங்கூட அவரால் மேற்கொள்ளப்பட்ட பணியொன்றேனும் அவர் பெயரைச் சொல்லிநிற்கும். மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள்போல தமக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கிள்ளித் தெளித்து அரசியல் செய்தவரல்லர். அதற்கு மேலாக பல்வேறு வழிகளிலும் வளங்களைப் பெற்றுப் பல வளர்ச்சிப்பணிகளைச் செய்தவர். தேவைகளுக்காக தனது இனத்தின் உரிமைகளை ஆட்சியாளருடன் விலைபேசியவரல்லர். எந்தவொரு பொழுதிலும் அவற்றுக்கான கோரிக்கைகளை விட்டுக் கொடுத்தவருமல்லர். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனது மக்களின் தேவைகளுக்காக அமைச்சுகளின்படிகளில் ஏற அவர் ஒருபோதும் தயங்கியதில்லை. மக்களின் தேவைகளுக்காக அமைச்சர்களுடன்கதைக்கத் தயங்கும் அதேநேரம் சொந்தத் தேவைகளுக்காகப் பல்லிளிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை நானறிவேன். ஆனால் இரவிராஜ் மக்களுக்காக மட்டுமே உரிமையுடன் கேட்டதால்அவரது நேர்மையை மதித்து பல உதவிகளை அவர்கள் வழங்கினார்கள் என்பதையும் நானறிவேன்.

இதுபோன்ற பல காரியங்களைத் தொலைபேசி ஊடாகவே சாதிக்கும் வகையிலான வல்லமையும் உறவும்அவரிடம் காணபபட்டது.தேர்தல் நோக்கில் அல்லது தேர்தல் நெருங்கும்போது மக்களைச்சந்திப்பவரல்லர் இர்விராஜ.

திட்டமிட்ட ரீதியில் மாதாந்தம் மக்களுடன் கலந்துரையாடல்களைமேற்கொண்டு அரசியல் களநிலைமைகளை அவர்களுக்குத் தெரிவித்ததுடன் மக்களின் குறைகளைக்கேட்டறிந்து தீர்த்து வைக்கும் ஒரு"குறை தீர்க்கும்" சேவை நிலையமாகவும் அதனை அமைத்துக்கொண்டிருந்தார். இதில் சிறப்பாகக் குறிப்பிடக் கூடிய இன்னொரு அம்சம் தொகுதிப் பணிமனையில் மட்டுமன்றி பிரதேச ரீதியாகவும்சென்று இந்தக்கலந்துரையாடல்களை மேற்கொண்டதன் மூலம் மக்களின் சிரமங்களைக் குறைத்ததுடன் பிரச்சினைகளை நேரில் ஆராய்வதற்கும் வழியேற்படுத்தியமையாகும்.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமெனில் சிங்கள மக்களின் ஆதரவு அவசியம் என்பதை அவர் உறுதியாக நம்பியதால் தெற்கிலுள்ள முற்போக்குச் சக்திகளுடன் இறுக்கமான பிணைப்பினை ஏற்படுத்தியிருந்தார். இந்த முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து சிங்கள மக்களுக்கு எமது பிரச்சினைகளைப் புரியவைப்பதற்கு கிடைத்த அத்தனை வாய்ப்புகளையும் மிகச் சிறப்பாகவே அவர் பயன்படுத்திக்கொண்டார். அவர் தமிழ்மக்களின் உரிமைகளுக்காக மட்டுமன்றி சிங்கள மக்களின் மனிதஉரிமை மீறல்களுக்கு எதிராகவும் ஓங்கிக் குரல் கொடுத்த ஒரு மனித உரிமைப்போராளி என்பது சிங்களத் தலைவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.தலைநகரில் நடந்த மனித உரிமைக்கான எல்லாப் போராட்டங்களிலும் இரவிராஜே முன்னிலை வகித்திருந்தார்.அந்தவகையில் இனம் மதம் கடந்து மக்களை நேசித்த உயர்ந்த மானிடன்.

அவர் வாழும்போதும் தன் மக்களுக்காக வாழ்ந்தார். மக்களுக்காகவே தனது உயிரை ஈந்தார். தன்சாவினூடாகவும் இலங்கையில் தமிழ் மக்களுக்கான் நீதி மறுக்கப்படுவதை உலகத்துக்கு எடுத்துக்கூறியுள்ளார். ஆம் கொன்றவர்களைச் சான்றுகளுடன் நிரூபித்தபோதும் அவர்களுக்குத் தண்டனையில்லை. இரவிராஜின் படுகொலைக்கு நீதியில்லை. அவரது குடும்பத்தினர்க்கு நியாயம்தரப்படவில்லை. இதுதான் இலங்கையின் நீதித்துறை. இதனால் இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணையே வேண்டுமென்ற தமிழ் மக்களின் கோரிக்கைக்கு ஆத்மார்த்த பலத்தைச் சொர்க்கத்திலிருந்து இரவிராஜ் அவர்கள் வழங்கிக் கொண்டே இருப்பார் என்பது தமிழ் மக்களின் உறுதியான நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் பாதை புனரமைப்பு தண்டவாளங்கள் களவு!

அநுராதபுரம், ஜூன் 25

அநுராதபுரம் - சாலியபுர பிரதேசத்தில் தொடருந்துப் பாதை புனரமைக்கப்பட்டு வரும் நிலையில், பல லட்சம் ரூபா பெறுமதியான தண்டவாள இரும்புகள் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு தொடருந்துப் பாதை சீரமைக்கும் பணிகளின் ஒரு கட்டமாக சாலியபுர பிரதேசத்தில் ரயில் தண்டவாளம் புனரமைக்கப்படுகிறது. இதன்போது தொடருந்து பாதையிலிருந்து அகற்றப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான 15 தண்டவாள இரும்புகள் இனந்தெரியாதோரால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன. இதுகுறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என தொடருந்து திணைக்கள உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ச-ரி)


## விற்பனைக்கு

Fridge, TV, Settee, TV Stand, Lumala சைக்கிள் பல வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு.

074 191 5680 (CS/4021 AH-1)

## வாடகைக்கு

சாவகச்சேரி, கண்டி வீதியில் நீதிமன்றத்துக்கு அருகில் 4200 சதுர அடி விஸ்தீரணம் உடைய Business Complex வாடகைக்கு உண்டு. Supermarket, Store room போன்றவற்றுக்கு உகந்தது.

077 758 9690

## தென்னந்தோட்ட வேலையாட்கள் தேவை

பளையில் அமைந்துள்ள தென்னந்தோட்டத்தில் குடும்பமாக தங்கி நின்று வேலை செய்ய வேலையாட்கள் தேவை)

077 651 0696

## For Sale Fibre Production Units

- ✓Turbo (Omat) - Thala21 - HP 30 -3 Phase - 500,000/-
- ✓Induction Motor- 3 Phase-30HP- 350,000/-
- ✓Large Screener - 175,000/-
- ✓Small Screener - 45,000/-
- ✓Coveryor - 275,000/-
- ✓Motor - 3 Phase - 5.5HP - 90,000/-
- ✓Motor - 3 Phase - 5 HP - 90,000/-
- ✓Motor - 3 Phase - 2 HP - 70,000/-
- ✓Motor - 3 Phase - 50 HP - 480,000/-
- ✓Coconut Dehusking Electric Machine - 500,000
- ✓Coconut Dehusking Semi Electric Machine - 150,000/-
- ✓Coconut Breaking Machine - 900,000/-
- ✓Counting Machine (Handy) - 6,000/-
- ✓Copra Dryer - 430,000/-

077 752 6177

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

பிரிவு-48

க.பொ.த.(சா/த), (உ/த) பரீட்சைகளிற்கு தோற்றிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

Diploma Courses

- ★Diploma in English / Spoken English
- ★Diploma in ICT
- ★Diploma in Data Science
- ★Diploma in Singalam (Level I, II, III)
- ★Diploma in Psychology & Counselling
- ★Diploma in Political Science
- ★Diploma in Media Studies
- ★Diploma in Social Work
- ★Diploma in Nursing

ஆரம்பம்:
01 - 07 - 2023 சனிக்கிழமை 10.00 A.M
காலம்: 03 மாதங்கள்
சான்றிதழ் பிரிவுகள்

IPS Thirunelvely, Jaffna.
to your future
T.P: 021 4340229
076 685 2529

## A/L இரசாயனவியல் வகுப்பு

(ஆங்கில, தமிழ் மொழி மூலம்) A/L மாணவர்களுக்கான இரசாயனவியல் வகுப்புக்கள் தனியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும்.

கோண்டாவில் 075 262 0574

## காணி விற்பனைக்கு

யாழ். ஆறுகால்மடம் பகுதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(ஓட்டுமடச் சந்திக்கு அண்மையில்)

074 271 0246, 076 3066 719

## வகுப்புக்கள்

தரம் 3, 4, 5 ஆகிய மாணவர்களுக்கான வகுப்புக்கள் பட்டதாரி ஆசிரியரினால் வீட்டில் வந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஏற்ற வகையில் கற்பிக்கப்படும்.

077 3116 202, 077 9217 997

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தி A9 வீதியிலிருந்து 1Km தூரத்தில் உள்ள சகல வசதிகளுடன் கூடிய ஐந்து அறை கொண்ட வீடு பகுதியாகவோ / முழுமையாகவோ வாடகைக்கு உண்டு.

→ அரச, தனியார் நிறுவனங்கள் / சிறுகைத் தொழில் நிறுவனங்களுக்கு உகந்தது.

071 1397 996 (Whatsapp)

## வேலையாட்கள் தேவை

தாவடியில் இயங்கிவரும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு பகல் / இரவு வேலை செய்யக்கூடிய அனுபவமுடைய கீழ்வரும் ஆண் வேலையாட்கள் தேவை.

- ✻முகாமையாளர்
- ✻பம்மர்

சம்பளம் மற்றும் ஏனைய விபரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
உரிய ஆவணங்களுடன் நேரில் வருகைதரவும்.

தொடர்புகளுக்கு: 077 66 777 81

(CS 25129) A-1

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கிவரும் Coca-Cola மென்பான விநியோக நிறுவனத்திற்கு பின்வரும் ஆண் வேலையாட்கள் தேவை.

- ✻விற்பனைப் பிரதிநிதி
- ✻Clerk
- ✻உதவியாளர்

சம்பளம் மற்றும் ஏனைய விபரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
உரிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு: 077 66 777 81

(CS 25128) A-1

## வேலை ஆட்கள் தேவை

யாழ். ஸ்ரான்லி வீதியில் இயங்கிவரும் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையமொன்றிற்கு ஆண் வேலையாட்கள் தேவை. (வயது 18 - 25) மற்றும் தங்கி நின்று பணிபுரிவதற்கு வீட்டுப் பணிப்பெண் ஒருவர் தேவை.

074 310 9486

## காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு, வற்றாப்பளை மெயின் வீதியிலிருந்து வற்றாப்பளை அம்மன் கோயிலுக்குச் செல்லும் பாதை முகப்பில் உள்ள 12 பரப்புக் கடை கட்டக் கூடிய மேட்டுக்காணி விற்பனைக்குண்டு.

071 856 2098
076 282 2904


## கண்ணீர் அஞ்சலி

வட மாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி சங்கத்தின் உறுப்பினர் டாக்டர் மேனகா தவநேசன் அவர்களின் பாசமிகு தந்தையார்



**கதிரவேலு துரைராசா**

அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி சங்கம்

(CS 25336) A-1


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கு ஞான வைரவர் ஒழுங்கையில் பலாலி வீதி சந்திக்கு மிக அருகில் 2 1/2 பரப்புக் காணி சுற்று மதில் குழாய் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. (CR/40220)AH-1

உரிமையாளர் - 077 777 0749

## 12 பரப்பு தேவை

(நிலம் அல்லது வீடு கொண்ட நிலம்)

நீண்ட கால வரி தேவை

யாழ் நகரிலிருந்து 7கிமீ தொலைவில் யாழ்ப்பாணம் ஏ9 பிரதான வீதியை தேடுவது 12 பரப்பு காணி அல்லது வீடுடன் கூடிய காணி நீண்ட கால குத்தகைக்கு தேவை*நிலத்தில் வீடு* இருந்தால், வீடுகள் நன்றாகப் பராமரிக்கப்படுகின்றன. விலைகளை தெரிவிக்கவும்

நிலம் உள்ள உங்கள் நண்பர்களுக்கு தெரியப்படுத்தவும், புகைப்படம் எடுத்து வாட்ஸ்அப்பில் பகிரவும்

Vajira House Company

071 593 3299

1916 ம் ஆண்டு தொடக்கம், 107வருட 4 தலைமுறையாக தொடரும் கட்டிட நிர்மாண துறையினர்

வஜிரா ஹவுஸ் நிறுவனம்

23, டீல் பிளேஸ் A, கொள்ளுபிட்டி


## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 06 |  | 23 |
| 10 | | 06 |
| 1948 | | 2023 |

திருமதி

## புவனேஸ்வரி சிவபாதம்

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கொழும்பு தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி (கிளி) சிவபாதம் அவர்கள் 23.06.2023 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா அன்னமுத்து தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி, சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவபாதம் அவர்களின் அன்பு மனைவியும், சிவனேந்திரன், சிவகுமாரன், சிவநேசன், சிவராஜன், சிவப்பிரியா ஆகியோரின் அன்புத் தாயாரும் நிஷா, அனிதா, தனுசிஜா, சில்வியா, கரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நகுலன், வினுஷன், அனோமிகா, ஜஸ்மிகா, அரிஷன், ஹரியல், சித்தார்த், அஸ்வினி ரித்தேஷ், தீக்ஷா, ஆராத்யா ஆகியோரின் அன்பு பேத்தியும் பரமேஸ்வரி (லீலா), பாக்கியேஸ்வரி (நோனா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சத்தியசீலன், லிங்கதேவி, கமலாதேவி, சரஸ்வதி, குமரேசு, சண்முகநாதன் (சத்தியநாதன்) மற்றும் யோகராசா, கருணானந்தம்,நித்தியலக்ஷ்மி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.06.2023 திங்கட்கிழமை மு.ப.9.00 முதல் 11.00 வரை பார்வைக்கும், 27.06.2023 செவ்வாய்கிழமை மு.ப. 9.00 முதல் 11.00 வரை இறுதி கிரியைகளும் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

சிவகுமாரன் (மகன்)
*Whatsapp:+447478725609*
*Colombo:0094(77)2834228*
பாக்கியேஸ்வரி (சகோதரி)
*Whatsapp: +447427035358*

இடம்: *Jayaratne Funeral*
*2 B, Elvitigala Mw*
*Borella*
*Colombo - 07*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு ஒப்பந்தம் இரத்து; எமக்கு அதிகாரம் இல்லை!

## சென்னை உயர்நீதிமன்று தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூன் 25**
**கச்சதீவை இலங்கைக்கு வழங்கிய உடன் படிக்கையை ரத்துச் செய்யும் அதிகாரம் இந்த நீதிமன்றுக்கு இல்லை எனத் தெரிவித்து சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு விசாரணையை ஒத்திவைத்துள்ளது.**

சென்னை மீனவர்கள் நலன் சங்கத்தைச் சேர்ந்த பீட்டர் ராயன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.
அந்த மனுவில், 1974இல் இந்தியா - இலங்கை இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கச்சதீவு, இலங்கை வசம் ஒப்படைக்கப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் பாரம்பரியமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு எந்த இடையூறும் ஏற்படுத்தக்கூடாது எனக் கூறப்பட்டுள்ளது. இருப்பினும் தமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து தொல்லை கொடுத்து வருகின்றனர்.
தமிழக மீனவர்கள் பல கோடி ரூபா மதிப்புள்ள படகுகளை இழந்துள்ளனர். 2013 இல் 111 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கை கச்சதீவு ஒப்பந்தத்தை மீறிய செயலாகும். இரு நாடுகளுக்கு இடையே செய்யப்பட்ட உடன்படிக்கையை ரத்து செய்து கச்சதீவை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கையை மத்திய அரசு எடுக்க உத்தரவிட வேண்டும் - என்று குறிப்பிட்டார். இந்த மனு சென்னை உயர்நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
அப்போது நீதிபதிகள், 1974இல் இந்தியா - இலங்கை இடையேயான கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்து செய்யும் அதிகாரம் இந்த நீதிமன்றத்துக்கு இல்லை எனத் தெரிவித்து வழக்கு விசாரணையை ஜூலை 7 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (ச-இ)

# வேகமாகப் பயணித்தாலே நாட்டை மீட்கலாம்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 25
வேகமாகவும் திறனுடனும் பயணித்தால் மாத்திரமே கடன் சுமைகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
பிரான்ஸின் பரிஸ் நகரில் புதிய உலகளாவிய நிதி ஒப்பந்தம் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.
சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவித் திட்டம் கிடைக்கும் முன்னர் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வது சிறப்பாக இருக்கும்.
தற்போது கடன் வழங்குநர் நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றோம். இதற்கு பரிஸ் கிளப் உறுப்பு நாடுகள் உள்ளிட்ட கடன் வழங்கிய ஏனைய நாடுகளை இணைப்பதுதான் முக்கியமானதாக இருந்தது- என்றார். (எ-இ)



# சர்வதேச நியமங்களை மீறும் இலங்கையின் விமானிகள்!

கொழும்பு, ஜூன் 25
இலங்கை விமானிகள் சர்வதேச நியமங்களை மீறிப் பணியாற்றுகின்றனர். இதற்கு விமானிகளுக்கு நிலவும் பற்றாக்குறையே காரணம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இலங்கையில் விமானிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. 330 விமானிகள் பணியாற்ற வேண்டிய இடத்தில் 260 விமானிகளே கடமையில் ஈடுபட்டுள்ளனர்.
விமானிகள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர், இன்னும் பலர் வெளிநாடு செல்லவுள்ளனர். விமானிகளுக்கான தட்டுப்பாட்டால் விமானிகள் ஓய்வின்றிப் பணியாற்றுகின்றனர். ஓய்வின்றிப் பணியாற்றுவதால் சர்வதேச நியமங்களை மீறுகின்றனர்- என்றார். (எ-6)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், . தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். கிழ்ச்சி தரும் செய்தி வந்து சேரும்.

**இடபம்:** எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. நிதானம் தேவை. மனஸ்தாபம் நீங்கும்.

**மிதுனம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியங்கள் சாதகமாக முடியும். உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். செலவுகளுக்கு ஏற்ப பணவரவும் இருக்கும். எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். மகிழ்ச்சி உண்டு.

**சிம்மம்:** உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். எதிரிகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்** : மனக் குழப்பங்கள் நீங்கி தெளிவாகச் சிந்திக்கும் திறன் அதிகரிக்கும். முக்கியமான முடிவுஎடுக்க உகந்த நாள். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** எதிர்பாராத செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும். உறவினர்களால் சுபகாரிய பேச்சுவார்த்தை சாதகமாகும். கலகலப்பான சூழ்நிலையே காணப்படும்.

**மகரம்:** புதிய முயற்சி எதுவும் வேண்டாம். மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர் பார்த்த பண உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். பணவரவு கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

# ஆடைக் கைத்தொழில் வீழ்ச்சி பொருளாதாரத்தைப் பாதிக்கும்!

## உற்பத்தியாளர் சங்கம் ஆதங்கம்

கொழும்பு, ஜூன் 25
மின்கட்டண அதிகரிப்பின் காரணமாக ஆடைக்கைத்தொழில் துறை ஏற்றுமதி வருமானம் 15- 20 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.
எதிர்வரும் ஜூலை முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் பெரும் நெருக்கடியை நாடு எதிர்கொள்ள வாய்ப்புள்ளது என ஆடைக்கைத் தொழில் உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த வருட தொடக்கத்தில் மின்கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. அதன் காரணமாக 5 பில்லியன் டொலர் உற்பத்தித்துறை பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.
ஆடைக் கைத்தொழில் உற்பத்தி நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் மின்கட்டணம் அதிகமாகக் காணப்படுகிறது. மின்கட்டண அதிகரிப்பானது ஆடைக் கைத்தொழில் துறையில் பெரும் தாக்கம் செலுத்தியுள்ளது. அதனால் ஜூலை முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடியை நாடு சந்திக்க நேரிடும் என அந்தச் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-6)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 25
கோட்டைக்காடு மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 4 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-ரி7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாம்பு தீண்டியதில் பாதயாத்திரி சாவு!

கதிர்காமத்துக்கு பாத யாத்திரை சென்ற குடும்பஸ்தர் குமுக்கன் வனப்பூங்கா பகுதியில் பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார்.

லிங்கசாமி கேதீஸ்வரன் (வயது-45) என்பவரே உயிரிழந்தார்.

பொத்துவில் உகந்த முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமத்துக்கு பாத யாத்திரை சென்றுக்கொண்டிருந்தபோதே பாம்பு தீண்டுதலுக்கு உள்ளாகியிள்ளார். (ச-ரி3)


## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 04 . 1957



மறைவு 24 . 06 . 2023

### திருமதி சித்திரா சிவானந்தன்

**(ஓய்வுபெற்ற ஆசிரியை, சென்-ஆன்ஸ் கல்லூரி, கொழும்பு)**

பண்டித வாசம், கரவெட்டி மேற்கு, கரவெட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சித்திரா சிவானந்தன் அவர்கள் நேற்று (24.06.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம்- பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவானந்தன் (உதவி பொறியியலாளர், ஸ்ரீலங்கா ரெலிகொம்) இன் அன்பு மனைவியும், Dr.யோகானந் (வைத்தியர், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) அவர்களின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாமா (சுவிஸ்), உமா, அம்பிகா (நியூசிலாந்து), சித்கணேசன் (கனடா), மல்லிகா (கனடா), சிவபாலன் (கனடா), தேவிகா (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும், சிவபாக்கியம், காலஞ்சென்ற சிவன்தாசன், அருள்நந்தி, தவமணிதேவி ஆகியோரின் மைத்துனியும், லக்ஷிதாவின் அன்பு மாமியாரும், நிவீஷன், தேனுஷனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது கந்தர்மட இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**262, பலாலி வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.** (CS 25343) A-1

**தகவல்: Dr.யோகானந் (மகன்)**
**077 0079 624**

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 08 . 1946



மறைவு 23 . 06 . 2023

### சச்சிதானந்தம் தவமணி

**(ஓய்வுநிலை ஆசிரியை, சங்கானை சிவப்பிரகாச ம.வி.)**

குளத்தடி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், ஓடக்கரை வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தம் - தவமணி நேற்றுமுன்தினம் (23.06.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.


அன்னார் அமரர்களான நடராசா தையல்முத்து தம்பதிகளின் பாசமிகு மகளும், அமரர்களான இளையதம்பி செல்லம்மா தம்பதிகளின் மருமகளும், சச்சிதானந்தம் (ஓய்வுநிலை ஆசிரியர், அராலி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், அமரர் தவராசா மற்றும் இராஜவதி (லண்டன்), தேவராசா (மன்னார்), சாந்தினி (கனடா) ஆகியோரின் சகோதரியும், கீதாஞ்சலி (ஆசிரியை ,சங்கானை சிவப்பிரகாச ம.வித்தியாலயம்), பிரதீபன் (பாபு- லண்டன்), சுதாகரன் (ஆசிரியர், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திவாகரன் (அதிபர், வட்டு. மத்திய கல்லூரி), ரேணுகாதேவி (லண்டன்), சசிகலா (ஆசிரியர், வட்டு. இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும், அமரர் சிவபாக்கியம் மற்றும், ராஜேஸ்வரி, குமுதா, தேவராசா (மன்னார்) விஸ்வநாதன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், ஆதித்தன், ஆதர்ஷினி, அபிஷேக், நேசிகா, ஜெயவிந், ஜனிஷா, தக்ஷிகன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**ச.சுதாகரன் (மகன் ) 0771240097**
**ச.பிரதீபன் (மகன்-லண்டன்) 00447735601282**
**தி.கீதாஞ்சலி (மகள்) 0764360061**

**ஓடக்கரை வீதி,**
**சங்கானை.**

## மரண அறிவித்தல்



**தோற்றம் : 08.02.1965** **மறைவு: 24.06.2023**

### குமாரசாமி பாக்கியநாதன் (VKP சோதி)
### (சோதியண்ணை)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி பாக்கியநாதன் (VKP சோதி, சோதியண்ணை) நேற்று (24.06. 2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி நாகரத்தினம்மாள் தம்பதியரின் பாசமிகு புதல்வனும், சிவசுப்பிரமணியம் கண்ணகியம்மாள் தம்பதியரின் மருமகனும், சிவசோதி ((குஞ்சு) அவர்களின் கணவரும், ஜோதிநாத், கோபிநாத், தமிழ்நாத், நிகுஜனநாத், தமிழினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்சினி, க்மல்ராஜ் ஆகியோரின் மாமனாரும், ஆத்மிகனின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை உடுவிலிலுள்ள இல்லத்தில் பிற்பகல் 1 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**APC ஒழுங்கை, உடுவில்,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 9453 706**
**076 618 3016**
(CS 25338) A-1

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை தில்லைநாதன்

**(ஓய்வுபெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர்-**
**நீர்ப்பாசன திணைக்களம், யாழ்ப்பாணம்.)**

காரைநகர் பயிரிக்கூடலை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை தில்லைநாதன் கடந்த (23.06.2023) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் இராசம்மா தம்பதியரின் மருமகனும், அமரர் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், தர்மையா நாகேஸ்வரியின் அன்புச் சகோதரனும், கருணாகரன், மோகனன், நவநீதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனலட்சுமி, சங்கீதா ஆகியோரின் மாமனாரும், கீர்த்தனா, லேகா, ஜஸ்மிகா, தனிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 7.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**55/16, கல்லூரி வீதி,**
**(இலங்கைவேந்தன் மண்டபத்திற்கு அருகில்)**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**074 257 3289**
(CS 25339) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

யாழ் நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு உத்தியோகத்தர் தேவை.

- வயதெல்லை - 19 - 50 (ஆண்/ பெண்)
- கல்வித் தகைமை - O/L கணிதபாடம் உட்பட 6 பாடம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- மாத சம்பளம், ஊக்குவிப்புத் தொகை மற்றும் வாகன வசதி, வெளிநாட்டு சுற்றுலா வசதி பெறும் வாய்ப்பு.

சுயவிபரக் கோவையை கீழ்வரும் முகவரிக்கு 03.07.2023 இற்குள் அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம்:- JF1045
C/O உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(CS/50970) AH-1



## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பாண்டியன் தாழ்வு ஒரு பரப்புக் காணியில் வீடு.
3 rooms, 2 baths, Kitchen, hall, கிணறு, parking, garden (clear deed, urgend sale) விற்பனைக்கு.

**074 191 5680**


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
03 - 10 - 1927

மறைவு
26 - 05 - 2023

கடந்த (26.05.2023) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

## வேலுப்பிள்ளை இராசம்மா

**திதி: வளர் பிறை ஸப்தமி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் (23.06.2023) வெள்ளிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை **முற்பகல் 11.30 மணியளவில்** எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அனிஞ்சிலடி, அளவெட்டி.
**076 359 7979**

**குடும்பத்தினர்.**

(cs.50958) (N-1)

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
15 . 02 . 1952

இறப்பு
18 . 06 . 2023

எமது சம்மந்தியான

## திருமதி மஞ்சுளா ஜெயராசா

அவர்கள் கடந்த (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவர்களின் துயரில் நாங்களும் பங்கெடுப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**337, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.**

**செல்வஞானம்
குடும்பத்தினர்**

(cs 50981) (N-1)

# மரண அறிவித்தல்



தோற்றம்
06 . 08 . 1934

மறைவு
23 . 06 . 2023

## திருமதி கணேசு முத்தாச்சி

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசு முத்தாச்சி நேற்றுமுன்தினம் (23.06.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் - நாகாத்தை தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கந்தையா - ராமாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முத்துக்குமாரு மற்றும் அன்னம்மா, பார்பதி பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரன், மனோகரன், சர்வேஸ்வரன், காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் ஜெயமதி, ஜெயதீஸ்வரன், ஜெயலீலா ஆகியோரின் அன்புத் தாயாரும், சசிபா, கமலாதேவி, சிவரூபி, சந்திரபாலா (ஓய்வுநிலை அஞ்சலர்), ரமேஷ், சுகந்தினி, மோகனராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரி, அஜந்தன், பிரதீப் அபிராமி, லோஜிதா, லாவண்யா, சங்கீர்த்தனன், கிரிசாந், பிரியந்தா நகுலசிறி, சோபியா ரமேஷ், தனுசன், மிதுசன், சாருசன், பிரகர்ஷிகா, வாகீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், சகானா, பிரதாபன், றோகித், சுயித், றிசிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சரவணை புன்னம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:
குடும்பத்தினர்.**

(CS/50994)AH-1

# மரண அறிவித்தல்



தோற்றம்
20 . 07 . 1952

மறைவு
24 . 06 . 2023

## திருமதி கணேசமூர்த்தி இராசலட்சுமி

கேணியடி லேன், அரசடி கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசமூர்த்தி இராசலட்சுமி நேற்று (24.06.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மருமகளும், கணேசமூர்த்தியின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்றவர்களான நடராசா, பாலசுப்பிரமணியம், தியாகலிங்கம் மற்றும் இந்திரலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கணேசலிங்கம், சிவலிங்கம், காலஞ்சென்ற இராசலட்சுமி மற்றும் சொர்ணகாந்தி, ஜெயலட்சுமி, காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் திலகவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்ற பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கேணியடி[illegible]ம் ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

(CS/50998)AH-1

**தகவல்:
குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# மனிதப்புதைகுழிகளின் தரவு கோத்தாபயவால் அழிப்பு!

## ஊடகவியலாளர்கள் அமைப்புகள் தகவல்

**கொழும்பு, ஜூன் 25**

**இலங்கையின் பாதுகாப்புச்செயலராக இருந்த காலப்பகுதியில் மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளைத் தடுக்கும் வகையில் பொலிஸ் பதிவுகளைச் சிதைத்தார் என முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் மற்றும் காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கான ஊடகவியலாளர்கள் அமைப்புகள் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

கடந்த 2013 ஆம் ஆண்டு இலங்கையின் மத்திய மாகாணமான மாத்தளை மாவட்டத்தில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

பின்னர் அந்தப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்களி லுள்ள ஐந்தாண்டுகளுக்கு மேலான பொலிஸ் பதிவுகள் மாயமாகியுள்ளன. அந்தப் பதிவுகளை அப்போதைய பாதுகாப்பு செயலராக இருந்த கோத்தாபய ராஜபக்சவே அழிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களாக சுமார் 20 பெரிய புதைகுழிகளைத் தோண்டியதில் நூற்றுக்கணக்கான எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் அதுகுறித்து எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டபோது, நீதிபதிகள் மற்றும் தடயவியல் நிபுணர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டனர். பிரேதப் பரிசோதனைத் தரவுகள் சேகரிக்கப்படவில்லை. உயிருள்ள சாட்சிகளைக் கண்டுபிடிக்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. உண்மையை வெளிக்கொணரும் முயற்சிகள் தடைப்பட்டன.

மனிதப் புதைகுழிகளைத் தோண்டியெடுப்பதில் உள்ள தாமதத்தில் ராஜபக்சவின் பங்கு அரசியல் தலையீட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

மனிதப் புதைகுழி தொடர்பான தரவுகளை அழித்தமை உள்ளடங்கலாக விசாரணைகளுக்குத் தடைஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

# பிரபாகரன் விடயத்தில் அரசாங்கம் பித்தலாட்டம்



## சிவாஜி காட்டம்

கொழும்பு, ஜூன் 25

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு என்ன நடந்தது? என்ற விடயத்தை அரசாங்கம் நாட்டின் தேசியப் பாதுகாப்பு என்ற போர்வையில் மூடி மறைத்து முழுப்பொய்களைச் சொல்லி வருகின்றது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனது மரபணுச் சோதனை அறிக்கையை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக ஊடகவியலாளர்கள் கோரியுள்ள நிலையில் தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி இராணுவம், பாதுகாப்பு அமைச்சு என்பன அதனை மறுத்துள்ளன. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2009 ஆம் ஆண்டு இலங்கையில் மரபணுப்பரிசோதனை செய்து கொள்வதற்கான வசதிகள் இருந்திருக்கவில்லை. இந்தியாவிலும், சிங்கப்பூரிலும் அந்த வசதி இருந்ததாக நாங்கள் அறிந்து கொண்டோம். போர் முடிந்து ஓரிரு நாள்களில் பிரபாகரனின் உடலை மரபணுப்பரிசோதனை செய்ததாகப் பொய்யான தகவலை அரசாங்கம் வெளியிட்டிருந்தது.

பிரபாகரனின் மாதிரிகளை நாங்கள் எடுத்து வைத்திருந்தோம். அதை அவருடைய தந்தை அல்லது தாயாரின் மாதிரிகளுடன் ஒப்பிட்டு உறுதிப்படுத்தினோம் என்று சொல்வதற்கும் தேசியப் பாதுகாப்புக்கு குந்தகம் என்பதற்கும் என்ன தொடர்பு உள்ளது?

அரசாங்கம் பச்சைப் பொய்யைச் சொல்லுகின்றது. ஒரு உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தப்பட வேண்டும் என்றால், சட்டமருத்துவ அதிகாரி முன்னால்தான் நடத்தப்படவேண்டும். ஆனால் அவ்வாறான ஒன்று நடந்ததாக அரசாங்கம் இதுவரை கூறவில்லை.

அதைவிட ஒரு நீதிபதி முன்னால்தான் இறப்பு விசாரணை நடைபெறவேண்டும். நீதிபதிதான் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்துவதற்கான உத்தரவை வழங்கவேண்டும். அவ்வாறான எதுவும் இங்கு நடக்கவில்லை. கருணாவையும், தயா மாஸ்டரையும் கொண்டு சென்று காட்டியவர்களுக்கு, நீதிபதியையும், சட்ட மருத்துவ அதிகாரியையும், உலங்குவானூர்தி மூலம் அழைத்துச் செல்வதற்கு என்ன தடை இருந்தது? - என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ஒ-இ)

### அதிகரித்த வரி அறவீடு

# கிளிநொச்சி பொதுச்சந்தை வியாபாரிகள் போர்க்கொடி

கிளிநொச்சி, ஜூன் 25

கரைச்சி பிரதேசசபையால் அதிகரித்த வரி அறவீடு மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி பொதுச்சந்தை வியாபாரிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

ஆயிரத்து 500 ரூபா வரி ஒவ்வொரு வியாபாரியிடமும் மாதாந்தம் அறவிடப்பட்டு வந்தது. கடந்த மே மாதம் தொடக்கம் 7ஆயிரத்து 500 ரூபா வரியாகவும் 600 ரூபா கழிவகற்றலுக்கும் என 8ஆயிரத்து 100 ரூபா அறவிடுவதற்கு கரைச்சி பிரதேசசபை தீர்மானித்து அறவிட்டு வருகின்றது. தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் இது எமது வயிற்றிலடிக்கும் செயலாகும்- என்றனர்.

இதுதொடர்பில் கரைச்சிப் பிரதேசசபையினரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது.



2021 ஆம் ஆண்டு கரைச்சிப் பிரதேசசயைால் விலை மதிப்பீட்டுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டமைக்கு அமைவாகவே விலை மதிப்பீடு செய்யப்பட்டு அதிகரித்த வரி அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனை மேற்கொள்ளாதுவிடின் கணக்காய்வு விசாரணைகளுக்கு உள்ளாக வேண்டும்- என்றனர். (ச-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றத் தீர்ப்பையும் மதிக்காத பௌத்த மேலாதிக்கச் சிந்தனை

## வினோ எம்.பி. சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜூன் 25**

**முல்லைத்தீவு குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிமன்றத்தின் தீர்ப்பையும் உதாசீனம் செய்யுமளவுக்கு பௌத்த மேலாதிக்கச் சிந்தனை மேலோங்கியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில்கடந்த வியாழக்கிழமை உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமை கூட்டத்தொடரில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை விடயத்தில் தொடர்ந்தும் இலங்கை ஏமாற்றுமாக இருந்தால் அந்தப் பொறிக்குள் இந்த அரசாங்கம் அகப்படுவதைத் தடுக்கமுடியாது என்பதனையும் பிரதி ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். இதனை நாம் வரவேற்கின்றோம். ஆனால், ஜனாதிபதியும், ஜெனிவாவில் உள்ள இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியும் பொய்களையே கூறுகின்றனர்.

மேலும், வன்னி மாவட்டத்தில் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுமாக இருந்தால், இது சிங்களவர்களுக்கு உரியது பௌத்த பூமி, தொல்பொருள் திணைக்களம் பௌத்தத்துக்கு மட்டுமேயானது என்பதனை நிறுவுவதற்காகத் திட்டமிடும்போது மிகப்பெரிய இன முரண்பாட்டை வளர்ப்பதற்கு வழியேற்படுத்தப்படுகின்றது என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றேன்.

நாங்கள் நீதிமன்றத்தை நம்புகின்றோம், அதனை நாடியுள்ளோம். ஆனால் நீதிமன்ற உத்தரவுகளுக்கு மாறாக பௌத்த மேலாதிக்கம் உயர்ந்து நிற்பதனால் நீதிமன்றங்கள் தேவையா? அதனூடாக நீதி கிடைக்குமா? என்ற கேள்வி உள்ளது - என்றார். (ஒ-இ)

# புலி அனுதாபிக்கே ரெலிக்கொம் விற்பனை

## சரத்பொன்சேகா கருத்துரைப்பு



கொழும்பு, ஜூன் 25

விடுதலைப்புலிகள் அமைப்புடன் நிதி கொடுக்கல் - வாங்கல் செய்த நபருக்கு ரெலிக்கொம் நிறுவனத்தை வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். அதற்கான பேச்சுக்களை லண்டனில் ஆரம்பித்துள்ளார் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்கள் உணவைப் பெற்றுக் கொள்ளப் போராடுகின்ற நிலையில் பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீண்டு விட்டோம் என கனவுலகில் ஜனாதிபதி கருத்துரைக்கிறார். பாரம்பரிய அரசியல் முறைமையிலிருந்து விலகி தேசிய வளங்களை தனியார்மயப்படுத்தவேண்டும் என அவர் குறிப்பிடுகிறார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஹிட்லரை போல் செயற்பட முயற்சிப்பது கவலைக்குரியது. தனது குறுகிய அரசியல் நோக்கத்துக்காக தொல்பொருள் மரபுரிமைகளில் கை வைக்கிறார். இது தவறு. இதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடின் மிகப்பெரிய விளைவுகள் ஏற்படும் - என்றார். (ஒ-இ)

# நாய்களுக்கான விசர்நோய்த் தடுப்பூசி



யாழ்ப்பாணம், ஜூன் 25

நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான இலவச விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு சுகாதார மருத்துவ பணிமனையால் மேற்கொள்ளப் படவுள்ளது. ஒரு நாய்க்கான உரிமக் கட்டணமாக ரூபா 50 அறவிடப்படும்.

இந்தத் தகவலை பொதுமக்கள் ஏற்றுக்கொள்வதுடன் தமது நாய்களுக்கான தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர். கீழ்க் குறிப்பிடப்படும் நாள்களில் குறிப்பிட்ட இடங்களில் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

| | |
|---|---|
| 26.06.2023 - திங்கட்கிழமை | |
| மு.ப. 9 - 11 | மூத்தவிநாயகர் சனசமூக நிலையம் |
| மு.ப. 11 - 1 | ஆசீர்வாதப்பர் வீதி சுகாதாரக் கல்வி மையம் |
| பி.ப. 2.30 - 4 | நாயன்மார் வீதி சுகாதாரக் கல்வி மையம் |
| 27.06.2023 - செவ்வாய்க்கிழமை | |
| மு.ப. 9 - 11 | யாக்கோவா பாலர் படசாலை |
| மு.ப. 11 - 1 | வெயிலுகந்த பிள்ளையார் கோவில் செம்மண் வீதி |
| பி.ப. 2.30 - 4 | கடுக்காய் வீதி |
| 28.06.2023 - புதன்கிழமை | |
| மு.ப. 9 - 11 | நாவலர் வீதி, ஆனைப்பந்தி |
| மு.ப. 11 - 1 | பருத்தித்துறை வீதி உயர்கல்லூரி |
| பி.ப. 2.30 - 4 | அரசடி ஜனசக்தி சனசமூக நிலையம் |
| 30.06.2023 - வெள்ளிக்கிழமை | |
| மு.ப. 9 - 11 | பழம் வீதி ஞானசோதி சனசமூக நிலையம் |
| மு.ப. 11 - 1 | சிவன் புது வீதி |
| பி.ப. 2.30- 4 | மணல்தரை ஒழுங்கை |
| 04.07.2023 - செவ்வாய்க்கிழமை | |
| மு.ப. 9 - 11 | ஜமுனா வீதி கல்வி நிலைய மையம் |
| மு.ப. 11 - 1 | சங்கிலியன்மன்றம் பருத்தித்துறை |
| பி.ப. 2.30 - 4 | செட்டியார் தோட்டம் |
| 05.07.2023 - புதன்கிழமை | |
| மு.ப. 9 - 11 | வைமன் வீதி எடிசன் அக்கடமி அருகாமை |
| மு.ப. 11 - 1 | அம்மன் வீதி |
| பி.ப. 2.30 - 4 | முத்தமிழ்முன்பள்ளி ஆடியபாதம் வீதி |
| 06.07.2023 - வியாழக்கிழமை | |
| மு.ப 9 - 11 | சங்கிலியன் வீதி |
| மு.ப 11 - 1 | கொண்டலடிச்சந்தி |
| பி.ப 2.30 - 4 | கோவில் வீதி பண்டாரக்குளம் |
| 07.07.2023 - வெள்ளிக்கிழமை | |
| மு.ப 9 - 11 | செட்டித்தெரு நல்லூர் முருகன் சனசமூக நிலையம் |
| மு.ப 11 - 1 | நல்லூர் குறுக்குத்தெருச்சந்தி |
| பி.ப 2.30 - 4 | கைலாயப்பிள்ளையார் கோவிலடி, கோயில் வீதி |
| 10.07.2023 - திங்கட்கிழமை | |
| மு.ப 9 - 11 | துர்க்கா மணிமண்டபத்தடி, கோயில் வீதி |
| மு.ப 11 - 1 | பண்டாரக்குளம், இந்துமாமன்றம் |
| பி.ப 2.30 - 4 | கொண்டலடி குமார வீதி |

# வியாபாரம் செய்யவிடாது

## அச்சுறுத்திய ஈ.பி.டி.பி. உறுப்பினர்

## முதியவர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 25

வர்த்தகர் ஒருவரின் வியாபார நடவடிக்கைக்கு இடையூறு செய்து, "கடையை நடத்தவிடாது தூக்குவேன்" எனக் கூறி அச்சுறுத்திய ஈ.பி.டி.பி. உறுப்பினரொருவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் வல்வெட்டித்துறைப் பகுதியிலுள்ள முதியவர் ஒருவரின் வர்த்தக நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கடையில் சிகரெட் வாங்கிய ஈ.பி.டி.பி.யின் கரவெட்டிப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர், கடையின் பின்பக்கம் புகைக்க முயன்றுள்ளார். அதற்கு கடை உரிமையாளரான முதியவர் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது ஈ.பி.டி.பி. உறுப்பினர் தலைக்கவசத்தால் தன்னைத் தாக்க முயன்றதாகவும் வர்த்தக நடவடிக்கையை செய்யவிடாமல் 'தூக்குவேன்' என மிரட்டியதாகவும் முதியவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டுக்கமைய விசாரணை மேற்கொண்ட பொலிஸார், இரு தரப்பினரையும் சமரசம் செய்து ஈ.பி.டி.பி. உறுப்பினரை பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர். (ச-இ)

# வீரை மரக்குற்றி கடத்தல் இருவருக்குத் தண்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 25

விசுவமடு காட்டுப்பகுதியில் சட்டவிரோதமாக வீரைமரக்குற்றிகளுடன் கைதுசெய்யப்பட்ட இருவருக்கு நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

மட்டுவில் ஏ-9 பிரதான வீதியில் கடந்த திங்கட்கிழமை புலனாய்வுத் தகவலுக்கமைய யாழ். மாவட்ட வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினரால் இந்தக் கைது இடம்பெற்றது. 29 மற்றும் 30 வயதான சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டநிலையில் அவர்களுக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நீதிமன்று தீர்ப்பளித்தது.

(ச-ரி3-125)

## முல்லை நடமாடும் சேவை

# மோட்டார் போக்குவரத்து உரிமங்கள் ஒரேநாளில்

முல்லைத்தீவு, ஜூன் 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனாதிபதி செயலகம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் இணைந்து ஜூலை மாத முதல்வாரத்தில் நடத்தும் நடமாடும் சேவையில், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் அனைத்துச் சேவைகளையும் ஒரேநாளில் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவைக்கு பிரதம விருந்தினராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார்.

அதற்கமைய இந்த நடமாடும் சேவையில் இதுவரை விண்ணப்பித்தும் வாகனப் புத்தகங்களைப் பெறாதவர்கள் மற்றும் வாகன உரிமம் மாற்றுவோர் அருகிலுள்ள பிரதேச செயலகங்களில் விண்ணப்பங்களைக் கொடுத்து, நடமாடும் சேவை நடைபெறும் தினத்தில் தங்கள் பதிவுப் புத்தகங்களை உடன் பெறலாம்.

அத்துடன் முல்லைத்தீவில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள், அங்கங்களை இழந்தோர், விசேட தேவையுடையோரும் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு நடமாடும் சேவையில் சிறப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எழுத்தறிவற்றவர்களும் வாகன அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்காக வாய்மொழிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது எனவும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது. (ச-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது ரணில் விக்கிரமசிங்கவே பொதுவேட்பாளராகக் களமிறங்கவுள்ளார். பொதுஜன பெரமுனவில் உள்ளவர்களில் 90 வீத மானவர்கள் ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராகக் களமிறங்குவதையே விரும்புகின்றனர். ராஜபக்சக்களில் எவரும் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ வருவதை மக்கள் விரும்பமாட்டார்கள். கடந்த வருடம் இடம்பெற்ற சம்பவங்களை எவரும் மறக்காமல் இருந்தால்நல்லது. ரணில்விக்கிரமசிங்கவைப் பலப்படுத்த அனைவரும் கட்சி வேறுபாடின்றி இணையவேண்டும் - என்றார்.

(அ-ம-22)

## சிங்கள...

தமிழ் மக்களின் உரிமைப் பயணத்தில் பலமான குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் குரலை நசுக்கும் விதமாக பெரும்பான்மையின மாணவர்கள் திட்டமிட்ட வகையில் உள்நுழைக்கப்பட்டு வருகின்றார்கள் - இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் துணைவேந்தர், துறைத்தலைவர்கள், பீடாதிபதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் இராணுவப் பங்கேற்புடன் வெசாக் கொண்டாடப்பட்டமை தொடர்பான விமர்சனங்கள் எழுந்துள்ளதன் பின்னணியில் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்களின் கூட்டு உணர்வுகளோடு தொடர்புடைய தினங்களில் களியாட்டங்கள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவதையும் அவற்றை முன்னெடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வதையும் தவிர்க்குமாறும், அன்றைய தினங்களில் பல்கலைக்கழக நாள்காட்டியில் நிகழ்வுகள் இடம்பெறாமையை உறுதி செய்யுமாறும் வேண்டிக் கொள்கிறோம். அண்மையில் கூட தமிழ் மக்களின் உணர்வுகளைப் உதாசீனப்படுத்தி அவமதிக்கும் விதத்தில் நிகழ்வொன்று இராணுவப் பிரசன்னத்தோடு இடம்பெற்றிருந்தது. அது தமிழ் மக்களின் ஆறாத மனங்களை மேலும் புண்படுத்தியிருந்ததோடு, விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திட்டமிட்டு இடம்பெறும் மறைமுகமான சிங்களமயமாக்க முயற்சிகளால் தமிழ் மாணவர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாமையை உறுதி செய்யுமாறு வேண்டுகின்றோம்.

'பல்கலைக்கழக நுழைவு' என்னும் எந்தப் புள்ளியில் இனப்பிரச்சினை ஆரம்பமாகியதோ அதே புள்ளியில் மீண்டும் வந்து நிற்கின்றோமா? என்று எண்ணத் தோன்றுகின்றது. தமிழ் மக்களின் உரிமைப் பயணத்தில் பலமான குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் குரலை நசுக்கும் விதமாக பெரும்பான்மையின மாணவர்கள் திட்டமிட்ட வகையில் உள்நுழைக்கப்பட்டு வருகின்றார்கள் என்பது யாவரும் அறிந்ததே. இவ்வாறானதொரு சூழலில் அவர்கள் பெரும்பான்மையினைக் கைப்பற்றுவதன் ஊடாக தமிழ் மாணவர்களுக்குரிய தலைமைத்துவ வாய்ப்புக்கள் யாவும் ஜனநாயகம் என்ற போர்வையில் பறிக்கப்படுவதற்கான சூழல் எழுந்துள்ளது. இதனால் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்களுக்கென்றிருக்கும் இறுதியான ஒரேயொரு வாய்ப்பாக விருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இழக்கப்படும் சூழல் திட்டமிட்டு உருவாக்கப்பட்டு வருகின்றது. தாயகத்தில் இடம்பெறும் பௌத்த - சிங்களமயமாக்கலுக்கு எதிராக யாழ். பல்கலைச் சமூகம் போராடி வருகையில், எமது விரிவுரையாளர்களே பல்கலையினுள் சிங்கள மயமாக்கலை முன்னெடுக்கும் சூழல் உருவாகுமேயானால் அது ஒரு முரணான செயலாகும்.

'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலேயே எமக்கு அநீதி இழைக்கப்படுகிறது. எவரேனும் நீதி தாருங்கள்' என்னும் கையறு நிலைக்கு எமது தமிழ் மாணவர்களை தள்ளிவிடவேண்டாம் என்றும், இவை பொதுவெளியில் மக்கள் மன்றத்துக்குச் செல்ல முன்னர் அவ்வாறான தமிழர் விரோத முயற்சிகளைத் தடுத்து நிறுத்துமாறும் வேண்டிக் கொள்கிறோம் - என்றுள்ளது.

(அ-ஒ-5,125)

## மின்சாரம்...

இளவாலைப் பகுதியைச் சேர்ந்த செந்தில்நாதன் செந்தமிழ்ச்செல்வி (வயது -60) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டில் எவரும் இல்லாத நிலையிலேயே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. இறந்தவரின் மகன் வீட்டுக்கு வந்து பார்த்தபோது மின்மோட்டர் ஆளிக்கு (சுவிட்ச்) அருகில் தாய் வீழ்ந்து கிடப்பதை அவதானித்துள்ளார். இதையடுத்து சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.(அ-ம-125,27)

## யாழ்....

முஸ்லிம் மாணவர்களும் கல்வி பயில்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த ஆண்டு இறுதி வரையிலான தரவுகளின் அடிப்படையில் 11 ஆயிரத்து 73 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர் என்று பல்கலைக்கழக புள்ளிவிவரக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயபீடம், பொறியியல்பீடம், விஞ்ஞானபீடம், தொழில்நுட்பபீடம் என்பனவற்றிலேயே தமிழ் மாணவர்களை விட சிங்கள மாணவர்கள் அதிகம் கல்வி பயில்கின்றனர் என்று புள்ளிவிவரக் கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ,5,125)

## ரஷ்யாவில்...

இணைந்து செயற்பட்டு வருகின்றன. உக்ரைன் போரில் 'வாக்நெர்' என்று அறியப்படும் கூலிப்படையின் செயற்பாடு ரஷ்யாவின் ஆரம்பநாள் எழுச்சியில் பெரும் பங்காற்றியது. அதன் பின்னரும் வாக்நெர் படைகள் ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து உக்ரைனை எதிர்த்து வந்தன. எனினும், கடந்த சில வாரங்களாக ரஷ்யு இராணுவத்துக்கும் வாக்நெர் படைக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டது. ரஷ்ய இராணுவ அமைச்சரை பதவி விலகுமாறு அல்லது விலக்குமாறு வாக்நெர் படை கேட்டுக்கொண்டது. இதை அதிபர் புடின் திட்டவட்டமாக மறுத்தார். இந்த நிலையிலேயே 'ரஷ்ய இராணுவத்தின் உயர் பதவியை அகற்றுவதற்கான மறுசீரமைப்பு' என்ற பெயரில் கலவரமொன்றை வாக்நெர் படை நேற்றுமுன்தினம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) எவரும் எதிர்பாராத வகையில் ஆரம்பித்துள்ளது.

### மொஸ்கோவே இலக்கு

வாக்நெர் படைகள் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவை நோக்கி நேற்று விரைவாக முன்னேறிக் கொண்டிருந்தன. இதற்கெதிராக ரஷ்யப் படைகள் கடும் வான்வெளித் தாக்குதல்களை நடத்தின. மக்கள் வாழும் பகுதிகளால் ஊடுருவியபடி வாக்நெர் படைகள் முன்னேறுவதால் எதிர்த்தாக்குதலை நடத்துவதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக ரஷ்ய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அருங்காட்சியகங்கள், மருத்துவமனைகள் போன்ற பொதுக்கட்டடங்களில் இருந்து மக்கள் ரஷ்ய அரசாங்கத்தால் வெளியேற்றப்பட்டனர். தலைநகர் மொஸ்கோ நேற்று வெறிச்சோடியிருந்தது.

### புடின் ஆவேசம்

வாக்நெர்படைகளின் இந்தக்கிளர்ச்சியை, 'வரலாற்றின் பெரும் துரோகம்' என்று அறிவித்துள்ளார் ரஷ்ய அதிபர் புடின். 'கூலிப்படைத் தலைவர் எவ்ஜெனி பிரிகோசின் அறிவித்திருக்கும் ஆயுதமேந்திய கிளர்ச்சியிலிருந்து நாட்டையும் எம் மக்களையும் பாதுகாப்போம். இந்தக் கலகம் எங்களுக்கு ஒரு கொடிய அச்சுறுத்தல். இதற்கு பதிலளிக்கும் விதமாக கடினமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். கிளர்ச்சிக்குக் காரணமானவர்கள் அனைவரும் தவிர்க்க முடியாத தண்டனையை அனுபவிப்பார்கள். ஆயுதப்படைகள் மற்றும் பிற அரசு நிறுவனங்களுக்கு தேவையானஉத்தரவுகள்கிடைத்துள்ளன. மேற்கத்திய நாடுகளின் முழு இராணுவ, பொருளாதார மற்றும் தகவல் இயந்திரம் ரஷ்யாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தப் போரில் எமது மக்களின் தலைவிதி தீர்மானிக்கப்படும்போது, அனைத்து சக்திகளின் ஒருங்கிணைப்பு, ஒற்றுமை, பொறுப்பு ஆகியவை தேவை. ரஷ்யா - உக்ரைனில் தன் எதிர்காலத்துக்கான மிகக் கடினமான போரில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் கிளர்ச்சி என்பது கண்டிக்கத்தக்கதாகும். இதுபோன்ற நேரத்தில் ஆயுதமேந்திய கிளர்ச்சி என்பது ரஷ்யாவுக்கும், அதன் மக்களுக்கும் ஒரு அடி. ஒரு ஆயுதமேந்திய கிளர்ச்சிக்கு சதி செய்து ஏற்பாடு செய்தவர்கள், தனது தோழர்களுக்கு எதிராக ஆயுதங்களை உயர்த்தியவர்கள், ரஷ்யாவைக் காட்டிக் கொடுத்துள்ளனர். அதற்கு அவர்கள் பதிலளிக்கவேண்டியிருக்கும்' என்று தெரிவித்துள்ளார்.



### தாக்குதலை பலமடங்காக அதிகரித்தது உக்ரைன்

ரஷ்யாவுக்குள் கலவரம் வெடித்துள்ள நிலையில், ரஷ்யப் பிடிக்குள் சென்ற தனது நகரங்கள்ள மீட்கும் போரில் உக்ரைன் தீவிரம் காட்டியுள்ளது. ரஷ்யாவுக்கு எதிராக 'பலமுனைத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன' என்று உக்ரைன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை - இலங்கை நேரப்படி நள்ளிரவு ஒரு மணியளவில் ரஷ்ய படைகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையைக் கைவிட்டதாகவும் ரஷ்ய இரத்தம் சிந்தப்படுவதை தாம் விரும்பவில்லை என்றும் வாக்நெர் படை அறிவித்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. எனினும் இது தொடர்பில் எந்த உறுதிப்படுத்தல்களையும் மொஸ்கோ மேற்கொள்ளவில்லை.

(அ-ம)

## மருதமடு...

குருமுதல்வர் அருட்பணி பி.கிறிஸ்து நாயகம், மடுப்பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார் ஆகியோரும் பெருந்திரளான மக்களும் கொடியேற்றத்தில் கலந்துகொண்டனர். ஒன்பது தினங்கள் பிற்பகலில் திருப்பலிகள் நடைபெற்று, தொடர்ந்து ஆடி மாதம் இரண்டாம் திகதி திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

(அ-ம-60)



## விபத்தில்...

உயிரிழந்தார். மன்னாரைச் சேர்ந்த மைக்கல் ஜெயரூபன் (வயது-49) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மன்னாரில் நேற்றுமுன்தினம் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்ட விபத்தில் காயமடைந்த அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். இந்த நிலையில் சிகிச்சை பயனின்றி அவர் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

(அ-ம-26)

**வீடு, காணி விற்பனைக்கு உண்டு**

கோப்பாய் இராச வீதிக்கு அண்மையில் புதிய வீடும், 3 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. மற்றும் பலாலி றோட், ஊரெழு அம்மன் கோயில் (திலீபன்) வீதிக்கு அண்மையில் 28 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
**077 1933 490**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லையில்...

வல்லை தொண்டைமானாறு வீதியின் அருகேயுள்ள வெற்றுக்காணியொன்றில் கடந்த 22ஆம் திகதி உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அது, அச்சுவேலியைச் சேர்ந்த 22 வயதான இளைஞனின் சடலமாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். மேற்படி இளைஞன் உயிர்கொல்லி போதைப் பொருளுக்கு அடிமையான நிலையில் ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார். விடுதலையான அவர் தனது நண்பர்கள் 4 பேருடன், வல்லை வெளியிலுள்ள ஆள்கள் நடமாட்டம் அற்ற கட்டடத்தில் ஊசி மூலம் உயிர்கொல்லி போதைப் பொருளை ஏற்றிய நிலையில் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அவருடன் கூடச் சென்ற நண்பர்கள் அங்கிருந்து தப்பியோடியிருக்க வேண்டும். அவர்களைத் தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ-ஓ,5)

### தேவை

யாழ் நகரில் வீட்டில் தங்கியிருந்து பணியாற்ற (பொய், களவு இல்லாத) பணிப்பெண் தேவை.

076 666 2312
077 360 4023

### ENGLISH CLASSES

SPOKEN ENGLISH WITH GRAMMAR
யாழ் நகரில் தனி வகுப்பு
G.C.E O/L, A/L, பட்டதாரிகள்
தொழில்புரிபவர் ஆர்வமுள்ளவர்களுக்கு

K.Ganesh B.A 077 766 8725

### மணமகள் தேவை

லண்டனை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர். 42 வயதுக்கு மேற்பட்ட பெண்ணை எதிர்பார்க்கின்றார்.
குறிப்பு:- ஆங்கில அறிவு இருப்பின் பயணத்தை இலகுபடுத்தும்.

Viber, Whatsapp:
0044 79052 95289

(22386)AH-1

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி மருத்துவபீட பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

077 209 8826

(CS/50976)AH-1

### வீட்டுப்பணிப்பெண் தேவை

நல்லூர் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு ஞாயிற்றுக்கிழமை மட்டும் வீட்டுப் பணிப்பெண் தேவை.

077 656 4346

(CS/25329)AH-1

### வீடு விற்பனைக்கு

இருபாலை, டச்சு றோட்டில், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அண்மையில் 4 பரப்புடன் கூடிய சுற்றுமதிலுள்ள 4 அறைகள் மற்றும் இரண்டு வரவேற்பு அறையுடன் இணைந்த குளியலறையோடு இருமலசல கூட வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை

(CS/50983)AH-1

077 740 5308, 077 740 5349

### வாடகைக்குத் தேவை

கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் காங்கேசன்துறை வீதிக்கு அண்மையாக அலுவலக இடம் வாடகைக்குத் தேவை.

077 316 3530

(CS/25317)AH-1

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1983 பிறந்த சூரியன் செவ்வாய் இரண்டில், கிரகபாவம் 28. அரச தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

076 677 9813
077 335 9012

### வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு Front Office Manager வேலைக்கு ஆட்கள் தேவை. மும்மொழிகளிலும் சரளமாக உரையாடக் கூடியவராக இருக்க வேண்டும். ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். வேலை முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

077 179 3388

(CS/25323)AH-1

அரியாலை, நீர்நொச்சிதாழ்வு
ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

### மடைப்பள்ளி வேலைக்கு ஆள் தேவை

எமது தேவஸ்தானத்திற்கு மடைப்பள்ளி வேலைக்கு அந்தணர்குலத்தைச் சார்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: 077 154 7044 நிர்வாக சபை
(மாலை: 5.00 மணிக்கு பின் தொடர்புகொள்ளவும்)

(cs.50969) (N-1)

### உடனடி வேலைவாய்ப்புகள்

- **Accounts Clerk** 3 வருட அனுபவமுள்ள பெண் ஊழியர் தேவை.
- **Typesetter** (தமிழ், ஆங்கிலம்) 3 வருட அனுபவமுள்ள ஆண்/ பெண்.
- **Sales & Marketing** முன்னனுபவமுள்ள ஆண் ஊழியர் தேவை.

K.V. Printers Books Distributing Centre
386, Clock tower road, Jaffna.
075 878 2924, 021 720 0237, 077 878 2924

(CS/25326)AH-1

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.
* ஒரு பரப்பின் விலை 200,000/= ( இரண்டு லட்சம்) மட்டும்.

தொடர்பு: 076 733 6047, 076 7558 606
076 9119 371

### வேலைவாய்ப்பு

Petform (Pvt) Ltd யாழ்ப்பாணக் கிளைக்கு **Sales Assistant** பதவிக்கு ஆள் தேவை.


- ✓ வயதெல்லை - 20 - 30 வருடங்கள் (ஆண்கள்)
- ✓ இரண்டு வருட முன்னனுபவம்
- ✓ வாகன அனுமதிப்பத்திரம் உடையவராய் இருத்தல்.
- ✓ உயர்தரத்தில் வணிகத்துறை படித்திருத்தல்.
- ✓ அடிப்படைச் சம்பளத்துடன் கொமிசன் வழங்கப்படும்.

076 072 1245, 021 223 2721

(CS/50821)AH-1

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
22 . 03 . 1945



விண்ணில்
06 . 07 . 2022

### திரு. சுப்பிரமணியம் கணேஷநாதன்

திதி: ஆனி பூர்வபக்க ஸப்தமி (25.06.2023)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
கடந்தாலும் தங்களின் வழிகாட்டுதலும்
நினைவுகளும் எப்பொழுதும் எங்களுடன்....

உங்கள் நினைவுகளுடன்....

"கணேஷ வாசா"
தொட்டிலடி, சங்கானை

(CS/509591)AH-1 குடும்பத்தினர்.

### வேலைவாய்ப்பு

- ✓ தமிழ் ஆசிரியர்
- ✓ ஆங்கில ஆசிரியர்
- ✓ சிங்களம் எழுத்துப் பயிற்சி எழுதக் கூடிய ஆசிரியர்
- ✓ கணக்காளர்
- ✓ முன்பள்ளி தொடக்கம் தரம் - 3 வரை கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள்

### Work Opportunity

**English Teachers (1 Year or 2 Year Contract)**
**Salary 20,000/=, 30,000/= Permonth**

நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி :- 27.06.2023 செவ்வாய்க்கிழமை
காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை

நேர்முகத் தேர்வுக்குரிய இடம் :-
Little Masters Montesoori கே.கே.எஸ் றோட், சிவபதி, இணுவில் (இணுவில் மத்திய கல்லூரிக்கு அருகில்)

T.P: 077 377 0524

(CS/25330)AH

### காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் 3/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 758 3208, 077 755 6244

(CS50969)(N-1)

### வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை.
யாழ். நகருக்கு உட்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(CS25331)(J-1) 077 776 3533

### மணமகள் தேவை

கார்த்திகை நட்சத்திரம் (4ம் பாதம்), 1981 இல் பிறந்த லண்டனில் Business செய்கின்ற PR உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.
கல்வித் தகைமை - BSc - Jaffna
MSc - London
விவாகரத்துப் பெற்றவர்.

077 110 7624
Viber, Whatsapp
078 303 5181

(CS/25327)AH-1

### சிறுநீரகம் தேவை

34 வயதுடைய சிறுநீரக நோயாளிக்கு O+ Blood Group வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

074 006 0077

(CS/50947)AH-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.